# திருமறைத்தீபம்

சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்



1834 - 1892

BIBLE LAMP
திருமறைத்தீபம்

Issue No.3 of 2006
ISBN 1173-7255

இக்காலாண்டுப் பத்திரிகை யில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியை யும் எவ்விதத்திலும் பிரசுரிக் கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# அன்புக்குரியவர்களே!

*இந்த இதழில் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட பெரும் பிரசங்கியான ஸ்பர்ஜனைப் பற்றிய வரலாற்றை போதகர் ஜெரமி வோக்கர் (Pastor Jeremy Walker) எழுதியிருக்கிறார். கல்வினிசக் கிருபையின் போதனை களைப் பின்பற்றி சபை வளர்த்த ஸ்பர்ஜன் அவை மட்டுமே போதும் என்று வாளாவிருந்துவிடவில்லை. இங்கிலாந்தில் அக்காலத்தில் பாப்திஸ்து சபைப்பிரிவு (Baptist Denomination) வேத அதிகாரத்தை நிராகரித்து தான் இதுவரை பின்பற்றி வந்த சத்தியங் களுக்கு முரணாக நடந்து கொண்டபோது, அச்சபைப் பிரிவைச் சேர்ந்த எத்தனையோ போதகர்களும், சபைகளும் அதைக் கண்டும் காணாமலும் இருந்த போது, தனியொரு மனிதனாக கர்த்தரின் வார்த்தையின் அதிகாரத்தை வலியுறுத்திப் பேசி, தனது முயற்சிகள் தோல்வியுறும் போல் தோன்றியபோது தனது சபையான மெட்ரொபொலிட்டன் டெபர்னேக்களை (Metropolitan Tarbernacle) பாப்திஸ்து சபைப்பிரிவிலிருந்து உடனடியாக விலக்கிக் கொண்டார் ஸ்பர்ஜன். அது மட்டுமல்லாமல், 1689 விசுவாச அறிக்கையைத் தனது சபை விசுவாசிப்பதாகக் கூறி அதை மீள வெளியிட்டு சத்தியத்துக்குத் தூணாக நின்றார்.*

*சத்தியத்துக்கு எதிரான செயல்களை எவரும் செய்யும் போது அது சபைப்பிரிவாக இருந்தாலும் சரி, பெயர் வாங்கிய பெரிய மனிதர்களாக இருந்தாலும் சரி பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளும் தேவமனிதர்களும், புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் அவர்களை எதிர்த்து நிற்கத் தவறவில்லை. சத்தியத்துக்கு முரணாக நடந்த பேதுருவைப் பவுல் கண்டித்துத் திருத்தினார். உறவு பாதிக்கப்படுமே என்று கண்டுங் காணாமல் இருந்துவிட வில்லை; அப்போஸ்தலர்களுடைய மரியாதை கெட்டு விடுமே என்று அதைக் காப்பாற்றப் பேதுரு செய்ததை நியாயப்படுத்தவில்லை. அதையே ஸ்பர்ஜனும் தன் காலத்தில் செய்தார். போலித்தனம் அதிகரித்து கிறிஸ்துவின் பெயரில் சபை அமைத்து ஆத்மீக வியாபாரம் நடத்தி வருபவர்களுக்கு இன்று சத்தியத்தில் ஆர்வமில்லை; வேதக் கோட்பாடுகளைப் பின்பற்று வதில் அக்கறையில்லை. சீர்திருத்தவாதிகளும், ஸ்பர்ஜனும் பின்பற்றும் சத்தியங்களை விசுவாசிக்கின்ற நாம், அவர்கள் பெயர்களை ஆசையோடு உச்சரித்துப் பயன்படுத்துகிற நாம், கிறிஸ்துவின் மகிமைக்காக அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை மட்டும் எடுக்கத் தயங்கலாமா? - ஆசிரியர்*

# ஸ்பர்ஜன் சிந்திய முத்துக்கள்

## - உங்கள் சிந்தனைக்கு -

**("பிரசங்கிகளின் இளவரசன்" என்று அழைக்கப்பட்ட பாப்திஸ்து பிரசங்கியான சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (*1834-1892*) தன்னுடைய பிரசங்கங்களிலும், நூல் களிலும் முத்துக்களாய் உதிர்த்துள்ள ஆவிக்குரிய சிந்தனைகளைத் தொகுத் தளிக்கிறார் தஸ்மேனியாவின் தென் பிரஸ்பிடீரியன் சபையைச் சேர்ந்த ரேபன் கெமரன் ஸ்மித் (Raeburn Cameron-Smith). இது முதலில் ரிஃபோர்மர் (Reformer) என்ற இதழில் வெளிவந்தது. ஸ்பர்ஜன் விசுவாசித்த அதே சத்தியங்களை விசுவாசிக்கிறவர்களுக்கு இந்தச் சிந்தனை முத்துக்கள் நிச்சயம் ஊக்கந்தரும்.)**

### மாற்றம் (Change)

*வளர்ச்சியடைந்து வரும் இந்தக் காலப்பகுதியில் ஆத்மீகம் பற்றிய கருத்துகள் இரயில் வண்டி வேகத்தில் வளர்ந்து வருகின்றன. 'சுவிசேஷம் பரிணாம வளர்ச்சி அடைந்து வருகிறது' என்ற ஓர் புதிய கருத்து பலரை இன்று ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் இது நிந்தனைக்கும், முட்டாள்தனத்திற்கும் இடைப்பட்ட ஓர் கருத்தாகவே காணப்படுகிறது. எண்ணிக்கையற்ற தொகையினரில் நித்திய ஜீவனுக்கேது வாக திட்ப உறுதியாக சுவிசேஷம் பயன்பட்டிருக்கிறபோது இத்தகைய சிந்தனைகள் அதை மாற்றும் வீண் முயற்சியாக காலந்தாழ்த்திப் புறப்பட் டிருக்கின்றன. சகல ஞானமும் கொண்ட மாறாத தேவனின் வெளிப் பாடாக இருக்கின்ற சுவிசேஷத்தை நவீனப்படுத்தப் பார்க்கின்ற அசட்டுத் தனமாகவே இந்த முயற்சி தெரிகிறது.*

*ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் பயன்படுகிற மாதிரியான ஓர் சுவிசேஷம் இருப்பதாக மனிதர்கள் நிச்சயம் நம்புகிறார்களா? அல்லது ஒவ்வொரு ஐம்பது வருடங்களுக்கும் பயன்படுகிறமாதிரி ஓர் சுவிசேஷந்தான் உண்டா? விதம்விதமான சுவிசேஷங்களின் மூலமாக பரலோகத்திலிருக்கிற விசுவாசி கள் இரட்சிப்பு அடைய முடியுமா? அவர்களுடைய பாடல்கள் எப்படி யிருக்கும்? விதம்விதமான சுவிசேஷங்களால் இரட்சிப்படைந்து, விதம் விதமான போதனைகளைப் பின்பற்றி அவர்களால் எப்படி ஒற்றுமையாக ஐக்கியப்பட முடியும்? விதம்விதமான ஆத்மீக வழிமுறைகளுக்கு இடமளிப் பதாக பரலோகந்தான் இருக்க முடியுமா?*

*சுவிசேஷத்தை மாற்றியமைப்பதானால் அதில் இருக்கும் எந்தப் போதனையை நாம் தூக்கியெறியப் போகிறோம்? அதில் நாம் சகித்துக் கொள்ள முடியாதபடி இருக்கும் போதனைகள்தான் என்ன? கள்ளைக் கூழ் என்று நம்மைக் குடிக்கவைக்கப் பார்க்கும் ஒரு புதிய கிறிஸ்தவம்*

*முன் அட்டைப் படத்தில் சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்.*

*நம்மத்தியில் இன்று தலைதூக்கியிருக்கிறது. நேர்மையும், ஒழுக்கமுமில்லாத இந்தப் புதிய முயற்சி வரலாற்றுக் கிறிஸ்தவத்தில் மாற்றங்கள் செய்து அதைப் புதுப்பிக்கப் பார்க்கிறது. கிறிஸ்துவின் பரிகாரப்பலியை நிந்தித்து, பரிசுத்த ஆவியானவர் வேதத்தை எழுத்தில் வடித்துள்ளவிதத்தை மறுதலித்து, பரிசுத்த ஆவியை வெறும் உந்துசக்தியாக மட்டும் வர்ணித்து, பாவத்திற்கு கிடைக்கும் தண்டனையை வெறும் கட்டுக்கதையாக்கி, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை வெறும் மனப்பிரமையாக்கி, இத்தனையை யும் தொடர்ந்து செய்துவரும் நமது விசுவாசத்தின் எதிரிகள், அவர்களை நாம் சகோதரர்கள் என்று சொந்தங் கொண்டாடி அவர்களோடு கூட்டுச் சேரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.*

## ஆத்மீக அக்கறையின்மை (Carelessness)

*இன்று எல்லா இடங்களிலுமே ஆத்மீக அக்கறையின்மையைக் கவனிக்க முடிகின்றது. பிரசங்கிக்கப்படுகின்ற பிரசங்கங்கள் வேதபூர்வமானவையா, இல்லையா என்பதைப் பற்றி எவருமே கவலைப்படுவதில்லை. எந்த விஷயத்தைப் பற்றி பிரசங்கங்கள் கொடுக்கப்பட்டாலும் அக்கறையில்லை; அது சுருக்கமாக மட்டும் இருந்துவிட வேண்டும் என்பதைத்தான் எல் லோரும் விரும்புகிறார்கள்.*

*விசுவாசிகள் அடங்கியொடுங்கி மனந்திறந்து பேசத் தயங்குகிறார்கள். திருடன் வீட்டைத் திருடிக்கொண்டிருக்கிறான்; வீட்டின் சுவர்கள் இடிக்கப் படுகின்றன; ஆனால் உள்ளறைக் கட்டிலில் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக் கும் நல்லவர்கள் அந்தச் சுகத்தை உதறியெறிந்துவிட்டு கீழே ஓடிப் போய் திருடர்களைத் துரத்தவும், காயப்படவும் மனமில்லாமல் இருக்கிறார்கள்.*

*நம் மத்தியில் இருக்கும் போலித்தனங்களுக்கு எதிராக நாம் குரல் கொடு ப்பதை நமது தலைவீக்கத்தின் அறிகுறியாக சிலர் கருதுகிறார்கள். எதிலும் நாம் ஒத்துப்போகாவிட்டாலும், எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே இவர்களின் சுலோகமாக இருக்கிறது.* (We are all to be as one, even though we agree in next to nothing.) *போலிப் போதனைக்கு எதிராகக் குரல்கொடுப்பதை கிறிஸ்தவ சகோதரத்துவத்துக்கு எதிரான செயலாக இவர்கள் கருதுகிறார்கள்.*

*கிறிஸ்துவின் பரிகாரப்பலியை அசட்டை செய்கிறவர்களுடன் அதை மகிமைப்படுத்துகிற விசுவாசிகள் கூட்டுச்சேர்ந்துகொள்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக விசுவாசிக்கும் விசுவாசிகள், கர்த்தர் அதை எந்தத் தவறுகளுமில்லாமல் தந்திருக்கிறார் என்பதை நம்பாத வர்களுடன் இணைந்து போகிறார்கள். சுவிசேஷ சத்தியங்களை விசுவாசிக் கிறவர்கள்* (Evangelical doctrine) *ஆதாமின் வீழ்ச்சியைக் கட்டுக்கதை என்று அலட்சியப்படுத்துகிறவர்களுடனும், பரிசுத்த ஆவியானவர் ஓர் நபர் என் பதை மறுப்பவர்களுடனும், விசுவாசத்தினால் நீதிமானாகுதலை ஒழுக்கக் கேடு என்று அழைப்பவர்களுடனும், மரணத்திற்குப் பிறகு மனந்திரும்ப மீண்டும் ஓர் வாய்ப்புண்டு என்று சொல்லுபவர்களுடனும் கூசாமல் கூட்டுச் சேர்ந்து கொள்கிறார்கள். ஆம்! வேத சத்தியங்களை விசுவாசிக்*

*கிறோம் என்று மாரடித்துக்கொள்ளுகிறவர்கள் அவற்றை நிராகரிக்கிறவர் களுடன் வெளிப்படையாக ஒத்துப்போகிற அலங்கோலத்தை இன்று நாம் கண்முன்னாலேயே பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்யாமலும், கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை ஒரு போதும் பெறாதவர்களையும் அவர்கள் இழித்துப் பேசுவதற்கும் தயங்க வில்லை. வெளிப்படையாகச் சொல்லப்போனால் இந்த ஐக்கியங்களையும், உறவுகளையும் நம்மால் கிறிஸ்தவ உறவுகளாக அழைக்க முடியவில்லை; ஏனெனில், அவை பாவத்தின் அடிப்படையில் அமைந்த ஐக்கியங்களாகத் தான் நமக்குத் தெரிகின்றன. கிறிஸ்து முழு மனிதகுலத்துக்குமாக மரித்தார் என்ற யுனிவர்சலிசப் போதனையை* (Universalism) *நாம் நம்பாமலும், ரோமன் கத்தோலிக்கப் போதனையான பேர்கட்டரியை* (Purgatory) *நாம் விசுவாசிக்காமலும் இருந்து அதேவேளை, பரிசுத்த வேதாகமத்தைக் கர்த்தர் பரிசுத்த ஆவியின் மூலம் அருளிச் செய்தார் என்பதையும், ஆதாமின் வீழ்ச்சியையும், பாவத்தில் இருந்து நாம் விடுதலை அடைவதற்கான கிறிஸ்துவின் சிலுவைப்பலியையும் நாம் தீவிரமாக விசுவாசிப்போமானால், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு முரணான வேறொரு சுவிசேஷத்தைப் போதிப்பவர்களோடு நாம் ஒருபோதும் கூட்டுச்சேரக்கூடாது. அப்படிக் கூட்டுச்சேர்ந்தால் நாம் இன்னொரு கடவுளுக்கு விசுவாசமாக இருப்பது போலாகிவிடும்.*

*பரிசுத்த வேதாகமத்தின் போதனைகளைப் பற்றித் தொடர்ந்து பிரச்சனை யான கேள்விகளையெழுப்பும் இதயங்களும், பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வேதாகமத்தைத் தவறுகளெதுவுமின்றி தந்திருக்கிறார் என்று நம்பும் இதயங்களும் இணைந்து வாழ முடியாது; இதில் கட்சி மாறுவதற்கு இடமே யில்லை. பரிசுத்த ஆவியானவர் வேதத்தைத் தவறுகளில்லாமல் தந்திருக் கிறார் என்று ஒருபுறம் நம்பிக்கொண்டு, மறுபுறம் அந்த சத்தியத்தை நம் மால் நிராகரிக்க முடியாது; கிறிஸ்துவின் பரிகாரப்பலியை நம்புகிற அதே வேளை அதை நிராகரிக்கவும் முடியாது; ஆதாமின் வீழ்ச்சியை விசுவாசிக் கும் அதேவேளை, பாவத்தில் இருக்கும் மனிதனில் இருந்து ஆத்மீகப் பரிணாமம் ஏற்படுவதற்கான வழியுண்டு என்பதை நம்மால் நம்ப முடியாது; மனந்திரும்பாதவர்களுக்கு நித்திய தண்டனையுண்டு என்பதை விசுவா சிக்கிற நாம் அவர்களைக்குறித்த பெரிதான எதிர்பார்ப்புகளை வளர்த்துக் கொள்ள முடியாது. இதுவரை பார்த்தவற்றில் நாம் ஒரு வழியை மட்டுமே பின்பற்ற முடியும்.*

## உற வுகள் (Company)

*அத்திவாரம் இல்லாமல் கட்டப்பட்டிருக்கும் வீட்டைத் திருத்தி அமைக்க முடியும் என்று நம்பிக்கொண்டிருக்கிறவர்கள், 'அந்த வீட்டை விட்டு வெளியேறத்தான் வேண்டும்' என்று உணர்ந்து புத்தியுடன் நடந்து கொள்ளும் நாள் வரத்தான் போகிறது. வேதத்துக்கு முரணான போதனை களை ஏற்று நடக்கும் கமிட்டிகளிலும், ஐக்கியத்திலும் இருந்து வெளி யேறுவது மட்டுமே அந்தப் பிரச்சனைக்கான சரியான வழி என்பதை நாம் எப்போதுமே உணர்ந்திருக்கிறோம். அத்தகைய ஐக்கியங்கள் 'நாங்கள்*

அப்படிப்பட்டவர்கள் இல்லை' என்று எவ்வளவுதான் சாதித்தாலும், பிரச்சனையின் ஆழத்தையும் அதன் விளைவுகளையும் அறிந்திருப்பவர்களுக்கு வேறுவழி கிடையாது.

அத்தகைய அடிப்படைப் போதனைகளுக்கு எதிராக நடக்கும் ஐக்கியத்திலிருந்து விலகுவதற்கும், அழிந்தே தீருவோம் என்று உறுதியாயிருக்கிற ஆத்துமாக்களுக்கு ஜீவ அப்பத்தைக் கொடுக்காமல் இருப்பதற்கும் பெயர் 'பிரிவினை' (Schism) அல்ல; அத்தகைய மனச்சாட்சியையும், சத்தியத்தையுமே கர்த்தர் விசுவாசிகளிடம் இருந்து எதிர்பார்க்கிறார். சத்தியத்திற்காக உறுதியான முடிவை எடுத்தாக வேண்டும்; அதுவே போலிப் போதனைக் கெதிரான நடவடிக்கையுமாகும். இந்த வழியைக் கடைப்பிடிப்பவர்கள் அதைக் கடைப்பிடிக்கட்டும், அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் தாங்கிக் கொள்ளட்டும்: அதேவேளை பரந்த வழியையும் பின்பற்ற நினைப்பது முட்டாள்தனம். பேலியாளுக்கும் நமக்கும் என்ன உறவு இருக்க முடியும்?

மெய்யான ஆத்மீக ஐக்கியத்தை அநுபவிக்காத கூட்டத்தோடு நமக்கு உறவும், ஐக்கியமும் இருப்பதாகக் காட்டிக்கொள்ளக் கூடாது என்பதை நாம் உறுதியாக நம்புகிறோம். போலியானது என்று வெளிப்படையாகத் தெரியும் எந்தப் போலிப்போதனையைப் பின்பற்றுபவர்களோடும் நாம் ஐக்கியம் வைத்திருந்தால், அவர்களுடைய பாவத்தில் பங்கு கொள்கிறோம். சத்தியம் தெரிந்து அதை நேசிப்பவர்கள், அதற்கு நேரெதிரான அசத்தியத்தோடு ஐக்கியம் வைத்திருக்க முடியாது. அப்படியிருக்கும்போது, அந்தக் கூட்டத்தோடு அத்தகைய ஐக்கியம் இருப்பதாக அவர்கள் காட்டிக் கொள்வதற்கு சரியான காரணமெதுவுமேயில்லை.

சத்தியத்தை விற்று ஐக்கியத்துக்காக அலைவது இயேசு கிறிஸ்துவைக் காட்டிக் கொடுப்பதாகும். இராஜாதி இராஜனாகிய இயேசு கிறிஸ்துவின் அரசுரிமைகளில் பங்குபெறுவதற்கான உடன்படிக்கையைச் செய்ய நாம் தயாராவோமானால், அவருடைய சுவிசேஷமாகிய கீரிடத்தின் இரத்தினங்களை நாம் மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தாரைவார்த்துவிட முடியாது. கிறிஸ்துவே நம்முடைய தலைவராகவும் ஆண்டவராகவும் இருப்பதால் அவருடைய வார்த்தைகளையே நாம் பின்பற்றுவோம். அவருடைய போதனைகளோடு விளையாடுவது அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு சமமானதாகும். சில நல்ல மனிதர்கள், ஆரம்பத்தில் ஒருபோதும் தாங்கள் சிந்தித்திராத முரண்பாடான உறவுகளுக்கு தங்களை அறியாமலேயே உட்படுத்திக் கொள்கிறார்கள்; ஆனால் காலஞ் செல்லச்செல்ல அவர்கள் அதை நியாயப்படுத்திக்கொள்ளும் நிலமை ஏற்படுகிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் தங்களை ஆளும்படி இப்படி இடம் கொடுத்துவிட்ட இவர்கள், மற்றவர்கள் தங்களை வழிநடத்தும் நிலமைக்கு இடமளித்துவிடுகிறார்கள்; பின்னால் விழிப்பேற்பட்டு, இருக்கக்கூடாத இடத்தில் இருக்கிறோம் என்ற உணர்வேற்பட்ட பின்னர் அதிலிருந்து விலகிவிட வேண்டும் என்ற உறுதி எல்லோருக்குமே இருப்பதில்லை. முக்கியமாக தங்களைப் போலவே தவறு செய்து வரும் சக தோழர்களோடு இருக்கும்போது அவர்களுடைய வழிகளை ஆராய்ந்து பார்க்கவோ, அதுபற்றிப் பேசவோ அவர்

*களுக்கு எந்தத் துடிப்பும் இருக்காது.*

## நம்பிக்கை (Conviction)

*"விசுவாச அறிக்கை (Creed) கர்த்தருக்கும் மனிதருக்கும் இடையில் ஓர் இடைவெளியை ஏற்படுத்துகிறது" என்ற கூற்றில் எந்தவிதமான உண்மையும் இல்லை. உறுதியாகவும், தெளிவாகவும், சத்தியத்தை விளக்குவதால் விசுவாசியைக் கர்த்தரிடத்தில் இருந்து பிரித்துவிட முடியாது. என்னைப் பொறுத்தவரையில், நான் விசுவாசிப்பதை தெளிவாக எல்லோருக்கும் புரிகிற மொழியில் விளக்குவதற்கு நான் ஒருபோதும் வெட்கப்பட்டதில்லை. நான் விசுவாசிக்கிற சத்தியம் கர்த்தருடைய தவறற்ற வேதத்தில் அவருடைய சித்தமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதனாலேயே, அதை நான் உறுதி யாகப் பின்பற்றுகிறேன். அதை வெளிப்படுத்தியிருக்கிற கர்த்தரிடமிருந்து அது என்னை எப்படிப் பிரிக்க முடியும்? கர்த்தரோடு நான் ஐக்கியத்தில் வருவதற்கு உதவும் சாதனங்களில் ஒன்றாக அது இருக்கிறது. அதன் மூலம் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் பெற்று என்னுடைய அறிவில் நான் வளர்கிறேன். கர்த்தர் எதைச்சொன்னாலும் அவருடைய வார்த்தை யாக நான் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன்; என்னுடைய இருதயத்தின் ஆழத்தில் இருந்து தாழ்மையோடு அவரை ஆராதிக்கிறேன். "என்னுடைய விசுவாசத்தை என்னால் விளக்கமுடியாது" என்று சொல்லுகிற மனிதன் மேல் எனக்கு அக்கறை இல்லை; ஏனெனில் அவனுடைய பேச்சின் அடிப் படையில் அவனோடு என்னால் ஒத்துப்போக முடியாது. அவனிடம் நிச்சய மாக ஒரு விசுவாச அறிக்கை இருக்கத்தான் வேண்டும். அப்படி எதுவும் தன்னிடம் இல்லை என்று அவன் சொல்லுகிறபோது அதுவே அவனுடைய விசுவாசத்தின் அறிக்கையாக இருக்கிறது. அதாவது, அவனுடைய அவிசுவாசமே ஒருவிதத்தில் அவனுடைய அறிக்கையாக இருக்கிறது.*

பெரும் இறையியல் அறிஞரான பென்ஜமின் வோர்பீல்ட் ஒரு முறை பிரின்ஸ்டன் இறையியல் கல்லூரித் தலைவரின் மனைவியை பிரின்ஸ்டன் நகர்த் தெருவில் சந்திக்க நேர்ந்தது. திருமதி ஸ்டீபன்சன் அப்போது நடக்கவிருந்த பிரஸ்பிடீரியன் சபைப் பொதுக்குழு கூட்டத்தில் பெரும் வாக்குவாதங்கள் நிகழப்போவதை நினைத்து வருத்தப்பட்டுக் கொண் டிருந்தார். அதனால் அவர் இறையியல் அறிஞரான வோர்பீல்டைப் பார்த்து, "டொக்டர் வோர்பீல்ட், பொதுக்குழு கூட்டத்தில் பிரச்சனைகள் ஏற்படக் கூடும் என்று செய்தி வந்தது. அதனால் நாமெல்லோரும் ஒற்றுமைக்காக ஜெபிக்க வேண்டும்" என்றார். அதற்கு பதிலளித்த வோர்பீல்ட், "அந்தக் கூட்டத்தில் அவர்கள் சரியானதைச் செய்யாமல் போனால், பெரும் போரே வெடிக்கும் என்று நான் ஜெபம் செய்கிறேன்" என்றார். அதுவே நம்முடைய சிந்தனையாகவும் இருக்க வேண்டும். ஏனெனில், நாம் பிரச்சனைகளைத் தேடி அலைவதில்லை, ஆனால், வரும் பிரச்சனைகளை சந்திக்கத் தயங்கி முதுகெழும்பில்லாதவர்கள்போல் நடந்து கொண்டால் மற்றவர்கள் பாவத்தில் நாம் பங்கேற்க நேரிடும். – *டேவ் இராக்பீப் டேவிஸ்*

# ‘பிரசங்கிகளின் இளவரசன்’
# சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன்

ஜெரமி வோக்கர் - Jeremy Walker



“பிரசங்கிகளின் இளவரசன்” என்று அழைக்கப்படும் சார்ள்ஸ் ஹெடன் ஸபர்ஜன் தன்னுடைய வாழ்க்கையில் அநேக தாலந்துகளையும், கிருபைகளையும் கொண்டு கர்த்தருக்காகப் பணிபுரிந்தார். அவருடைய வாழ்க்கையையும், ஊழியப் பணிகளையும் விளக்கும் எண்ணிலடங்காத நூல்கள் ஆங்கிலத்தில் எழுத்தில் வடிக்கப்பட்டிருக்கின்றன. அவருடைய வாழ்க்கையை நாம் ஆராய்ந்து எழுத முனைகிறபோது, அவரைப் பற்றிய சகல சுவாரஸ்யமான செய்திகளையும் இந்த ஆக்கத்தில் சேர்க்க முடியாமல் போகிறது.

## ஆரம்பகால வாழ்க்கையும், மனந்திரும்புதலும்

இங்கிலாந்தில், எசெக்ஸ் மாநிலத்தில் (Essex), கெல்வடன் (Kelvedan) என்ற கிராமத்தில் 1824ம் வருடம் ஜூன் மாதம் 19ம் திகதி பிறந்தார் ஸ்பர்ஜன். தனது வாழ்க்கையின் ஆரம்ப வருடங்களில் சிலவற்றை அவர் ஸ்டெம்போர்ன் (Stambourne) எனும் நகரத்தில் வாழ்ந்த தன்னுடைய தாத்தாவின் வீட்டில் கழித்தார். அவருடைய தாத்தா ஜோண், கொங்கிரிகேஷனல் சபையொன்றின் போதகராக இருந்து வந்தார். ஸ்பர்ஜனுடைய தந்தையின் பெயரும் ஜோணாக இருந்ததோடு அவரும் ஓர் கொங்கிரிகேஷனல் சபைப் போதகராக இருந்தார். தன்னுடைய ஐந்தாம் வயதில் தாத்தாவின் வீட்டிலிருந்து பெற்றோரிடம் திரும்பினார் ஸ்பர்ஜன். இளம் வயதிலேயே ஸபர்ஜன் புத்திசாலியாகவும், திறமைசாலியாகவும், தைரியமுள்ளவராகவும் இருந்தார். சிறு வயதிலேயே ஸ்பர்ஜன் தன்னுடைய தாத்தாவின் நூலகத்திலிருந்த பியூரிட்டன்களின் நூல்களையெல்லாம் அவற்றிலிருந்த படங்களைப் பார்த்து மகிழ்வதற்காக திறந்து பார்ப்பார். முக்கியமாக ஜோண் பனியனின் மோட்ச பயண நூலையும், ஃபொக்ஸின் கிறிஸ்துவுக்காக இரத்தஞ்சிந்தி மரித்தோரின் நூலையும் (Foxe’s *Book of Martyrs*) ஆர்வத்துடன் திறந்து பார்ப்பார். அப்போது வாசிக்கும் பயிற்சியில் அவர் ஈடுபட்டு அந்நூல்களை இளம் வயதிலேயே அவர் வாசிக்கவும் தவறவில்லை. காலஞ் செல்லச்செல்ல அவருடைய புத்திசாலித்தனமும், பேச்சு வன்மையும் சிறிது சிறிதாக வெளிப்பட ஆரம்பித்தது.

பதினைந்து வயதாக இருக்கும்போது ஸ்பர்ஜன், நியூமார்கெட் (New-

market) என்ற நகரில் ஒரு பாடசாலையில் மாணவனாகவும், சிறு குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பவராகவும் சேர்ந்தார். அவர் தங்கியிருந்த போர்டிங் வீட்டிலேயே அவருடைய பாடசாலையில் இறையியல் போதித்த ஆசிரியரும் சமையற்காரராக இருந்தார். அந்த ஆசிரியர் கல்வினிசப் போதனைகளில் மிகுந்த தீவிர நாட்டங்கொண்டிருந்து அதன்படி வாழ்ந்தவராயிருந்தபடியால் ஸ்பர்ஜனுக்கிருந்த தாக்கின. இதற்கு முன்பு ஸபர்ஜன் தன் வாழ்க்கையில் எத்தனையோ நல்ல வல்லமையான பிரசங்கங்களையெல்லாம் கேட்டிருந்தார். ஆனால், இப்போது தேவனுடைய வார்த்தை ஆவியின் வல்லமையோடு, இரட்சிப்பளிக்கும் உறுதியோடு ஸ்பர்ஜனின் செவிமடல்களைத் தாக்கி இதயத்தில் நுழைந்தது. ஸ்பர்ஜன், அந்தப் பிரசங்கி சொன்னதுபோல் கிறிஸ்துவை நோக்கிப் பார்த்தார், ஜீவனை அடைந்தார். தன்னுடைய பாவமன்னிப்புக்காகவும், மரணத்திலிருந்தும் நித்திய நரகத்திலிருந்தும் விடுபடுவதற்காகவும் அவர் கிறிஸ்துவை முழு இருதயத்தோடு விசுவாசித்தபோது இரட்சிப்பின் ஆனந்தப் பிரவாகம் அவருடைய இருதயத்தை நிரப்பியது. ஸ்பர்ஜனின் வாழ்க்கையில் இது 1850ம் ஆண்டு ஜனவரி 6ம் நாள் நிகழ்ந்தது. அன்றிலிருந்து கிறிஸ்துவின் மகிமையும், பெருமைகளும் ஸ்பர்ஜனின் வாழ்க்கையிலும், பின்னால் அவர் செய்த அத்தனைப் பணிகளிலும் படிந்தன.

ஸ்பர்ஜனை சோதிப்பதற்கு சாத்தான் அதிக காலம் எடுத்துக்கொள்ளவில்லை. இனித் தன் வாழ்க்கையில் எந்தவிதமான சாத்தானின் சந்தேகங்களுக்கோ, நிந்தனைகளுக்கோ அல்லது கேடான எண்ணங்களுக்கோ இடமிருக்காது என்று இளம் ஸ்பர்ஜன் எண்ணி மகிழ்ந்தார். ஆனால், சாத்தான் அவரைச் சோதிக்காமல் விட்டுவிடவில்லை. இந்தக் கசப்பான சோதனைகள் அவருடைய வாழ்க்கையில் சிறிது காலத்துக்கே இருந்தன. பாவ இருதயத்திலிருந்து எழும் கேடான எண்ணங்களுக்கெதிராகப் போராடி வெற்றிபெற கிறிஸ்து ஸ்பர்ஜனுக்கு உதவினார். இந்த அநுபவம், கிறிஸ்தவ வாழ்க்கை ரோஜாப்பூக்கள் நிறைந்த கட்டிலில் உறங்குவதால் அடையும் சுகமல்ல, போர்முனையில் எதிரியோடு போராடுவதைப் போன்ற அநுபவம் என்பதை ஸ்பர்ஜனுக்குக் கற்றுத் தந்தது. இந்தப் போராட்டத்தில் ஓர் போர்வீரனுக்குரிய ஊக்கத்துடன் அவர் பங்கு பெற்றார்.

மனந்திரும்பிக் கிறிஸ்துவை விசுவாசித்த அந்த வருட ஏப்பிரல் மாதமே ஸ்பர்ஜன் கொங்கிரிகேஷனல் திருச்சபையில் அங்கத்தவராக சேர்ந்தார். அதற்குள் ஸ்பர்ஜன் வேத அறிவில் வளர்ந்து, அனைத்தைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பித்து, விசுவாசிகள் மட்டுமே ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதில் தெளி வடைந்தார். அதனால் ஊரில் இருந்த பாப்திஸ்து போதகர் ஒருவரிடம் ஞானஸ்நானம் பெறத்தீர்மானித்தார். 1850ம் ஆண்டு மே மாதம் 3ம் நாள் ஸ்லெகெம் (Isleham) என்ற ஊருக்கு எட்டுமைல்கள் நடந்து சென்று அங்கிருந்த லார்க் (Lark) என்ற ஆற்றில் திரு. கென்ட்லோ (Kantlow) என்பவரிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். இந்த இடத்தை நினைவுகூறுமுகமாக அங்கே இப்போதும் ஒரு அடையாளக் கல் நாட்டப்பட்டிருக்கிறது. ஞானஸ்நானம் எடுக்கும்வரை திருவிருந்தைப் பெற்றுக் கொள்வதில்லை என்று ஸ்பர்ஜன் தீர்மானித்திருந்தபடியால் ஞானஸ்

*நானத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு 1850ம் ஆண்டு மே மாதம் 5ம் நாள் திருவிருந்தில் கலந்துகொண்டார். அதே நாள் திருச்சபையின் ஞாயிறு பாடசாலையில் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கவும் ஆரம்பித்தார். அன்று முதல் சிறுவர்களும், பெரியவர்களும்கூட ஸ்பர்ஜன் மீது அதிக மரியாதை செலுத்த ஆரம்பித்தனர்.*

## பிரசங்க ஊழியத்துக்கான அழைப்பும், திருச்சபைப் பணியும்

*1850ம் ஆண்டு கோடை காலத்தில் பல்கலைக்கழக நகரான கேம்பிரிட்ஜில்* (Cambridge) *ஸ்பர்ஜன் குடியேறினார். இந்நகரில் ஒரு ஆசிரியராகவும், மாணவராகவும் தொடர்ந்து ஸ்பர்ஜன் பணிபுரிய ஆரம்பித்ததோடு அங்கிருந்த பாப்திஸ்து சபையொன்றிலும் இணைந்தார். அந்த சபையோடு ஐக்கியப்பட்டு வேத அறிவிலும், கிறிஸ்தவ வாழ்க்கையிலும் வளர வளர கர்த்தருக்குப் பணிபுரிவதற்கு ஸ்பர்ஜனுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்க ஆரம்பித்தன. அதில் ஒரு வாய்ப்பு எந்தவிதமான சபை சடங்குகளும் இல்லாமல் அவர் மீது திணிக்கப்பட்டது. அவருடைய சபையைச் சார்ந்த ஜேம்ஸ் வின்டர்* (James Winter) *என்ற மனிதர் பக்கத்தில் இருந்த ஊர்களில் சுவிசேஷப் பிரசங்கம் செய்வதற்கானவர்களைத் தெரிவு செய்து அனுப்பும் பணியைச் செய்து வந்தார். ஒரு நாள் அவர் ஸ்பர்ஜனைத் தன்னை வந்து பார்க்கும்படி அழைத்திருந்தார். வின்டர் ஸபர்ஜனைப் பார்த்து, ஒரு வாலிபன் பக்கத்திலிருக்கும் டிரெவர்சம்* (Teversham) *என்ற ஊரில் பிரசங்கம் செய்யப் போகிறான், அவனுக்கு ஆராதனை நடத்துவதில் அநுபவம் இல்லாததால் எவராவது தன்னோடு வந்தால் துணையிருக்கும் என்று விரும்புகிறான் என்று கூறினார். ஸ்பர்ஜன் தன்னோடு வயதில்கூடிய இன்னொரு வாலிபனையும் துணைக்கு அழைத்துக்கொள்ள, மூவரும் ஒரு ஞாயிறு பகல் வேளையில் அந்த ஊரை நோக்கிப் போக ஆரம்பித்தார்கள். போகிற வழியில், பிரசங்கம் செய்யவிருந்த வாலிபன் தன்னைத்தான் அன்று பிரசங்கம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்து வந்திருக்கிறான் என்பதை ஸ்பர்ஜன் அறிந்துகொண்டார். ஸ்பர்ஜனோடு வந்த மற்ற வாலிபனும் அதில் உறுதியாக இருந்தான். இந்தப் புதிய பொறுப்பு ஆழமாக இதயத்தில் பதிய, ஸபர்ஜன் அன்று 1 பேதுரு 2:7ல் தன்னுடைய கன்னிப் பிரசங்கத்தை அளிக்கத் தீர்மானித்தார். அந்தக் கிராமத்து கட்டிடமொன்றில் அன்று கூடியிருந்த ஒரு சிறு கூட்டம் அந்தப் பிரசங்கத்தின் மூலம் ஆதிக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டது.*

*தொடர்ந்து ஸ்பர்ஜனுக்கு பிரசங்கம் செய்யும் வாய்ப்புகள் வந்து குவிய ஆரம்பித்தன. அவருடைய பிரசங்கங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அவருக்குப் பதினேழு வயதாயிருக்கையில் கேம்பிரிட்ஜுக்கு அருகில் இருந்த வோட்டர்பீச்* (Waterbeach) *என்ற தேவபத்தியே இல்லாத ஒரு ஊரிலிருந்த ஒரு சபையின் போதகராக வரும்படி அழைப்பு வந்தது. அவருடைய ஆர்வத்தொண்டும், மனிதர்களின் பாவத்தைப் பற்றி அவருக்கிருந்த கூரிய அறிவும், கர்த்தரின் கிருபையும் அவ்வூரில் அவருடைய ஊழியத்தை ஆசீர்வதித்து முழு ஊரையும் வெகுவிரைவில் மாற்றியமைத்தது. ஸ்பர்ஜனின் வாழ்க்கையின் இந்த ஆரம்ப காலத்தில் அவரில் அதிக வளர்ச்சியும், முதிர்ச்சியும் காணப்பட்டபோதும், அவரளவுக்கு அந்த வயதில் பிரசங்க*

*ஊழியத்துக்குத் தேவையான சகல தகுதிகளையும் கொண்டிருந்து கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட பிரசங்கிகள் மிகச் சிலரே இருந்தனர். வோட்டர் பீச்சில் இரண்டு வருடம் ஊழியம் செய்தபிறகு, பத்தொன்பது வயதாயிருக்கும்போது இலண்டனில் இருந்த நியூ பார்க் ரோடு சபையில்* (New Park Street Chapel) *வந்து பிரசங்கிக்கும்படி அவருக்கு அழைப்பு வந்தது. அந்த சபை ஒருவிதத்தில் பெயர் பெற்றதாயிருந்தது; பென்ஜமின் கீச்* (Benjamin Keach), *ஜோண் கில்* (John Gill), *ஜோண் ரிப்பன்* (John Rippon) *போன்ற கர்த்தரால் வெவ்வேறு விதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்த போதகர்கள் அச்சபைப் போதகர்களாக இருந்திருந்தனர். வெறும் பெயரும், பழம் பெருமையும் மட்டும் ஒரு சபைக்குப் போதாது. அக்காலத்து இங்கிலாந்தின் ஆத்மீக நிலைமையை ஒரு வரலாற்று அறிஞர் பின்வருமாறு விளக்குகிறார்: "புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவமே அக்காலத்தில் தேசத்தின் ஆத்மீக மார்க்கமாயிருந்தது . . . சபைகளில் செல்வந்தர்களுக்கும், மனிதர்களுக்கும், முக்கியஸ்தர்களுக்கும் குறைவில்லாதபடி இருந்தாலும், அங்கே ஆத்மீக வல்லமையையும், ஆவியின் ஆசீர்வாதத்தையும் காணமுடியாதிருந்தது. அது மட்டுமல்லாமல் உலகப் படிப்புக்கும், பரிசுத்த ஆவியானவர் கர்த்தரின் வேதத்தில் வெளிப்படுத்தும் சத்தியங்களுக்கும் இடையில் இருக்கும் வேறுபாட்டைப் பொதுவாகவே எவரும் உணராதிருந்தார்கள். பேச்சுத் திறமைக்கும், பிரசங்க மேடைப் பண்பாட்டுக்கும் குறைவில்லாமல் இருந்தாலும், மனிதர்களின் இருதயத்தைப் பிளக்கக்கூடிய பிரசங்கங்களைக் காணமுடியாதிருந்தது. இவையெல்லாவற்றையும்விட மோசமான அடையாளமென்னவென்றால் வெகு சிலரே இதை உணர்ந்தவர்களாயிருந்தனர்."* (Ian Murray, *Forgotten Spurgeon*, p21.) *இந்த வரலாற்றுப் பின்னணியில் ஸ்பர்ஜன் இலண்டனுக்குப்போய் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கிக்க ஆரம்பித்தார்.*

*நியூ பார்க் ரோடு சபையில் 1200 பேர் அமரக்கூடியளவுக்கு இருக்கைகள் இருந்தன. முதல் நாள் ஸ்பர்ஜன் அங்கே பிரசங்கம் செய்தபோது நூறு அல்லது இருநூறு பேர்வரைக்கூடி அவருடைய பிரசங்கத்தைக் கேட்டார்கள். அன்று அவருடைய பிரசங்கத்தைக் கர்த்தர் ஆசீர்வதித்ததால், பிரசங்கத்தைக் கேட்க வந்திருந்தவர்கள் அதனாால் பாதிக்கப்பட்டு தங்களுடைய நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அதைப் பற்றிச் சொல்ல, மாலை ஆராதனைக்குக் கூட்டம் காலையில் இருந்ததைவிட அதிகமாக வந்தது. மீண்டும் வந்து சபையில் பிரசங்கிப்பதற்கு ஸ்பர்ஜன் உடன்பட்டார். ஆனால், சில வாரங்களிலேயே சபை அவரைப் போதகராக வரும்படி அழைப்பு விடுத்தது. தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு வந்து பிரசங்கம் செய்வதாகவும், அக்காலத்தில் அவர்கள் அதிகமாக ஊக்கத்துடன் ஜெபிக்க வேண்டுமென்றும் ஸ்பர்ஜன் கேட்டுக்கொண்டார். அந்த மூன்று மாதங்களில் சபையில் கூட்டம் வாராவாரம் அதிகரித்து முழுச்சபையும் நிரம்பி வழிய ஆரம்பித்தது. ஸ்பர்ஜனும், இயேசு கிறிஸ்துவுக்குள் கர்த்தரின் இறையாண்மையுள்ள கிருபையைப் பிரசங்கித்ததோடு, ஆத்துமாக்களோடு இணைந்து ஜெபித்து, கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெருமளவில் அவர்களோடு சேர்ந்து அநுபவித்தார். வெகு விரைவிலேயே*

சபை அவரை முழுநேரப் போதகராக வரும்படிக் கேட்டுக் கொண்டது. சபை மக்கள் ஊக்கத்தோடும், தீவிரமாகவும் ஜெபிப்பது தொடர வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் சபையின் போதகராக இணை வதற்கு ஸ்பர்ஜன் உடன்பட்டார்.

சுவிசேஷம் வெகுவேகமாக பரவ ஆரம்பித்தது. வழமைக்கு மாறான விதத்தில் பிரசங்கித்த, கல்லூரிக்குப் போய்ப் படித்திராத ஸ்பர்ஜனின் பிரசங்கத்தைக் கேட்க கூட்டம் அலைமோதியது. (இறையியல் கல்லூரியில் ஸ்பர்ஜன் படித்திராதபோதும் தன்னுடைய வாழ்நாள்பூராவும் தேவையான அத்தனை இறையியல் அறிவையும் அவர் கொண்டிருந்தார்.) கிராமத்துப் பையனாகத் தன்னுடைய பெற்றோர்களிடமும், தாத்தா பாட்டியிடமும் இருந்தும், பியூரிட்டன் பெரியவர்களின் நூல்களைக் கொண்டிருந்த நூலகங்களில் இருந்தும், தானிருந்த போர்டிங் வீட்டின் சமையல்காரரிடம் இருந்தும் பூரணமான சுவிசேஷக் கல்வினிசத்தைக் கற்றுக்கொண்டார் ஸ்பர்ஜன்.

அவருடைய பிரசங்க ஊழியத்தின் மூலம் பெருந்தொகையாவனர்கள் மனந்திரும்புதலை அடைந்தார்கள்; அவருடைய பெயரும் எல்லா இடங் களிலும் பரவ ஆரம்பித்தது. 'கல்வினிசம் என்பது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு இன்னொரு பெயர்' என்று ஸ்பர்ஜன் அடிக்கடி சொல்லு வார். அவர் அதைப் பிரசங்கித்தபோது அந்த சுவிசேஷம் வல்லமையாகக் கர்த்தரால் பயன்படுத்தப்பட்டது. அவருடைய அறிவுத் திறமையும், கர்த்தருக்காக அர்ப்பணத்தோடு உழைக்கும் தன்மையும், கர்த்தரின் கிருபை யிலேயே எப்போதும் தங்கியிருந்ததும் அவருடைய ஊழியம் எப்போதும் ஆத்மீக வல்லமையும், ஜீவனுமுள்ளதாக இருக்கச் செய்தன. அதிகரித்து வரும் கூட்டத்தை சபைக்கட்டிடத்தால் தொடர்ந்து தாங்க முடியவில்லை; கட்டிடத்தை விஸ்தரித்தும், தற்காலிகமாக வேறு பெரிய கட்டிடங்களில் கூட்டங்களை நடத்தியும் இந்தப் பிரச்சனை தீர்வதாக இருக்கவில்லை. தன்னுடைய ஊழியத்தின் ஆத்மீகப் பொறுப்புகளை உணர்ந்து பணிபுரிந்த ஸ்பர்ஜனின் சரீரமும், உணர்வுகளும் ஊழியத்தின் பெரும் பொறுப்புகளால் பாதிக்கப்பட்டன. இலண்டனில் ஊழியப் பணிபுரிந்த இந்த ஆரம்ப காலங்களிலேயே ஸ்பர்ஜன் சுசானா தொம்சன் (Susannah Thomson) என்ற பெண்ணை சந்தித்து அவரோடு நட்புக்கொண்டு அன்பு பாராட்டவும் ஆரம்பித்தார். அவருடைய ஊழியப் பொறுப்புகள், அவர் சுசானாவை அடிக்கடி சந்திப்பேசி அன்பு பாராட்ட அனுமதியளிக்கவில்லை. ஆனால், அவர்களிருவருக்குமிடையில் இருந்த ஆழமான அன்பும், சுசானாவின் ஆத்மீக முதிர்ச்சியும் அவர்களிருவரையும் 1856ம் ஆண்டு ஜனவரி 8ம் நாள் திருமணத்தில் இணைத்தது.

## ஊழிய வளர்ச்சியும், சத்தியப் போராட்டமும்

இதேவேளை அதிகரித்து வரும் ஆசீர்வாதமான ஊழியங்களினால் ஸ்பர்ஜனுக்கு உலகத்திலிருந்து எதிர்ப்பும் அதோடு அடிக்கடி உலகத்தோடு போராட்டமும் உருவானது. அதைவிட கிறிஸ்தவர்களிடமிருந்து அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டதும், சில சமயங்களில் தவிர்க்கமுடியாத போராட்டத்தில்

அவர் ஈடுபட நேரிட்டதும் மிகவும் துயரமளிப்பதாகும். கிருபையின் போதனகளை அவர் வெட்கப்படாமல் தைரியத்தோடு பிரசங்கித்தது ஆர்மீனியக் கோட்பாட்டாளருக்கும் (சுருக்கமாக விளக்குவதானால் இந்தப் போதனை, மறுபிறப்படைவதற்கு முன் மனிதன் தன்னுடைய இரட்சிப் புக்குத் தேவையான பங்கை அளிக்கிறான் என்று விளக்குகிறது), ஹைபர்-கல்வினிசக் கோட்பாட்டாளருக்கும் (சுருக்கமாக விளக்குவதா னால் இந்தப் போதனை, கர்த்தர் இறையாண்மையுள்ளவராக இருந்து மனிதர்களை இரட்சிப்பதால், மனிதர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க வேண் டும் என்று நாம் அவர்களுக்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை என்கிறது). அவர் மீது மனவெறுப்பை ஏற்படுத்தியது. அவருடைய ஆத்மீக வாஞ்சையும், பரிசுத்தமான தைரியமும், தன்னுடைய மனதுக்குப்பட்டதை மறைக்காமல் பேசும் மனப்பாங்கும் அவருடைய கருத்துகளுடன் முரண் பட்டவர்களுக்கு அவர் மீது ஆத்திரத்தை எழுப்பியது. தன்மீது அநாவசிய மாகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும், நிந்தனைகளுக்கும் பதிலளிக்கு முகமாகவும், 1855ல் தான் விசுவாசிக்கும் சத்தியங்களை வெளிப்படையாக எல்லோரும் அறிந்துகொள்ளும்படியாக ஸ்பர்ஜன் 1689 விசுவாச அறிக்கையை (1689 Baptist Confession of Faith) மீண்டும் வெளியிட்டார். தான் ஊழியம் செய்து வளர்த்து வரும் மக்களைக் கர்த்தருடைய சத்தியத்தில் வளர்ப்பதற்காகவும் ஸ்பர்ஜன் இதைச் செய்தார். பார்டிகுளர் பாப்திஸ்து (Particular Baptist) மூதாதையர்கள் விசுவாசித்த அதே சத்தியங்களை விசுவாசித்த ஸ்பர்ஜன் அந்தப் பரம்பரையோடு இதன் மூலம் தன்னை இனங்காட்டிக் கொண்டார். (குறிப்பிட்ட மக்களுக்காக கிறிஸ்து மரித்தார் (Particular Redemption or Particular Atonement) என்ற கிருபையின் போதனைகளைப் பின்பற்றிய பாப்திஸ்துகளுக்கு பார்டிகுளர் பாப்திஸ்து என்று அக்காலத்தில் பெயர் இருந்தது. இன்றைக்கு அந்த சத்தியங்களைப் பின்பற்றுபவர்களை சீர்திருத்த பாப்திஸ்து என்று அழைப் பார்கள்). 1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையை வெளியிட்டு வைத்த ஸ்பர்ஜன் அதற்கு அறிமுகமாக பின்வரும் குறிப்பை எழுதினார்: “நாம் முழு இருதயத்தோடு விசுவாசிக்கின்ற சத்தியங்களை இந்த அறிக்கை கொண்டிருக்கிறது. கர்த்தருடைய பராமரிப்பின் துணையால் சுவிசேஷத் தின் முக்கிய கோட்பாடுகளை நாம் விசுவாசத்துடன் பின்பற்றி வருகிறோம். அவற்றைத் தொடர்ந்து பின்பற்றுவதில் நாம் மிகவும் உறுதியாக இருக்கி றோம். உங்கள் மேல் அதிகாரம் செலுத்திக் கட்டுப்படுத்துவதற்காக இந்தச் சிறு கைநூலை நாம் வெளியிடவில்லை; ஆனால், சத்தியமுரண்பாடு ஏற்படும் காலங்களில் உங்களுக்கு துணை செய்யவும், நீங்கள் விசுவா சிப்பதை உறுதி செய்யவும், நீதியின் பாதையில் உங்களை வழிநடத்தவும் வெளியிடப்படுகிறது. இதன்மூலம் நம்முடைய சபையின் இளம் சந்ததிக்கு ஒரு இறையியல் கைநூல் கிடைக்கிறது; இதில் காணப்படும் வேத வசனங்களைப் பயன்படுத்தி அவர்கள் தங்களுடைய விசுவாசத்தின் நம்பிக் கைக்கான காரணங்களை எடுத்துரைக்க முடியும். . . உங்கள் விசுவாசத்தைக் குறித்து வெட்கப்படாதீர்கள். சத்தியத்தின் காரணமாக நமக்கு ஒரு கொள்கைச் சின்னம் தேவைப்படுகிறது. மகத்தான நற்செய்தியின் நோக்கம் நிறைவேறத் துணைபுரிய அதன் முக்கிய கோட்பாடுகளுக்கு இச்சிறு

நூல் தெளிவான சாட்சியாக விளங்கும்.” அதே வருடம் அவருடைய பிர சங்கங்கள் அச்சில் வெளிவர ஆரம்பித்தன. அவையெல்லாம் தொகுக்கப் பட்டு 63 வால்யூம்களாக இன்றும் நாம் வாசித்தனுபவிக்கும்படியாக அச்சில் இருந்து வருகின்றன.

ஸ்பர்ஜன் தன் வாழ்க்கையில் வேறு பல தொல்லைகளையும் சந்திக்க நேர்ந்தது. பிரசங்கம் கேட்க வருகிறவர்களின் கூட்டம் அதிகரித்தபடியால் நியூ பார்க் ரோடு சபையில் கூட்டங்களை நடத்த முடியாமல் ஸ்பர்ஜன் எக்செட்டர் மண்டபம் (Exeter Hall) என்னும் பெரிய மண்டபத்தை வாடகைக்கு எடுத்துப் பயன்படுத்தி வந்தார். அங்கே கூட்டங்களைத் தொடர்ந்து வைக்க அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் சரே கார்டன்ஸ் மியூசிக் ஹாலில் (Surrey Gardens Music Hall) கூட்டங்களை நடத்த ஆரம்பித்தார். இம்மண்டபத்தில் பத்தாயிரம் பேர்வரை இருந்து பிரசங்கம் கேட்க முடியும். இக்காலத்தில் ஸ்பர்ஜன் புது வீடொன்றுக்கு குடியேறியிருந்தார். அத்தோடு அவருக்கு இரட்டையர்களாக சார்ள்ஸ், தொமஸ் என்று இரு பையன்களும் பிறந்திருந்தனர். சரே கார்டன்ஸ் மியூசிக் ஹாலில் 1856ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் நாள் முதல் கூட்டம் நடக்க ஏற்பாடாயிருந்தது. கூட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே மண்டபத்தில் பெரும் இரைச்சல் ஏற்பட்டது. நெருப்பு! நெருப்பு! என்று அலறல் கேட்க மண்டபத்தின் மாடி கெலரிகள் இடிந்துவிழ ஆரம்பித்தன. முழு மண்டபமே இடிந்துவிடுமோ என்ற நிலை உருவானது. மக்கள் கூட்டம் அலைமோதி மண்டபத்தில் இருந்து வெளியேறும் வழிகளை நாடி ஓடத் தொடங்கியது. அதில் ஏழு பேர் உயிரிழந்ததுடன் முப்பது பேர்வரை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலர் மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர். இதன் காரணமாக பலர் ஸ்பர்ஜனைக் கேளிபேசி குற்றஞ்சாட்டினர். சபையின் உதவிக்காரர்கள் மனமிடிந்து போயிருந்த தங்களுடைய போதகரான ஸ்பர்ஜனுக்கு அதிக ஆறுதல்கூறி அவரை அன்போடு பாதுகாத்தனர். இருந்தபோதும் இந்நிகழ்ச்சியால் மனமிடிந்து சரீர சுகமும், உள்ளமும் குன்றிப்போன ஸ்பர்ஜன் மறுபடியும் சரீர சுகத்தையும் பெலத்தையும் அடைந்து கர்த்தரின் ஆனந்தத்தையும் அன்பையும் ருசி பார்க்க சிறிது காலம் சென்றது.

இருதயத்தைக் கலக்கிய இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்பர்ஜன் மறுபடியும் சரே கார்டன்ஸுக்குப் போய் ஞாயிறு தினம் காலை வேளைகளில் பிரசங்கிக்க ஆரம்பித்தார். கர்த்தர் கருணையுடன் அவருடைய பிரசங்க ஊழியத்தை ஆசீர்வதித்தார். அநேகர் மனந்திரும்பிக் கர்த்தரை விசுவாசித்தார்கள். நியூ பார்க் தெருவின் சபை மேலும் மேலும் எண்ணிக்கையில் வளர்ந்து சபை மக்கள் ஆவியிலும் தேவனின் அறிவிலும் மேலும் வளர்ச்சியடைந்தனர். ஸ்பர்ஜனின் ஊழியத்தின் மூலம் ஏனைய சபைகளும் ஆசீர்வாதத்தைப் பெற்று எழுப்புதலின் பலனை அடைந்தன. இதே காலப் பகுதியில் சபை மக்களையும், ஸ்பர்ஜனின் பிரசங்கத்தைக் கேட்க வருகிறவர்கள் தொகையையும் மனதில் கொண்டு அவர்களனைவரும் வசதியோடு கர்த்தரை ஆராதிக்கக் கூடியவிதத்தில் ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டும் திட்டமும் தீட்டப்பட்டது. அவ்வாறு கட்டப்பட்ட கட்டிடமே மெட்ரொ



ஸ்பர்ஜன் தன் இறுதிக் காலம்வரை போதகராக இருந்த இலண்டன் மெட்ரொபொலிட்டன் டெபர்னேக்கள்

பொலிட்டன் டெபர்னேக்கள் (Metropolitan Tarber-nacle). ஒவ்வொரு ஞாயிறு தினமும் அதில் ஆறாயிரம் பேர் கூடிவந்து ஆராதித்தனர். உண்மையில், அத்தனைபேர் இருந்து ஆராதிக்க இக்கட்டிடம் கட்டப்படவில்லை. இக்கட்டிடம் பூரணமாகக் கட்டி முடிக்கப்படாத நிலையில் முதலாவது கூட்டம் 1860ம் ஆண்டு ஆகஸ்டு 21ம் நாள் நடந்தது. இதில் ஆராதனை நடந்த முதலாவது ஞாயிறு, 1861 ம் ஆண்டு மார்சு மாதம் 31ம் நாளாகும். அப்போது இரு வாரங்களுக்கு கர்த்தரின் கிருபைக்கும் கருணைக்கும் நன்றி கூறுமுகமாக விசேஷ ஆராதனைக் கூட்டங்கள் நிகழ்ந்தன. இந்தக் கட்டிடத்திறப்பு விழா விசேஷ கூட்டங்களின் ஒரு பகுதியாக "கல்வினின் ஐங்கோட்பாடுகள்" (Five Points of Calvinism) என்ற தலைப்பில் ஸ்பர்ஜன் பிரசங்கம் செய்தார். கட்டிடத்திறப்பு விழா நிகழ்ந்த அந்தக் காலப்பகுதியில் அநேகர் தங்களுடைய விசுவாசத்தை ஞானஸ்நானத்தின் மூலம் அறிக்கையிட்டு சபை அங்கத்தவர்களாக இணைந்தனர். இவ்வாறாக கர்த்தர் தொடர்ந்து தன்னுடைய ஊழியக்காரனை ஆசீர்வதித்து வந்தார். புதிய கட்டிடத்தில் கூடியபோது ஸ்பர்ஜன் பின்வரும் வார்த்தைகளை ஆரம்ப வார்த்தைகளாகக் கூறினார்: "இந்தக் கட்டிடம் நிலைத்து நிற்கும் நாள்வரையும், இதற்குள் ஆராதனைக்கு மக்கள் கூட்டம் கூடிவரும்வரையும், இங்கு பிரசங்கிக்கப்படும் செய்தி இயேசு கிறிஸ்துவாக மட்டுந்தான் இருக்கும். என்னைக் கல்வினின் போதனைகளைப் பின்பற்றுகிறவன் என்று அழைத்துக்கொள்வதில் நான் என்றுமே வெட்கப்பட்டதில்லை; பாப்திஸ்து என்ற பெயரைச் சூட்டிக்கொள்வதற்கும் நான் தயங்கவில்லை; ஆனால், நீங்கள் எதை விசுவாசிக்கிறீர்கள் என்று என்னை யாராவது கேட்டால் அதற்கு என்னுடைய பதில், 'இயேசு கிறிஸ்து என்பதாகத்தான் இருக்கும்." எனக்கு முன் இங்கு ஊழியம் செய்த டாக்டர் கில் (Dr. Gill) ஓர் அருமையான இறையியல் நூலை நமக் களித்துவிட்டு சென்றார்; ஆனால், என்னோடு இணைத்துக்கொண்டு நான் கட்டுப்பட்டு நடக்கப் போகிற இறையியல் மனிதனால் எழுதப்பட்டதொன்றல்ல; அது சுவிசேஷத்தின் உள்ளடக்கமாக இருக்கின்ற, அனைத்து இறையியலுக்கும் மூலமாக இருக்கின்ற, அருமையான அனைத்து சத்தியங்களின் மொத்த உருவமாக இருக்கின்ற இயேசு கிறிஸ்துவே. அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார்" என்றார் ஸ்பர்ஜன்.

## ஸ்பர்ஜனின் நற்பணிகள்

இத்தனை மகத்தான செயல்களோடு மட்டும் ஸ்பர்ஜனின் ஊழியம் நின்றுவிடவில்லை. அவருடைய பிரசங்க ஊழியத்தோடும், போதக ஊழியத்தோடும் இணைந்த வேறு பல ஊழியங்களும் ஆரம்பமாயின. இவற்றில்

மிகவும் முக்கியமானதொன்று போதகர்களைத் தயார் செய்யும் கல்லூரி யாகும் (Pastors College). இந்தத் 'தீர்க்கதரிசிகளின் கல்லூரி' ஸ்பர்ஜனின் இருதயத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. ஸ்பர்ஜனின் ஊழியத்தின் மூலம் கர்த்தரை விசுவாசித்த ஒரு இளம் வாலிபன் ஒவ்வொரு வாரமும் அவரோடு சில மணி நேரங்களைச் செலவிட்டு ஊழியத்திற்காகத் தன்னைத் தயார் செய்துகொண்டிருந்தான். அவனை ஆரம்ப மாணவ னாகக்கொண்டு இந்தப் போதகர்களுக்கான கல்லூரி 1855ம் ஆண்டளவில் ஆரம்பித்தது. கல்லூரியின் ஆரம்ப காலப்பகுதியில் ஸ்பர்ஜனுக்குப் பரிச்சயமான சில ஆர்வமிக்க இளம் வாலிபர்கள் அவரிடம் இறையியல் கற்க வந்து, ஸபர்ஜனின் கண்காணிப்பு, போதனை ஆகியவற்றின் மூலம் பலனடைந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சென்றனர். இந்தப் போதகர் களுக்கான கல்லூரியில் ஸ்பர்ஜன் அளித்த வியாக்கியானங்களில் சிலவே *Lectures to My Students* என்ற நூலாக வெளிவந்தது. போதகர்களுக்கான ஊழியப்பயிற்சிக்கு அத்தியாவசியமான அருமையான நூலிது. அத்தோடு 1856ல் Sword and Trowel: A record of combat with sin and labour for the Lord என்ற பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது. இவற்றோடு ஸ்பர்ஜன் அநேக நூல்களையும் வெளியிட்டார். தன்னுடைய சபையில் பயன்படுத்து வதற்காக ஒரு சங்கீத நூலையும், *Trasury of David* என்ற தலைப்பில் சங்கீதப் புத்தகத்துக்கான ஒரு பெரும் விளக்கவுரை நூலையும் வெளியிட்டார். இக்காலத்தில் நல்ல நூல்களை விநியோகிக்கும் ஒரு நிறுவனத்தையும் அவர் ஆரம்பித்தார். பிரசங்கத்தின் மூலமும், நூல்களின் மூலமும் சுவிசேஷத்தை நாடு பூராவும் சொல்லும் வகையில் ஸ்பர்ஜனுக்கு பயிற்சிபெற்ற அநேக ஊழியக்காரர்கள் இருந்தார்கள். விதவைகளுக்கு துணைபுரிய விதவைக் கவனிப்பு நிலையங்கள் உருவாயின; பெற்றோரற்ற ஆண்பிள்ளைகளைப் பராமரிப்பதற்கான ஒரு நிலையமும் ஆரம்பமானது; சிறிது காலத்தில் பெண்களுக்கும் அத்தகைய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரதும் ஆத்துமாவுக்கும், சரீரத்திற்கும் தேவையானதை அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு ஸ்பர்ஜன் உழைத்தபோதும், ஆத்துமாக்களைக் கிறிஸ்துவிடம் அழைத்துவரும் அதிமுக்கிய பணியை அவர் ஒருபோதும் மறந்துவிடவில்லை. மெட்ரொ பொலிட்டன் டெபர்னேக்கள் அநேக நல்லூழியங்களில் ஈடுபட்டு அன்றா டம் எல்லோருக்கும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இலண்டனில் இருபத் தைந்து வருடங்கள் ஊழியம் செய்தபிறகு, ஸ்பர்ஜனின் தலைமையில் அறுபத்தியாறு நிறுவனங்கள் செயல்பட்டுவந்ததாக அவருடைய செயலா ளர் குறிப்பு எழுதி வைத்திருந்தார். இவை அத்தனையும் அன்போடும் கருணையோடும் விசுவாசத்தோடும் அள்ளிக்கொடுத்த அன்புள்ளங் களாலும், கர்த்தருக்காகத் தம்மை அர்ப்பணித்துழைத்த அநேகராலும் கொண்டுநடத்தப்பட்டு வந்தன.

சபையும் ஊழியங்களும் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருந்த இந்தக் காலப்பகுதியில் ஸ்பர்ஜனின் மனைவியின் உடல் நலம் பாதிக்கப்பட்டு படுக்கையில் இருக்கும் நிலை ஏற்பட்டது. அதே வேளை ஸ்பர்ஜனின் உடல்நலமும் பாதிக்கப்பட்டது. அவர் அடிக்கடி

*கடும் சோகத்துக்குள்ளானதுடன் (Depression), கவுட் (Gout) என்ற வாத நோயும் அவரை வாட்டியது. சரீரத்திற்கு ஓய்வளித்து சுகமடைவதற்காக அவர் ஐரோப்பாவிற்கு பயணமானார். தன்னுடைய நூல்களை வெளியிட்ட உற்ற நண்பரான ஜோசப் பாஸ்மோர் (Joseph Passmore) என்பவருடன் தென் பிரான்ஸில் மென்டோன் (Mentone) என்ற இடத்திற்கு ஓய்வு பெறச் சென்றார் ஸ்பர்ஜன். இந்த இடத்திற்கு அவர் பின்னால் அடிக்கடி வந்து ஓய்வுபெற்றார். காலஞ்செல்லச் செல்ல ஸ்பர்ஜன் பிரசங்க ஊழியத்தில் அதிகம் முதிர்ச்சியடைந்தார். அவருடைய சபையில் ஐயாயிரம் அங்கத்தவர்கள் இருந்தனர். தன்னுடய உடல் நலம் அனுமதித்த காலம் பூராவும் வாராவாரம் இலண்டனில் தன்னுடைய சபையிலும், ஏனைய சபைகளிலும் பிரசங்கித்ததோடு வேறு பல ஊழியங்களையும் ஸபர்ஜன் தவறாமல் செய்து வந்தார். ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த உலகில் சாதாரணமாகவே ஏற்படும் பல தொல்லைகளுக்கு மத்தியிலும், கர்த்தர் தனக்களித்திருந்த தாலந்துகளினாலும், அழைப்பின் காரணமாகவும் ஏற்பட்ட பல இடர்களுக்கும் பொறுப்புக்களுக்கும் மத்தியிலும் ஸபர்ஜன் கர்த்தரின் அநேக ஆசீர்வாதங்களைத் தன்னுடைய ஊழியத்தில் பெற்றுக்கொண்டதோடு அநேக விசுவாசிகளோடு நல்ல ஐக்கியத்தையும் அநுபவித்தார்.*

## சத்தியத்தில் வைராக்கியம்

*எல்லோரும் தன்னை நல்லவர் என்று பாராட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்பர்ஜன், பிரசங்கம் செய்தார் என்று நாம் நினைத்துவிடக் கூடாது. நாம் ஏற்கனவே கவனித்ததுபோல், அவர் கல்வினிச பாப்திஸ்து என்பதை வெளிப்படையாக அறிவித்த அவருடைய பிரசங்கங்களும் செயல்களும் அவருக்குப் பல எதிரிகளை உருவாக்கியிருந்தன. இருந்த போதும் ஸ்பர்ஜன் எந்தவித எதிர்ப்புக்கும் அஞ்சாமல் தான் விசுவாசித்த சத்தியத்தை உறுதியோடு பின்பற்றினார். அதன் காரணமாக அவர் சத்தியத்திற்கு உறுதுணையாக இருப்பதற்குத் தேவையானதைச் செய்யவும், சத்தியத்திற்கு ஆபத்து ஏற்பட்டவேளையில் அதைப் பாதுகாப்பதற்காகப் போலிப்போதனைகளை எதிர்த்துப் போராடவும் வேண்டியிருந்தது. அவர் மனந்திரும்பாத நிலையில் இளம் வாலிபனாக இருந்தபோதே ரோமன் கத்தோலிக்கப் போப்பை எதிர்த்து ஒரு நூலை Antichrist and her Brood; or Popery Unmasked என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தார். அவருடைய பத்திரிகையான Sword and Trowel வெளிவருவதற்கு முன்பே அவர் இலண்டனில் சத்தியத்திற்குத் துணை நிற்பதற்காக பல கட்டுரைகளை எழுதிவந்திருந்தார். ஸ்பர்ஜன், நியூ பார்க் தெரு சபையில் பிரசங்கம் செய்து கொண்டிருந்த ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவர்களுக்கான ஆராதனைப் பாடல்கள் என்ற பெயரில் ஒரு நூல் (The Rivulet) வெளிவந்தது. இப்பாடல் புத்தகத்தைப் பற்றிய தன்னுடைய கருத்தை ஸ்பர்ஜன் வெளியிடத் தவறவில்லை. அதில், இந்தப் பாடல் புத்தகத்தைக் கிறிஸ்தவ ஆராதனைப் பாடல் நூலாகக் கருதமுடியாதென்றும், கர்த்தரை இயற்கையில் மட்டும் காண்கிறவிதமாகப் பாடல்கள் இருப்பதாகவும், இதில் வேத இறையியலையே காணமுடியவில்லை என்றும் ஸ்பர்ஜன் கருத்து வெளியிட்டார்.*

அந்த விமர்சனத்தின் இறுதியில் ஸ்பர்ஜன் பின்வருமாறு எச்சரித்திருந்தார்: "வெகுவிரைவில் நாம் சத்தியத்திற்காக துணை நிற்க நேரிடும்: குழந்தைகளின் கையுறைகளுடனல்ல, துப்பாக்கிக் குண்டுகளுடன்; அதாவது, துப்பாக்கிக் குண்டுகள் போன்ற பரிசுத்தமான தைரியத்துடனும், நேர்மையுடனும் சத்தியத்திற்காகத் துணை நிற்க வேண்டும். போய்வாருங்கள்! சிலுவை வீரர்களே, நம் இராஜா நமக்கு முன்னாலிருந்து வழிநடத்துகிறார்." (Spurgeon's Autobiography, 2:268.)

இதற்கு நான்கு வருடங்களுக்குப் பின்பு 1860ல், ஜே. பி, பிரவுன் (J. B. Brown) என்ற ஒரு போதகர், The Divine Life in Man என்ற தலைப்பில் ஒரு நூலை வெளியிட்டார். அந்த நூலுக்கெதிராக கருத்துத் தெரிவித்து, "அது ஆபத்தான போலிப்போதனை . . . சுவிசேஷத்திற்கு எதிரானது" என்று எழுதிய ஏழு போதகர்களில் ஸ்பர்ஜனும் ஒருவராக இருந்தார். இளம் வாலிபர்களுக்கு அவர், "புத்திசாலித்தனம் என்ற பெயரில், இறையியல் பூர்வமான வரலாற்றில் எழுந்த கிருபையின் போதனைகளை எதிர்த்துப் பேசும் எந்தப் பிரசங்கத்திற்கும் நீங்கள் செவிகொடுக்கக்கூடாது" என்று அறிவுரை கூறினார். ஸபர்ஜன் தன்னுடைய பிரசங்க மேடையிலிருந்தும், எழுத்தின் மூலமும் சத்தியத்திற்காகத் தொடர்ந்து குரல்கொடுத்துப் போராடினார்.

1864ல் ஸ்பர்ஜன் மறுபடியும் சிம்மமாய்க் கர்ஜித்தார். இம்முறை Baptismal Regeneration என்ற தலைப்பில் அவருடைய பிரசங்கம் அமைந்திருந்தது. அந்தப் பிரசங்கத்தை அச்சிடுமுன் அவர் தன்னுடைய வெளியீட்டாளர்களை எச்சரித்தார். அதை வெளியிடுவதன் மூலம் அவருடைய நூல்களின் விற்பனை பாதிப்படையும் என்று தான் நினைப்பதாக ஸ்பர்ஜன் தெரிவித்தார். சுவிசேஷக் கோட்பாடுகளை விசுவாசிக்கும் ஆங்கிலிக்கன் சபைப் போதகர்களை அவர் மதித்து அவர்களோடு நட்புக்கொண்டிருந்தபோதும், அவர்களுடைய போதனையும், வழக்கமுமான குழந்தைகளுக்கு ஞானஸ்நானமளிப்பதை ஸ்பர்ஜன் தவறானதாகக் கருதினார். குழந்தைகளுக்கு ஞானஸ்நானமளித்து அதன்மூலம் அவர்கள் மறுபிறப்படைகிறார்கள் என்று கூறுவது வேதபோதனையான நீதிமானாக்குதலுக்கு நேரெதிரான நடைமுறையாக இருப்பதாகவும் எண்ணினார். எந்தவிதமான உள்நோக்கமும் கொண்டிராமல், அவர்கள் மீது எந்தவிதக் காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல், இந்தப் போதனையைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் கர்த்தருடைய வேதத்திற்கு விசுவாசமாக நடந்துகொள்ளவில்லை என்று ஸ்பர்ஜன் கருத்துத் தெரிவித்தார். ஸ்பர்ஜன் தன்னுடைய விசுவாசத்தின் அடிப்படையில் தான் இந்தக் கருத்துகளை வெளியிட்டிருக்கிறார் என்பதை உணர்ந்திருந்தபோதும், அவருடைய நண்பர்களில் பலர் அவரைவிட்டு விலகிச் சென்றனர். இருந்தபோதும், அவருடைய பிரசங்கங்களினதும், நூல்களினதும் விற்பனை தொடர்ந்து அதிகரிக்கத்தான் செய்தது.

## பாப்திஸ்து யூனியனுடனான போராட்டம் (Down-Grade Controversy)

இதுவரை ஸ்பர்ஜனின் வாழ்க்கையில் நாம் பார்த்த பிரச்சனைகளே பாப்திஸ்து யூனியனுடனான அவருடைய நீண்டகாலப் போராட்டத்திற்கு

*ஆரம்பமாக இருந்தது மட்டுமல்லாமல் அவருடைய உயிரையும் குடித்தது என்று கூறலாம். 1860களில் பாப்திஸ்து சபைகளுக்கு பெரும் எதிர்கால மிருப்பதாக ஸ்பர்ஜன் பேசி வந்திருக்கிறார். அதேசமயம் பல இடங்களில் வேதத்தைப் படிப்பதிலும், ஆராய்வதிலும் ஒரு புதிய அனுகுமுறை கையாளப்படுவதும் ஆரம்பமாயிருந்தது. இதை* Higher Criticism *அல்லது* New Theology *என்று அழைப்பார்கள். இந்தப் புதிய அனுகுமுறை வேதசத்தி யங்களை பரிசுத்த ஆவியானவர் தந்துள்ளபடி ஏற்றுக்கொள்ள மறுத்து, நவீன விஞ்ஞான அனுகுமுறையின்படியும், வரலாற்றுக் கண்டுபிடிப்புகள் மூலமும் ஆராய்ந்து விளக்கமளிக்க முற்பட்டது. இறுதியில் அது சுவிசேஷத்தின் அடிப்படைப் போதனைகளை மறுதளிப்பதிலும், நடை முறைக் கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையின் வல்லமைக்கு பெரும் தீங்கு செய்வதிலும் போய் முடிவதாக இருந்தது.*

*இந்தப் புதிய இறையியல் அனுகுமுறை இங்கிலாந்திலுள்ள பாப்திஸ்து சபைகளில் பரவ ஆரம்பித்ததோடு, பாப்திஸ்து சபைப் போதகர்களினாலும் வரவேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் ஸ்பர்ஜன் போதகராக இருந்த மெட்ரபொலிட்டன் டெபர்னேக்கள் சபையும், நூற்றுக்கு மேற்பட்ட ஏனைய பாப்திஸ்து சபைகளும் இணைந்து பாப்திஸ்து யூனியன் என்ற அமைப்பில் அங்கம் வகித்து வந்தன. இந்தப் புதிய தவறான இறையியல் அனுகுமுறையைப் பற்றி ஸ்பர்ஜன் பாப்திஸ்து யூனியன் அதிகாரிகளுடன் கடிதத் தொடர்பு கொண்டது மட்டுமன்றி அவர்களைச் சந்தித்துப் பேசி இதற்கு ஒரு தீர்வு காணவும் முயன்றார். பாப்திஸ்து யூனியன் சுவிசேஷக் கோட்பாடுகளை அப்பழுக்கில்லாமல் விளக்கும் உறுதியானதொரு விசுவாச அறிக்கையை வெளியிட்டு அந்த விசுவாச அறிக்கைக்கு யூனிய னில் அங்கம் வகிக்கும் அத்தனை சபைகளும் உடன்பட்டு நடக்க வேண் டும் என்றும், அப்படியில்லாவிட்டால் அவர்கள் தொடர்ந்து யூனியனில் இருக்க முடியாது என்று தீர்மானித்தால் இந்தப் புதிய இறையியல் அனுகுமுறையை மட்டுமல்ல அது போன்று பின்னால் தலைதூக்கக்கூடிய எந்தப் போலித்தனத்தையும் எதிர்த்து நிற்க முடியும் என்றுணர்ந்த ஸ்பர்ஜன், யூனியன் அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஸ்பர்ஜனின் இந்தக் கோரிக்கை பாப்திஸ்து யூனியனின் கூட்டத்தில் பலராலும் நிராகரிக்கப்பட்டது. அது எந்தளவுக்கு பாப்திஸ்து யூனியனில் புதிய போலிப்போதனை பரவி நின்றது என்பதைத் தெளிவாக உணர்த்தியது. தங்களுடைய மனச்சாட்சியின் சுதந்திரத்தைக் காக்கிறோம் என்ற பெயரில் அநேக நல்ல மனிதர்களும்கூட யூனியனில் ஸ்பர்ஜனுடைய தீர்க்கதரிசனம் போன்ற எச்சரிக்கைகளை உணராமல் அவருடைய கோரிக்கைக்கு எதிராக வாக்களித்தனர். முழுக்கு ஞானஸ்நானத்தை மட்டும் உறுதியாகப் பின்பற்றினால் போதும் என்றும் வேறு போதனை களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சபையும் தன்னுடைய மனச்சாட்சி அனுமதிக்கும் வழியில் போகலாம் என்ற எண்ணத்தை பாப்திஸ்து யூனிய னில் உள்ள அநேக சபைகள் பின்பற்றின. இதனால் வரப்போகும் பெரும் போராட்டத்திற்கான அடையாளங்கள் அதிகரிக்க ஆரம்பித்து 1887ல் சத்தியப் போராட்டத்திற்கான பெரும் புயல் வீச ஆரம்பித்தது.*

இந்த வருடத்தில் ஸ்பர்ஜன் பாப்திஸ்து போதகரும் தன்னுடைய நெருங்கிய நண்பருமாயிருந்த ரொபட் சின்ட்லர் (Robert Shindler) என்பவர் *Down-Grade* என்ற தலைப்பில் எழுதிய இரண்டு ஆக்கங்களைத் தன்னுடைய பத்திரிகையான *The Sword and the Trowel* ல் வெளியிட்டார். *Down-Grade Controversy* என்றழைக்கப்பட்ட போராட்டம் அன்றிலிருந்து ஆரம்பமாயிற்று. ஆகஸ்டு மாதம் 1887ல், ஸ்பர்ஜனும் ஒரு ஆக்கத்தை *Another Word concerning the Down-Grade* என்ற தலைப்பில் வெளியிட்டார். அதில் "இதற்குப் பிறகு, எந்தளவுக்கு பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப் பட்ட சத்தியத்தை மட்டும் பின்பற்றி வாழ்ந்து வருகிறவர்கள் அதை நிராகரித்து வேறொரு சுவிசேஷத்தைப் பின்பற்றுகிறவர்களோடு இணைந்து பணி செய்ய முடியும் என்ற அவசியமான கேள்வி எழுகிறது. கிறிஸ்தவ அன்பு அவசியமானதுதான்; பிரிவினைகள் மோசமானவைதான்; ஆனால், நாம் எந்தளவுக்கு சுவிசேஷத்தை நிர்மூலமாக்கி சத்தியத்தைவிட்டு விலகிப் போகிறவர்களோடு சகோதர உறவு வைத்திருக்க முடியும்? கர்த்தருக்குரிய நம்முடைய கடமைகளை சரிவர நிறைவேற்ற வேண்டுமானால் இந்தச் சிக்கலான கேள்விக்கு எம்மால் பதிலளிக்காமல் இருக்க முடியாது." என்று எழுதியிருந்தார் ஸ்பர்ஜன்.

ஸ்பர்ஜன் தன்னுடைய பத்திரிகையில் வெளியிட்ட ஆக்கங்கள் அன்று பரவிக்கொண்டிருந்த இறையியல் போலித்தனத்தையும், அதன் விளைவாக ஏற்படும் ஆத்மீக சோர்வையும், ஆதமீக மரணத்தையும் வெளிப்படையாக சுட்டிக்காட்டின. தொடர்ந்து வேறு ஆக்கங்களும் பத்திரிகையில் வெளிவந்தன. "Reply to Sundry Critics," The Case Proved," A fragment on the Down-Grade Controversy." ஆகிய ஆக்கங்கள் வெளியிடப்பட்டன. சத்தியத் துக்கு எதிராக நடந்து வருகிறவர்களோடு தொடர்ந்தும் பாப்திஸ்து யூனிய னில் இருக்க முடியாது என்ற முடிவுக்கு ஸ்பர்ஜன் வந்தார். அக்டோபர் 1887ல் ஸ்பர்ஜன் பின்வருமாறு எழுதினார், "நாம் உயிருக்குயிராக நேசித்துப் பின்பற்றுகிற சத்தியங்களுக்கு நேரெதிரானவற்றைப் பின்பற்றுகிறவர் களோடு நாம் கூட்டுச்சேரவேண்டுமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது . . . எத்தனையோ விஷயங்களில் நாம் விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும் என்பதை உணர்கிறோம், ஆனால், சில விஷயங்களில் விட்டுக்கொடுத்து ஐக்கியத்தில் வருவது சத்திய நிந்தனையாகும்." (Sword and Trowel, October 1887.)

அதே மாதம், சத்தியத்தை நிராகரித்த காரணத்திற்காக பாப்திஸ்து யூனியனைவிட்டு விலகினார் ஸ்பர்ஜன். "தவறு என்று நமக்குத் தெரிகின்ற மோசமான போலிப்போதனையோடு ஐக்கியத்தில் வருவது பாவத்தில் பங்கு கொள்வதாகும்." என்று எழுதினார் ஸ்பர்ஜன். அப்போது அவருக்கு 53 வயது. ஸ்பர்ஜன் தனிப்பட்ட முறையில் பாப்திஸ்து யூனியனைவிட்டு விலகத் தீர்மானித்தபோதும் அவருடைய சபை தாங்கள் நேசிக்கும் போத கரின் வழியைப் பின்பற்றத் தீர்மானித்தது. யூனியனைவிட்டு விலகிய போதும் ஸ்பர்ஜன் ஒரு யூனியனையோ அசோஷியேசனையோ உருவாக்கு வதற்கு எந்த முயற்சியிலும் ஈடுபடவில்லை. அவர் அமைதியாக இருந்தார். தான் பத்திரிகையில் காரண காரியங்களோடு விளக்கி வெளியிட்ட

*ஆக்கங்களை வாசித்து ஒவ்வொருவரும் நீதியான முடிவை எடுக்கட்டும் என்று காத்திருந்தார் ஸ்பர்ஜன். 1887ல் ஸ்பர்ஜன் எல்லோருமறிந்து கொள்ளும்படியாக பின்வருமாறு சொன்னார்: "நாங்கள் பாப்திஸ்து யூனியனைவிட்டு விலகி அதனோடுள்ள சகல தொடர்புகளையும் துண்டித் துக் கொள்கிறோம். பாப்திஸ்து சபைகள் ஒவ்வொன்றும் எல்லா வசதிகளை யும் கொண்டமைந்த தன்னாதிக்கமுள்ள சபைகள். சபைகள் தாமாக விரும்பி இணைந்து கொண்ட அமைப்பே பாப்திஸ்து யூனியனானபடியால் அதிலிருந்து ஒரு தனிமனிதனோ அல்லது சபையோ விலகிக்கொள்வது மிகவும் சாதாரணமான விஷயம். இப்போது இருக்கும் பாப்திஸ்து யூனியன் எவர் மீதும் எந்தவிதமான ஒழுங்கு நடவடிக்கையையும் எடுப்பதற்கு அதிகாரம் கொண்டிருக்கவில்லை. அது எந்தவிதமான உறுதியான விசுவாச அறிக்கையையும் கொண்டிராததால், முழுக்கு ஞானஸ்நானம் மட்டுமே வேதபூர்வமான ஞானஸ்நானம் என்று பறைசாற்றிக் கொள்வதைத்தவிர சத்தியத்திற்கெதிரான எந்தவிதமான போலிபோதனைகளையும் ஏற்றுக் கொள்ளாது என்று நம்புவதற்கான எந்த ஆதாரமும் இல்லை. மிகவும் மோசமான போலிப்போதனைகளைக்கூட பாப்திஸ்து யூனியன் அனுமதிக் கிறதே என்று அதைக்குறை கூறுவதில் எந்தப் பயனுமில்லை. ஏனெனில், தான் விரும்பினாலுங்கூட தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அதனால் முடியாது. ஆரம்பத்தில் அதை உருவாக்கியவர்கள் 'ஒழுங்கின்மையும் வெறுமையாகவுமே' (ஆதி. 1:2) அதை அமைத்தார்கள்; ஆகையால், அது அப்படியேதான் இருந்தாக வேண்டும்."*

*பாப்திஸ்து சபைகளுக்கான ஒரு புதிய அமைப்பை உருவாக்கவேண்டும் என்று வற்புறுத்தியவர்களைப் பார்த்து ஸ்பர்ஜன் பின்வருமாறு பதிலளித் தார், "தங்களைத் தாங்களே சரியான வகையில் ஆண்டு, தீர்மானங்களை எடுத்துவருகின்ற சபைகளுக்கு, புறத்தில் இருந்து அவற்றின் தேவைகளைக் கவனிக்க ஒரு அமைப்பு அவசியமில்லை. அத்தகைய சபைகள் எந்தவிதத் தடைகளுமில்லாமல் தாங்கள் உறவுகொள்ள வேண்டிய சபைகளை நிச்சயம் தேடிக்கொள்ளும்; தங்களுடைய எல்லைகளை ஆக்கிரமிக்கிறவர் களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும். ஒவ்வொரு கப்பலும் கடலில் செல்லும் வசதிகளைக் கொண்டிருக்கின்றபோது, அதைக் கட்டுப் படுத்துகிற எதையும் அறுத்தெறிய வேண்டும். நமக்கருகில் நம் கொடியோடு நமக்கு நெருக்கமான ஒரு நேசக் கப்பல் போகிறதென்று தெரிகின்றபோது, நாம் விலகிப் போகத் தோவையில்லை. தன்னாதிக்க அமைப்பாகிய தனிக்குடித்தனத்தோடு, கிறிஸ்துவுக்குள் விசுவாசமாயிருக்கின்ற அத்தனை பேரையும் அரவணைக்கின்ற ஆவியின் அன்போடு, இந்த இக்கட்டான சமயத்தில் தமக்கேற்ற பாதுகாப்பை சுவிசேஷத்தை நேசிக்கின்ற அனை வரும் தேடிக்கொள்வார்கள்· (இங்கே ஸ்பர்ஜன், நாம் எந்த சபையோடும் சேராமல் தனிமையில் இருக்கவேண்டும் என்று சொல்லவரவில்லை; ஆனால், சில சமயங்களில் அதுவே அவசியமான தற்காலிகமான நல்ல வழியாக இருக்கும் என்கிறார். ஸ்பர்ஜன், ஆழமான, பரந்த கிறிஸ்தவ ஐக்கியத்தை விரும்பினார் என்பதை இதற்குப் பிறகு அவர் பேசிய பேச்சுக் களில் இருந்து அறிந்துகொள்ளலாம். அசோஷியேசன்கள், யூனியன்கள்*

போன்றவை அவசியமற்றவையாக இருந்தாலும், ஒரே கோட்பாடுகளைப் பின்பற்றும் உள்ளூர் சபைகளோடு நெருக்கமான உறவையும், ஐக்கியத்தையும் அநுபவிப்பதே சிறப்பானது என்பதை ஸ்பர்ஜன் நம்பினார். அதுவே வேதபூர்வமானது என்பது இந்த ஆக்கத்தின் ஆசிரியருடைய கருத்தாகவும் இருக்கிறது.) எந்த அமைப்பும் ஏற்படுத்தித் தரக்கூடிய பரந்த ஐக்கியத்தை அநுபவிக்கும் நாள் வரட்டும்; அந்த நாளில் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கின்ற எல்லோரும் இணைந்து தங்களுடைய ஐக்கியத்தை வெளிப்படுத்தட்டும்." (Sword and Trowel)

எல்லாப் பக்கங்களிலும் இருந்து ஸ்பர்ஜன் தாக்குதலுக்குள்ளானார். கர்த்தரின் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு பாப்திஸ்து சபைகள் மட்டுமல்லாமல் பலர் மத்தியில் ஆசீர்வதிக்கப்பட்டு வந்த ஸ்பர்ஜன் இப்போது தான் தனிமைப்பட்டிருப்பதை உணர்ந்தார். பாப்திஸ்து யூனியனின் பொதுக்குழு கூடிவந்தபோது ஸ்பர்ஜனின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க வேண்டியிருந்தது. 1888ல் பாப்திஸ்து யூனியன் ஒரு மகாநாட்டுக்கு கூடி வந்தது. அதில் யூனியன் சுவரில் இருந்த வெடிப்புகளைப் பூசிமெழுகும் முயற்சிகள் எடுக்கப்பட்டது. பாப்திஸ்து யூனியன் சுவிசேஷ மொழியைப் பயன்படுத்தி அறிக்கைவெளியிட்டபோதும் அது மிகக் கவனமாக அப்போது பரவிக்கொண்டிருந்த போலிப்போதனையான 'புதிய இறையியல்' பற்றி எந்தக்குறையும் சொல்லாமல் தவிர்த்தது. ஸ்பர்ஜனின் சொந்தச் சகோதரரும் – என்ன நடக்கின்றதென்பதையே உணராமல் – யூனியனின் அறிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தார். தமது செய்கை சுவிசேஷ ஐக்கியத்தை வலுப்படுத்தும் என்று அவர் தவறாக நம்பினார். வாக்கெடுப்பு நடந்தபோது அதற்கெதிராக வாக்களித்தவர்கள் ஏழுபேர் மட்டுமே; ஆதரவாக வாக்களித்தவர்கள் இரண்டாயிரம் பேர். ஆதரவாக வாக்களித்த சிலர் தாங்கள் ஸ்பர்ஜனுக்கு ஆதரவாக வாக்களிப்பதாக தவறாக எண்ணிக் கொண்டு வாக்களித்தனர். இறுதியில் நடந்து முடிந்த வாக்கெடுப்பு பெரும் வெற்றியாகக் கருதப்பட்டதோடு, ஸ்பர்ஜனின் குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த பதிலாகவும் கூறப்பட்டது. பாப்திஸ்து யூனியன் அன்றிலிருந்து தொடர்ந்து சீரழிய ஆரம்பித்தது; அது வெகுவிரைவிலேயே ஆர்மீனியனிசத்தைப் பின்பற்றிய ஜெனரல் பாப்திஸ்து சபைகளோடு இணைந்து தன்னுடைய சுவிசேஷக் கோட்பாட்டு சத்தியங்களையெல்லாம் அடியோடு இழந்தது.

இதெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை ஸ்பர்ஜனின் சரீர சுகம் தொடர்ந்து குன்றி வந்தது. சத்தியத்துக்கு ஆதரவாக அவர் நடத்தி வந்த போராட்டமும், ஏனைய ஊழியப் பொறுப்புகளும் ஸ்பர்ஜனின் சரீரத்தைப் பெருமளவில் பாதித்தன. இவையெல்லாவற்றுக்கும் மத்தியில் ஸ்பர்ஜனுக்கு அதிக துயரமளித்தது அவருடைய போதகர்களுக்கான கல்லூரியில் பயின்று வந்த மாணவர்கள் அவருக்கெதிராகக் குரலெழுப்பியதே. ஸ்பர்ஜன் தொடர்ந்து போலிப்போதனைகளுக்கெதிராக நடவடிக்கைகள் எடுத்தது அவர்களில் சிலருக்குப் பிடிக்காமல் இருந்தது. ஸ்பர்ஜன் தன்னுடைய கல்லூரியை உடனடியாகக் கலைத்துவிட்டு புதிதாக ஒன்றை ஆரம்பித்தார்.

*இத்தனைக்கும் மத்தியில் ஸ்பர்ஜனின் நடவடிக்கைகள் அனைத்தும் முற்றும் சரிதான் என்பது நிரூபணமாயிற்று. அவருக்கெதிராக இருந்த போதகர்கள் வேதம் எந்தவிதத் தவறுகளுமில்லாத கர்த்தருடைய வார்த்தை என்பதை விசுவாசிக்கவில்லை, மனிதர்கள் பாவிகள் என்பதை விசுவா சிக்கவில்லை, தேவமனிதனாகிய இயேசு கிறிஸ்து மட்டுமே கர்த்தருக்கும் மனிதனுக்குமிடையிலான மத்தியஸ்தர் என்பதை விசுவாசிக்கவில்லை, கிறிஸ்துவின் பரிகாரப் பலியை விசுவாசிக்கவில்லை, பரிசுத்த ஆவியின் கிரியைகளை விசுவாசிக்கவில்லை, இறுதியில் நரகமிருப்பதையும், பரலோக வாழ்வையும்கூட விசுவாசிக்கவில்லை. சுருக்கமாகக் கூறப்போனால், அவர்கள் பாவத்தில் உழன்று கொண்டிருக்கும் மனிதர்களுக்கு விடுதலை யளிக்கக்கூடிய ஒரே சத்தியத்தை முற்றாகக் கைவிட்டிருந்தனர். இதன் காரணமாக சபைகள் ஆத்மீக அழிவை நோக்கி வேகமாக நகர்ந்து மோசமான முடிவைச் சந்தித்து மடிந்தன. சபை சபையாக இயெசு கிறிஸ்துவையும், அவருடைய சுவிசேஷத்தையும் காலில் போட்டு மிதித்தன.*

*இயேசு கிறிஸ்துவின் நாமத்துக்கு ஏற்பட்டிருந்த இழுக்காலும், சத்தியத் துக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தையும் பார்த்து வருந்திய ஸ்பர்ஜனின் உடல் நிலை மிகவும் பாதிப்புக்குள்ளானது. உணர்ச்சிவசப்பட்ட அவருடைய ஆத்துமா மிகவும் துன்பமடைந்தது. ஸ்பர்ஜன் அநாவசியமான முரண் பாடுகளை விரும்பாதவர். அவற்றை அவர் எப்போதும் வெறுத்தார். கிறிஸ்துவின் நாமத்தின் மகிமைக்கு ஆபத்துவரக்கூடாதென்பதற்காகவே அவர் போராட வேண்டியிருந்தது. அதுவும் அவர் இறக்கும்வரை அந்தப் போராட்டத்தைக் கைவிடவில்லை. பிரசங்கியின் வல்லமையைப் பற்றி அவர் ஒருமுறை தன்னுடைய போதகர்களுக்கான கல்லூரி மாணவர் களுடன் பேசும்போது, “சுவிசேஷத்தின் இறக்கைகளை நாம் இப்போது வெட்ட ஆரம்பித்தாலோ அல்லது சத்தியத்தை வெறுக்க ஆரம்பித்தாலோ அது நமது குழந்தைகளை சந்ததி சந்ததியாகப் பாதிக்கும். இப்போது என்ன நடக்கிறதென்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. இதெல்லாம் பர லோகத்தோடு சம்பந்தப்பட்ட விஷயங்கள். என்னைப் பொறுத்தவரையில் வரப்போகிற ஐம்பது வருடங்களுக்கு நான் நாய்களுக்கு உணவாக இருந்து விட்டுப்போனாலும் பரவாயில்லை; எதிர்காலம் எனக்கு சரியான தீர்ப்பளிக்கும். கர்த்தருக்கு முன்பாக நான் நேர்மையாக இருந்திருக்கிறேன். சகோதரர்களே! அதையே நீங்களும் செய்ய வேண்டும்.” என்றார்.* (C. H. Spurgeon, “The Preacher’s Power, and the Conditions of Obtaining it,” in *An All-round Ministry*, pp. 361-2.)

## ஸ்பர்ஜனின் இறுதிக் காலம்

*ஜூலை மாதம் 1888ல் அவருடைய உடல் நலம் மிகவும் மோசமாகி அவரால் எழுதக்கூட முடியாத நிலையேற்பட்டது. அந்த வருடம் டிசம்பர் மாதம்தான் அவர் பிரான்சில் மென்டோனுக்கு ஓய்வெடுப்பதற்காகப் போக முடிந்தது. அந்த வருடத்தின் இறுதியில் மென்டோனில் அவர் கீழே விழுந்ததால் 1889ம் பெப்ரவரி மாதமே அவர் மறுபடியும் இலண்டனுக்கு வர முடிந்தது. அந்த வருடம் அவர் முடிந்தவரை மிகவும்*

*கடுமையாக உழைத்தார். ஆனால், நவம்பரில் தன்னுடைய சரீர வலியைப் போக்கிக்கொள்ள அவர் மறுபடியும் மென்டோனுக்கு போக நேர்ந்தது. 1890 வேனிற்காலப் பகுதியில் அவர் மறுபடியும் இலண்டனுக்கு வந்த போதும் மீண்டும் சத்தியப்போராட்டத்திற்கான எதிர்ப்புகளை சந்திக்க நேர்ந்தது. இன்னுமொரு பனிக்காலத்தை அவர் மென்டோனில் கழித்தார். 1891 ம் ஆண்டு ஆரம்பத்தில் அவருடைய உடல்நிலை தேறிவருவதுபோல் தோன்றியது. இருந்தாலும் தொடர்ந்து நிகழ்ந்து வந்த சத்தியப்போராட்டம் அவரால் தாங்க முடியாததாயிருந்தது. போராட்டத்தின் தன்மையையும், அதன் விளைவுகளையும் ஸ்பர்ஜன் நன்குணர்ந்திருந்தார். மார்ச் 1891ல் அவருடைய கல்லூரியில் போதகப் பயிற்சிபெற்ற மாணவரான ஈ. எச். எலிஸ் அவுஸ்திரேலியாவுக்கு பயணமானார். அவரைப் பார்த்து ஸ்பர்ஜன் சொன்னார், "போய் வாருங்கள் எலிஸ்; என்னை நீங்கள் மறுபடியும் பார்க்க முடியாது. இந்தச் சத்தியப் போராட்டம் என்னை அழித்துக் கொண் டிருக்கிறது."* (Autobiography, 3:152.) *அதற்கு அடுத்த மாதத்தில் அவருடைய உடலநிலை மிகவும் மோசமடைந்தது. இதனால் பிரசங்க ஊழியத்திலிருந்து அவர் ஓய்வெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.*

*அதற்குப் பிறகும் அவர் மேலும் சில வாரங்களுக்கு பிரசங்கம் செய்தார். தன்னுடைய கடைசிப் பிரசங்கத்தை ஸ்பர்ஜன் 1891ம் ஆண்டு ஜூன் 7ம் நாளில் அளித்தார். அதற்கு அடுத்த தினம் அவர் தன்னுடைய குழந்தைப் பருவகாலத்தைச் செலவிட்ட ஸ்டெம்போர்ன் என்ற ஊருக்குப் போனார். சில நாட்கள் மட்டுமே அங்கு தங்கியிருந்துவிட்டு மறுபடியும் இலண்ட னுக்குத் திரும்பினார். அதன்பின் மூன்று மாதங்களுக்கு அவருடைய உடல் நிலை சீரற்று இருந்தது. அக்டோபர் மாத அளவில் சிறிது குணமடைந்த ஸ்பர்ஜன் 26ம் நாள் மென்டோனுக்குப் போகத் தயாரானார். இம்முறை அவருடைய துணைவியார் சுசானாவும் அவருடன்கூடப் பயணமானர். சுசானாவின் உடல்நிலை இதற்குமுன்னால் இத்தகைய பயணங்களுக்கு உதவவில்லை. ஸ்பர்ஜன் இவ்வுலகைவிட்டுப் போகவேண்டிய காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. 1892ம் ஆண்டு ஜனவரி மாதம் 17ம் நாள் ஸ்பர்ஜன் கடைசி தடவையாக ஆராதனையில் கலந்துகொண்டார். அன்று அவர் ஆராதனை முடிவில் ஆராதனைப் பாடலை அறிவித்தார். அந்த மாத இறுதியில் அவரால் பேசவும் முடியாமல் போனது. ஜனவரி 28ம் நாள் அவருடைய உடல்நலம் மிகவும் மோசமாகி நினைவில்லாத நிலையை அடைந்தார். 1892ம் ஆண்டு ஜனவரி 31ம் நாள் மாலை ஸ்பர்ஜன் இறைவ னடி சேர்ந்தார். அவருடைய போராட்டம் அன்று ஒரு முடிவுக்கு வந்து ஆண்டவரின் ஆனந்தத்தை அடைந்தார் ஸ்பர்ஜன்.*

*ஸ்பர்ஜனின் உடலைத் தாங்கிய வண்டி மெதுவாக இலண்டனை நோக்கிப் புறப்பட்டு பெப்ரவரி 8ம் நாள் திங்கட்கிழமை இலண்டனை அடைந்தது. ஆயிரக்கணக்கானவர்கள் அவருக்கு கடைசி மரியாதை செலுத்த வந்தனர். எல்லோருக்கும் இடம் கொடுப்பதற்காக ஐந்து கூட்டங் கள் நடத்தப்பட்டன. பெப்ரவரி 11ம் நாள் வியாழக்கிழமை கடைசிக்கூட்ட ஆராதனை ஸ்பர்ஜனுக்கு மிகவும் பிடித்தமான ஆராதனைப் பாடலுடன் நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு நோர்வுடில் இருந்த மயானத்தை நோக்கி*

ஆயிரக்கணக்கானோரின் கண்ணீரஞ்சலிக்கு மத்தியில் அவருடைய சரீரத்தைத் தாங்கிய வண்டி நகர்ந்தது. ஆயிரக்கணக்கானோர் வழிநெடுக வீதிகளில் கூடிநின்று அவருக்கு அஞ்சலி செலுத்தினர். ஆர்ச்சிபால்டு பிரௌன் தன்னுடைய உற்ற நண்பருக்கு விடைகூறி கடைசி வார்த்தைகளை உதிர்த்தபோது, “போய் வாருங்கள்” என்று கூறாமல், “இரவு வணக்கம்” என்று கூறி முடித்தார்.

இத்தகைய குணநலன்களும், சிறப்பும் கொண்ட வரலாற்றுப் புகழ் பெற்ற பிரசங்கியும், மாமனிதருமான ஸ்பர்ஜனின் வாழ்க்கையை எவ்வாறு தொகுத்துச் சொல்வது?

### 1. ஸ்பர்ஜன் எதிலும், எல்லாவற்றிலும் கிறிஸ்துவையே முதன்மைப் படுத்தினார்.

“நான் கல்வினிசப் போதனைகளைப் பின்பற்றுகிறேன் என்று பறைசாற்றிக்கொள்ளுவதற்கு வெட்கப்படவில்லை; பாப்திஸ்து என்று என்னை அறிவித்துக்கொள்ளுவதற்கும் நான் தயங்கவில்லை; ஆனால், எந்னுடைய விசுவாசம் என்ன, என்று எவராவது கேட்டால், இயேசு கிறிஸ்து என்னும் இறையியல் கோட்பாட்டிற்கே நான் என்னை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறேன். சுவிசேஷத்தின் மொத்த உருவானவரும், எல்லா இறையியலையும் தன்னில் கொண்டிருப்பவரும், சகல இறையியல் போதனைகளுக்கும் மூலகர்த்தாவும், நித்திய வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும் இருக்கும் இயேசு கிறிஸ்துவே என்னுடைய விசுவாசத்தின் உயிர்நாடி.”

இயேசு கிறிஸ்துவை அனைத்திலும் முதன்மைப்படுத்துகிற ஸ்பர்ஜனின் வைராக்கியமான விசுவாசமே அவருடைய விசுவாச அறிக்கைக்கும், சகல போதனைகளுக்கும் மூலகாரணமாக இருந்ததோடு, கிறிஸ்துவை எக்காலத்திலும் முதன்மைப்படுத்துவதையும் நிர்ப்பந்தித்தது. கிறிஸ்துவால் இரட்சிப்பை அடைந்த நாள் முதல் அவருக்கு கிறிஸ்துவே எல்லாமாக இருந்தார். இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருப்பதும், அவருக்காகப் போராடுவதும் மற்றவர்களிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்தி விலக்கி வைக்குமானால், ஸ்பர்ஜனைப் பொறுத்தவரையில் இரட்சகரும், ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து வாழ்வதே இலட்சியமாக இருந்தது. எல்லாத் தலைவர்களிலும் மேலான அவருடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஸபர்ஜன் விசுவாசத்தால் கட்டுப்பட்டிருந்ததை நாம் விளங்கிக்கொள்ளாவிட்டால் அவரை நாம் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது.

### 2. ஸ்பர்ஜன் கிறிஸ்துவின் வார்த்தையாகிய வேதத்திற்கு முழுதும் கட்டுப் பட்டிருந்தார்.

கர்த்தர் தனக்குத் துணை செய்தவரையில் ஸ்பர்ஜன் வேதத்தை முழுமையாக விசுவாசித்து, அதற்கு அடிபணிந்து, அதிலிருந்த போதனைகளை மட்டுமே பிரசங்கித்து, அவற்றிற்கு தன் வாழ்வில் கீழ்ப்படிந்து வந்தார். அதுவே அவருடைய ஆயுதமாக இருந்தது. “தாக்குவதற்கு நாம் வாளை உருவினாலும், நம்மைப் பாதுகாத்துக்கொள்ள கவசத்தை ஏந்தினாலும் அவற்றை வேதத்தில் இருந்து மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்

*டும். அவற்றை அடைவதற்கு மற்றவர்களுக்கு வேறு இடங்கள் இருக்குமானால், எனக்கு வேதத்தைத் தவிர வேறு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேதம் முழுவதையும் பிரசங்கித்து முடித்துவிட்டேனானால் எனக்கு பிரசங்கிப்பதற்கு வேறு எதுவுமேயில்லை. . . . சகோதரர்களே, நான் தேடிக்கொண்டிருக்கிற ஒரே பொக்கிஷம் கர்த்தருடைய சத்தியம் மட்டுமே; அதைத்தேடி நாம் தோண்டிக்கொண்டிருக்கிற ஒரே நிலம் வேதம் மட்டுமே."* (C. H. Spurgeon, *The Greatest Fight in the World*, pp9-10.)

### 3. அவரிடம் மகத்தான விசுவாசத்தைக் காணமுடிந்தது.

*ஜீவனுள்ள வார்த்தையினூடாக விசுவாசத்தை அடைந்த பிறகு, வேதம் மட்டுமே ஜீவனுள்ளது என்பதை விசுவாசித்த பிறகு, விசுவாச வாழ்க்கையின் பிரதி பலன்களையெல்லாம் வானத்துக்கும், பூமிக்கும் அதிபதியான கர்த்தரிடத்தில் விட்டுவிட்டு, அவர்முன் விசுவாசத்தோடு வாழ்ந்தார் ஸ்பர்ஜன். கர்த்தர் தன்னைப் பற்றி என்ன நினைப்பார் என்பதைத் தவிர வேறு மனிதர்களின் பாராட்டுதல்களையோ, திட்டல்களையோ அவை ஆனந்தத்தை அளித்தாலும், வருத்தத்தை அளித்தாலும் ஸபர்ஜன் என்றுமே பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. உடனடியாகவோ அல்லது காலந்தாழ்த்தியோ கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நிச்சயம் நிறைவேறும் என்ற எதிர்பார்ப்போடு ஸ்பர்ஜன் ஒரு குழந்தைக்கிருக்கும் உறுதியான விசுவாசத்தோடு கர்த்தருக்கு முன் வாழ்ந்தார்.*

### 4. அவர் கிறிஸ்துவின் ஆடுகளை மெய்மேய்ப்பராக இருந்து பாதுகாத்து வளர்த்தார்.

*மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போன்றிருந்து அவருடைய பிரசங்கங்களைக் கேட்க வந்தவர்களிடமும் சரி, நியூ பார்க் தெருவிலும், டெபர்னேக்களிலும் இருந்த சபை மக்களின் மத்தியிலும் சரி, இனி வரப்போகிற சந்ததிக்காக சத்தியப்போராட்டத்தில் ஈடுபட்டபோதும் சரி, ஸ்பர்ஜன், ஆத்துமாக்களின் ஆத்தும நலன்களைக் கருத்தில்கொண்டே எப்போதும் பணிபுரிந்தார். சத்தியம் எப்போதும் வாழ்வளித்து ஆசீர்வதிக்கும் என்பதையும், அசத்தியம் எப்போதும் நம்மை சீரழித்து அழிக்கும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். கிறிஸ்தவன் யார்? என்பதில் ஸ்பர்ஜன் வேதபூர்வமான விளக்கத்தைக் கொண்டிருந்தார். ஆகவே, அவர்களுக்கு வேதபூர்வமாக விசுவாசத்தோடு உழைத்து அவர் பிரசங்கித்தார். ஜோண் பனியனுக்கிருந்த பெரிய இருதயத்தோடு ஸ்பர்ஜன் விசுவாசிகளுக்காக உழைத்தார்.*

### 5. சத்தியத்துக்கான போராட்டவேளையிலும் விசுவாசிகளிடம் மெய்யான ஐக்கியத்தை நாடினார்.

*"கிறிஸ்தவ அன்பு மேலானது; சகலவிதமான பிரிவினைகளும் மோசமான கேடாக நிராகரிக்கப்பட வேண்டும்." என்று கூறிய ஸ்பர்ஜனின் குண நலத்தை, அவர், பிரிவினைவாதி என்று குற்றஞ்சாட்டியவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள். அதேநேரம், கிறிஸ்துவையும், அவருடைய வேத போதனைகளையும் மீறி இந்த ஐக்கியத்தை ஏற்படுத்தவோ, அநுபவிக்கவோ முடியாது என்பதிலும் ஸ்பர்ஜன் உறுதியாக இருந்தார். கிறிஸ்துவையும்,*

*அவருடைய வார்த்தையையும் மீறி, கிறிஸ்துவை விசுவாசித்துப் பின்பற்றாத வர்களோடு தவறான எண்ணங்களோடு, வெறும் சாட்டுக்காக ஒரு போலி ஐக்கியத்தை ஏற்படுத்திக் கூடிவருவதற்கு அவர் தயாராக இருக்கவில்லை. கிறிஸ்துவின் பெயரில் காணப்படும் போலியான ஐக்கியத்துக்கும், மெய்யான ஐக்கியத்துக்கும் உள்ள வேறுபாட்டை அவர் முழுமையாக உணர்ந்திருந்தார். அவருடைய வாழ்க்கையைப் பார்த்தும், அவருடைய ஊழியத்தை ஆராய் ந்தும், அநேகருக்கு அவர் எழுதிய கடிதங்களை வாசித்தும் பார்க்கிறவர் களுக்கு உலக எல்லைகளையெல்லாம் கடந்து ஏராளமான மெய்க்கிறிஸ் தவர்களோடு சத்தியத்தின் அடிப்படையில் அவருக்கிருந்த அன்பும், ஐக்கிய மும் தெரியவரும். தம்மை கிறிஸ்தவர்கள், விசுவாசிகள் என்று அழைத்துக் கொண்டு இந்தச் சுவர்களைத் தாண்டி ஓர் ஐக்கியத்தை ஏற்படுத்த முயல் பவர்களோடு ஸ்பர்ஜனால் சேர்ந்து நடக்கவோ, வாழவோ முடியவில்லை.*

*எல்லா விசுவாசிகளிடமும் சாதாரணமாகக் காணக்கூடிய பொதுவான தவறுகளையும், குறைகளையும், அவருக்கேயுரிய சிறப்பான பல குணா திசயங்களையும் கொண்டிருந்த ஸபர்ஜன் எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவைக் கடைசிவரை பின்பற்றினார். பவுலைப் போல கிறிஸ்துவைப் பின்பற்றிய ஸ்பர்ஜன் எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டியவர். தான் வாழ்கிற காலத்தில், “கடைசிப் பியூரிட்டன்”* (Last of the Puritans) *என்ற பெயரை அவர் பெற்றிருந்தார். நாம் இதுவரை பார்த்த, அவருடைய விசு வாசம், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட அவருடைய வாழ்க்கை என் பவை மட்டுமே அவருக்கு இந்தப் பெயரைப் பெற்றுத் தந்திருக்கவில்லை. இவை மட்டுமே பியூரிட்டன்களின் விசேஷ குணாதிசயங்களாக இருக்க வில்லை. தன்னுடைய சக போதகர்களைப் பார்த்து ஸ்பர்ஜன் சொல்லு வார், “சகோதரர்களே! நம்முடைய காலத்துக்கு ஏற்றவிதத்தில் நாம் வேதத்தை ஒருபோதும் மாற்றியமைக்கக்கூடாது. வேதத்திற்கேற்ற வகையில் காலத்தை மாற்றியமைக்க வேண்டும்.” (*C. H. Spurgeon, “The Preacher’s Power, and the conditions of Obtaining it,” in *An All-round Ministry*, p.318) *திருச்சபைக்குள்ளிருப்பவர்களும் அதற்கு வெளியே இருப்பவர்களும் நம் காலத்தில் சுவிசேஷத்தைப் பாவிகள் ஏற்றுக்கொள்ளுமுகமாக அறிவிப்ப தற்கு, வேதத்தைக் காலத்துக்கு ஏற்றவிதத்தில் மாற்றியமைப்பதற்கு எல்லா வழிகளையும் பயன்படுத்தி சகல முயற்சிகளையும் எடுத்துவருகிறார்கள். நாம் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக இருந்தால், நாமும் வேதத் தில் உறுதியாக இருந்து, சத்தியக் கொடியை உறுதியோடு தாங்கிப் பிடித்து, வாழ்ந்தாலும், ஜீவித்தாலும், கிறிஸ்து தரும் கிருபையையும், வல்லமை யையும் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும். சத்தியத்துக்கான போரா ட்டம் நம்மை அழிக்குமானால், கிறிஸ்துவுக்குள் விசுவாசமாக அவருடைய கிருபையின் மூலமாக வாழ்ந்து இனிதே மடிவோம். ஸபர்ஜனின் சாட்சியும், அறிவுரையும் தொடர்ந்து நம் செவிகளில் ஒலிக்கட்டும்: “ஜீவனுள்ள தேவனுக்கு முன்பாக நேர்மையுடன் நான் வாழ்ந்து விட்டேன். என் சகோதரரே! அதையே நீங்களும் செய்யுங்கள்.”*

(இந்த ஆக்கம் நூலுருவில் ஸ்பர்ஜனின் வாழ்க்கையோடு தொடர்புடைய எட்டுப் பக்கப் படங்களுடன் வெளிவந்திருக்கிறது. விபரங்களுக்கு 47ம் பக்கம் பார்க்கவும்.)

# மனமாற்றம்

## (இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு)

இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கில் அடுத்தபடியாக நாம் கவனிக்க வேண்டியது மனமாற்றம் (Conversion). இதை விளக்கும் ஜோன் தோன்பெரி, (John Thornbury) "பரலோகத்திலிருக்கும் கர்த்தரின் பார்வையின்படி மனிதனில் அவர் செய்யும் கிருபையின் கிரியையாக மறுபிறப்பை வர்ணிப்போமானால், அதே காரியத்தை மனிதனுடைய அநுபவத்திலிருந்து நோக்குவதை மனமாற்றம் என்று வர்ணிக்கலாம்" என்று விளக்குகிறார். இதிலிருந்து மறுபிறப்பையும், மனமாற்றத்தையும் இறையியல் ரீதியில் தெளிவாக விளங்கிக் கொள்ளுவதற்காக இறையியல் கண்ணோட்டத்தில் நாம் பிரித்து ஆராய்ந்தாலும் அவை ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றவை என்பதைப் புரிந்துகொள்வது அவசியம்.

மறுபிறப்பு மனிதனில் பரிசுத்த ஆவியால் விதைக்கப்படும் புதிய ஜீவனின் வித்து; அந்த வித்து வளர்ந்து, அது மனிதனில் ஏற்படுத்தும் வெளிப்புற விளைவுகளையே மனமாற்றம் என்கிறோம். அதாவது, மறுபிறப்பை அடைந்த மனிதனில் நாம் காணும் வெளிப்புற விளைவுகளே மனமாற்றம். ஒரு மனிதனில் மனமாற்றம் ஏற்படுகிறபோது இரண்டு அம்சங்களை அவனில் காணலாம்: (1) மனந்திரும்புதல், (2) விசுவாசம்.

மறுபிறப்பு ஒருவனில் நிகழும்போது கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவன் அது தன்னில் ஏற்படுத்தும் விளைவுகளை உடனடியாக உணராமல் இருந்துவிடலாம். ஏனெனில், மறுபிறப்பு மனிதனின் உள்ளார்ந்த பகுதியில் இருதயத்தில் ஆழத்தில் புறக்கண்களுக்கு புலப்படாமல் நிகழ்கின்ற கிருபை. அது நிகழ்கின்றவேளை மனிதனே அதை உடனடியாக முழுமையாக உணராமல் இருக்கலாம். ஆனால், மறுபிறப்பின் புறவெளிப்பாடான மனமாற்றம் மனிதன் உணரக்கூடிய விதத்தில் அவனுடைய இருதயத்தில் கிருபையின் வெளிப்பாடாக இருப்பதால் அதை அவன் முழுமையாக உணர்கிறான். மனமாற்றம் மனிதனின் சகல அங்கங்களையும் பாதித்து அவனில் கிருபை ஏற்படுத்தியிருக்கும் பெருமாற்றத்தை வெளிப்படுத்துகிறது. மனிதன் உணர முடியாதவகையில் அவனில் மனமாற்றம் ஒரு போதும் நிகழாது.

பாப்திஸ்து போதகரும் இறையியல் அறிஞருமான மறைந்த ஏர்னஸ்ட் கெவன் (Dr. Earnest F. Kevan) மனமாற்றத்தைப் பின்வருமாறு விளக்கியிருக்கிறார். "மனமாற்றத்தை மனிதனில் இருதயத்தின் ஆழத்தில் நிகழ்ந்த கிருபையின் மாற்றத்தின் வெளிப்புற அடையாளமாக விளக்கலாம். மனிதனின் இருதயத்திற்கு ஜீவன் அளிக்கப்பட்ட பிறகே அதற்கு மனந்திரும்புதலுக்கும், விசுவாசத்திற்குமான வல்லமை கிடைக்கிறது. இதன்காரணமாக, மறுபிறப்பு மனிதனில் மனமாற்றத்துக்கு முன்னால் ஏற்படுகிறதென்பதை

உணர்ந்து அது மனமாற்றத்திலிருந்து வேறுபட்ட ஒரு கிருபை என்பதை அறிந்துகொள்ள வேண்டும். ஒரு மனிதனில் ஜீவனின் ஆரம்பமாக மறு பிறப்பு இருக்குமானால், அம்மாற்றத்தின் வெளிப்பாடே மனமாற்றம் என்று கூறவேண்டும். மறுபிறப்பு பூரணமாக கர்த்தரின் கிரியையாக இருக்கிறது; மனமாற்றத்தில் மனிதனுக்கு பங்கு இருக்கிறது. மறுபிறப்பாகிய அநுபவம் நிகழும்போது அதைப் பெற்றுக்கொள்பவனாக மட்டுமே மனிதன் இருக் கிறான்; மனமாற்றம் நிகழ்கிறவேளையில் மனிதன் அதில் ஊக்கத்தோடு பங்குபற்றி செயல்படுபவனாக இருக்கிறான். மறுபிறப்பை நம்மில் நிகழும் அநுபவமாக பார்த்தால், அதன் விளைவு மனமாற்றம் எனலாம். மறுபிறப்பு நிழும்போது சடுதியாக நிகழ்கின்றது; அதன் விளைவாகிய மனமாற்றம் சிறிது சிறிதாகவே வெளிப்படுகின்றது."

இறையிலறிஞர் ஏர்னஸ்ட் கெவன் மனமாற்றத்தைப் பற்றித் தந்த விளக் கத்தின் அடிப்படையில் அதை நாம் இனி மேலும் விபரமாகப் பார்ப்போம். இதை வேதத்தில் இருபகுதிகளில் இருந்து விளக்கலாம். யோவான் 4வது அதிகாரத்தில் நாம் நிக்கொதேமு இயேசுவை சந்திப்பதைப் பார்க்கிறோம். அந்த அதிகாரத்தில் மறுபிறப்பைப் பற்றி இயேசு விளக்குகிறார். அது ஆவியின் செயலென்றும், கண்களால் நாம் காணமுடியாத ஆவியின் கிரியை என்றும் அவர் விளக்குவதைப் பார்க்கிறோம். ஒவ்வொரு மனிதனும் மறுபிறப்படைவது அவசியம் என்றும் இயேசு போதிக்கிறார். அந்த அதிகாரம் மறுபிறப்பை தெய்வீகப் பார்வையில் நமக்கு விளக்குகிறது. அதேவேளை அதன் மறுபுறமான மனமாற்றத்தை நாம் கெட்டகுமாரனின் உவமையில் லூக்கா 16ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இந்தப் பகுதியில் மறுபிறப்பை அடைந்த ஒருவனில் அந்த மாற்றம் எப்படி நிகழ்கின்ற தென்பது மனிதனுடைய கண்ணோட்டத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அவனுள் நிகழ்ந்திருக்கும் கிருபையின் செயலின் காரணமாக கெட்ட குமாரனின் புத்தி தெளிவடைந்து, அவன் ஆவிக்குரிய சிந்தனைகளைக் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை ஆராய்வதைப் பார்க்கிறோம். தன் னுடைய பாவங்களை உணர்ந்து அவற்றிற்காகப் பெரிதும் வருந்துவதைப் பார்க்கிறோம். அந்தப் பாவங்களைத் தாழ்மையோடு தகப்பன் முன் னிலையில் அறிக்கையிட்டு அவருடைய ஐக்கியத்தை அவன் நாடுவதற்கான முயற்சிகளில் அவன் ஈடுபடுவதையும் இறுதியில் தகப்பன் அவனை ஆனந்தத்தோடு வரவேற்பதையும் பார்க்கிறோம். இதெல்லாம் அவனுள் நிகழ்ந்திருக்கும் கிருபையின் கிரியைகளின் புறவெளிப்பாடுகள். மெய்யான மனமாற்றம் நிகழ்ந்திருக்கும் எவரிலும் இவற்றைக் காணமுடியும். ஆகவே, இரண்டு வேதப்பகுதிகளும் இரட்சிப்பைப் பற்றியே விளக்குகின்றன. இருந்தாலும் ஒன்று கிருபையின் கிரியையை தெய்வீகப் பார்வையிலும், மற்றது அதை மனிதனுடைய கண்ணோட்டத்திலும் விளக்குகின்றது.

## மனந்திரும்புதல் (Repentance)

மனமாற்றத்தின் இணைபிரியாத இரண்டு ஆத்மீக அம்சங்களாக மனந்திரும்புதலும், விசுவாசமும் இருக்கின்றன என்று ஏற்கனவே பார்த்தோம். முதலில் மனந்திரும்புதலைப் பற்றி சிறிது விளக்கமாகப் பார்ப் போம். மனந்திரும்புதல், விசுவாசம், கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிதல் இவை

அனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஒரு மனிதன் கிறிஸ்துவை விசுவாசித்து கீழ்ப்படியாமல் மெய்யான மனந்திரும்புதலைக் கொண்டிருக்க முடியாது; மனந்திரும்பாமல் அவரால் விசுவாசிக்கவோ, கீழ்ப்படியவோ முடியாது; மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் கொண்டிராமல் அவரால் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிய முடியாது. சிலவேளைகளில் விசுவாசம் என்ற வார்த்தை நாம் மேலே விளக்கிய அத்தனையையும் உள்ளடக்கியதாகவும் வேதத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

இரட்சிப்போடு தொடர்புடைய கிருபையின் அம்சங்களில் மனந்திரும்புதல் என்று தனியாகப் பிரித்துப் பார்க்கிறபோது, ஒரு ஆத்துமா தன்னில் தன்னுடைய பாவத்தை அநுபவபூர்வமாக உணர்ந்து, அப்பாவத்தின் காரணமாக தேவ கோபம் தன்மேல் இருப்பதை அறிந்து அதற்காக மெய்யாகவே வருந்தி கிறிஸ்துவிடம் பாவமன்னிப்புக்காகவும், ஆத்மீக விடுதலைக்காகவும் ஓடோடி வருவதை மனந்திரும்புதல் என்று விளக்கலாம். ஆவியானவரின் கிரியையால் மனிதனில் நிகழும் காரியம் இது. மெய்யான மனந்திரும்புதல் இருக்கும் வேளையில் மனிதன் பாவத்திற்கு விலகியோடுகிறான். பவுல் 1 தெசலோ. 1:9ல், தெசலோனிக்கேயர் “விக்கிரகங்களை விட்டு தேவனுக்கு மனந்திரும்பினார்கள்” என்று கூறுகிறார். இது பாவத்தைப் பற்றிய வெறும் அறிவை மட்டும் கொண்டிருந்து அதன் விளைவுகளுக்கு அஞ்சியோடும் மனமாற்றமல்ல; ஜீவனுள்ள கர்த்தருக்கு எதிராகப் பாவம் செய்து அவரின் மகிமையைக் களங்கம் செய்து வாழ்கிறேனே என்று முழு இருதயத்தோடும் வருந்தி, அதிலிருந்து விடுதலையாகிப் பரிசுத்தமாக வாழ்வதற்குத் துடிக்கும் ஆவிக்குரிய மனமாற்றம். கொரிந்திரியரின் மனந்திரும்புதலை விளக்கும் பவுல் அவர்களிடம் மனந்திரும்புவதற்கேதுவான துக்கம் இருந்ததாக 2 கொரிந்தியர் 7:9ல் விளக்குகிறார். லூக்கா 16 இத்தகைய மனந்திரும்புதலைக் கெட்டகுமாரன் கொண்டிருந்ததாக விளக்குகிறது. தாவீது இத்தகைய மனந்திரும்புதலைக் கொண்டிருந்து சங்கீதம் 51ல் அதை விளக்குவதைக் காண்கிறோம்.

## விசுவாசம் (Faith)

தேவனுடைய இராஜ்யத்திலிருப்பர்களை அதற்கு வெளியிலிருப்பவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் மிகமுக்கியமான கிருபை விசுவாசமாகும். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று எபிரேயர் 11:6 சொல்லுகிறது. விசுவாசமில்லாமல் எவரும் இரட்சிப்பை அடைய முடியாது என்று வேதம் சொல்லுகிறது (யோவான் 3:16; எபே. 2:8–9). அதனால் இரட்சிப்புக்கேற்ற விசுவாசத்தை நாம் வேதபூர்வமாக விளங்கிக் கொள்வது அவசியம். வேதபூர்வமான விசுவாசம் மூன்று அம்சங்களைக் கொண்டிருக்கும்.

(1) வேதசத்தியங்களை ஏற்றுக்கொள்ளுதல். – கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசம் சில சத்தியங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்த சத்தியங்களை வரலாற்றில் நிகழ்ந்த உண்மைகளாகவும் காண்கிறோம். இவற்றை கிறிஸ்தவ வேதம் தெளிவாக விளக்குகின்றது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு பிதாவால் அனுப்பப்பட்டு பாவிகளுக்காக சிலுவையில்

*மரித்து உயிர்த்தெழுந்ததை வரலாறும், வேதமும் விளக்குகின்றன. இயேசு கிறிஸ்துவைப் பற்றி வேதம் விளக்கும் சத்தியங்களை மனந்திரும்புகிற மனிதன் விசுவாசிப்பான். இயேசு கிறிஸ்துவில் ஒருவன் வைக்கும் விசுவாசம் இயேசுவைப் பற்றிய இந்த சத்தியங்களின் அடிப்படையில் ஏற்படுகின்ற விசுவாசமாகும். இயேசு கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பு, வாழ்க்கை, அவர் செய்த அற்புதங்கள், சிலுவை மரணம், உயிர்த்தெழுதல், திரித்துவம் போன்றவற்றை விசுவாசிக்காமல் ஒருவர் மெய்யான விசுவாசத்தைக கொண்டிருக்க முடியாது. வேதம் முழுவதையும் பூரணமாக ஒருவர் அறிந்தவராக இல்லாதிருந்தாலும் மெய்யான விசுவாசத்திற்கு அடையாளமாக இயேசுவைப் பற்றிய மேலே நாம் பார்த்த உண்மைகளை அவர் முழுமனதோடு நம்பி விசுவாசிக்கிறவராக இருக்க வேண்டும்.*

*(2) இயேசு கிறிஸ்துவில் அநுபவபூர்வமான நம்பிக்கை - இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சத்தியங்களை மனதளவில் வெறும் அறிவாக மட்டும் கொண்டிருப்பதல்ல மெய்யான விசுவாசம்; முழுஇருதயத்தோடும் விசுவாசி அதை நம்புகிறவனாக இருக்கிறான். உலகத்திலிருக்கும் வேறு எத்தனையோ விஷயங்களை நாம் நம்பியபோதும் அவற்றிற்கும் நம் வாழ்க்கைக்கும் தொடர்பு இருப்பதில்லை; அவை நம்மைப் பாதிப்பதில்லை. இயேசுவைப் பற்றிய விசுவாசத்தைப் பொறுத்தவரையில் அது நம்மை முழுமையாகப் பாதிக்கிறது. நமது வாழ்க்கையின் அத்தனைப் பகுதிகளையும் மாற்றி அமைக்கிறது. இயேசுவைப் பற்றிய உண்மைகளை மட்டும் நாம் விசுவாசிக்காமல் அவரையே ஜீவனுள்ள தேவனாக முழு இருதயத்தோடும் நம்புகிறோம்; விசுவாசிக்கிறோம். அவரோடு ஆத்மீக ரீதியில் நமக்கு உறவு ஏற்படுகிறது. இந்த நம்பிக்கை ஆவியின் கிரியையால் நம்மில் உருவாகின்ற அநுபவபூர்வமான நம்பிக்கை. இதை 2 தீமோ. 1:12ல் வாசிக்கிறோம்: "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாறென்று நிச்சயித்துமிருக்கிறேன்."*

*(3) அடிபணிதல் - இரட்சிப்புக்குரிய விசுவாசத்தில் காணப்படும் இன்னுமொரு அம்சம் கிறிஸ்துவுக்கு அடிபணிதலாகும். அதாவது, அவரைப் பற்றிய சத்தியங்களை விசுவாசிப்பதோடு மட்டுமிருந்துவிடாமல், அவரை முழு இருதயத்தோடும் நேசித்து அவருடைய கட்டளைகளுக்கெல்லாம் அடிபணிந்து நம்மை அவருக்கு அர்ப்பணிக்கும் வாழ்க்கையைக் கொண்டிருப்பதே இரட்சிப்புக்குரிய விசுவாசத்தின் அடையாளமாகும். இயேசு கிறிஸ்து நமக்கு இரட்சகராக மட்டுமில்லாமல் ஆண்டவராகவும் இருக்கிறார். மெய்யான விசுவாசி அவருடைய ஆளுகைக்கு கட்டுப்படுகிறவன். அவரை நேசித்து அவருடைய கட்டளைகள் அனைத்தையும் முழுமனதோடு பின்பற்றுகிறவன். "என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்." என்றார் இயேசு (மத். 11:29). மெய் விசுவாசம் ஆத்துமாவில் இயேசுவுக்கு முழுமையாக அடிபணிகிற இருதயத்தை உருவாக்குகிறது (சங்.2:12); அவருக்கு கீழ்ப்படியும்படிச் செய்கிறது (எபிரே. 5:9); நற்கிரியைகளைச் செய்யும்படிச் செய்கிறது (யாக்கோபு 2:20); விசுவாசத்தில் இறுதிவரைத் தொடரும்படிச் செய்கிறது (கொலோ. 1:23).*

# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

வரலாற்றுக் கிறிஸ்தவம் (Historical Christianity) நமக்களித்துள்ள சீர்திருத்தவாத கிறிஸ்தவத்தின் (Reformed Christianity) அடிப்படைப் போதனைகளையும், அதைப் பின்பற்றிய தேவ மனிதர்களைப் பற்றியும் விளக்கும் நூல்கள்:

- 1689 விசுவாச அறிக்கை
- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார் (அல்பர்ட். என். மார்டின்)
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்,<br>புதிய சுவிசேஷக் கோட்பாடும்,
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

இந்நூல்களைப் பெற்றுக்கொள்ள கீழ்வரும் முகவரிகளுக்கு எழுதுங்கள்.



இவாஞ்சேலிக்கள் பாப்திஸ்து சபை
22 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004, தமிழ்நாடு

கிருபை இலக்கிய சேவை
19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6
ஸ்ரீ லங்கா

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

***கேள்வி**: 99 திருமுழுக்கும், திருவிருந்தும் எவ்வாறு இரட்சிப்புக்கேற்ற திருவருட் சாதனங்களாகின்றன?*

***பதில்**: திருமுழுக்கும், திருவிருந்தும் அவற்றில் காணப்படும் எந்த நற்பண்பு களினாலோ அல்லது அவற்றை வழங்குபவர்களில் காணப்படும் எந்த நற்பண்பு களினாலோ இரட்சிப்புககேதுவானவையாகாமல், கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தி னாலும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளினாலும் விசுவாசத்தோடு அவற்றைப் பெற்றுக்கொள்ளுபவர்களுக்கு அவை இரட்சிப்புக்கேற்ற திருவருட் சாதனங்களாகின்றன.*

*(1 கொரிந்தியர் 3:6-7; 1 பேதுரு 3:21.)*

*இந்த வினாவிடைக்கான விளக்கம் நாம் கடந்த இதழில் (12:2) திருவருட் சாதனங்களுக்கு தந்த விளக்கத்தில் அடங்கியுள்ளது.*

*கேள்வி: 100 திருமுழுக்கு (ஞானஸ்நானம்) என்றால் என்ன?*

*பதில்: திருமுழுக்கு கிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையின் திருவருட்சாதனமாகும். திருமுழுக்கைப் பெற்றுக்கொள்ளுகிற நபருக்கு அது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், அவரோடிணைக்கப்பட்டிருத்தல் ஆகியவற்றோடு பாவமன்னிப்புக்கும் அவர் தன்னைக் கிறிஸ்துவின் மூலமாகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, புதிய ஜீவனுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கும் அடை யாளமாக இருக்கின்றது.*

*(மத்தேயு 28:19; ரோமர் 6:3-4; கொலோசெயர் 2:12; கலாத்தியர் 3:26-27.)*

*கேள்வி: 101 யாருக்கு திருமுழுக்கு அளிக்க வேண்டும்?*

*பதில்: கர்த்தரிடம் மனந்திரும்புதலையும், இயேசு கிறிஸ்துவில் மேலான விசுவாசத்தையும் நம்பத்தகுந்த முறையில் எவரெல்லாம் அறிக்கையிடுகிறார்களோ அவர்களுக்கு மட்டுமே திருமுழுக்கு அளிக்க வேண்டும்; வேறு எவருக்கும் அது கொடுக்கப்படக்கூடாது.*

*(அப்போஸ்தலர் 2:38; 2:41; மாற்கு 16:16.)*

**விளக்கவுரை:** *திருவருட்சாதனங்களில் ஒன்றான திருமுழுக்கை நாம் புதிய ஏற்பாட்டிலேயே முதன் முறையாக வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டில் இதைப் பற்றி நாம் வாசிப்பதில்லை. மத்தேயு 3:11ல் யோவான்ஸ்நானன் முதல் தடவையாக திருமுழுக்குக் கொடுப்பதாக வாசிக்கிறோம். மத்தேயு 3:6ன்படி யோர்தான் சமவெளியில் இருந்து அநேகர் யோவான்ஸ் நானனிடம் வந்து தங்களுடைய பாவத்தை அறிக்கையிட்டு திருமுழுக்குப் பெற்றுக்கொண்டனர். இந்தத் திருமுழுக்கு மனந்திரும்புதலின் திருமுழுக் காக இருந்தது. திருமுழுக்குப் பெற்றுக்கொண்டவர்களில் மனந்திரும்பு தலுக்கான அடையாளங்களை யோவான்ஸ்நானன் எதிர்பார்த்து திரு*

முழுக்களித்திருக்கிறார் (மத்தேயு 3:8).

இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களுக்கு மத்தேயு 28:18–20ல் அளித்த கட்டளையில் மூன்று கடமைகளைச் செய்யும்படிக் கட்டளையிட்டார். (1) இரட்சிப்புக்குரிய போதனைகளை அளித்து சீடர்களை உருவாக்குங்கள். (2) பிதா, குமாரன் ஆவியானவரின் பெயரில் இரட்சிப்பை அடைந்தவர்களுக்கு திருமுழுக்குக் கொடுங்கள். (3) திருமுழுக்குப் பெற்றுக்கொண்ட சீடர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகள் அனைத்திற்கும் கீழ்ப்படியும்படி அவர்களுக்கு தொடர்ந்து போதியுங்கள். இயேசு கிறிஸ்துவிடம் இருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது கிறிஸ்துவின் கட்டளையாக வேதத்தில் தரப்பட்டிருப்பதை மாற்கு 16:16 சுட்டிக்காட்டுகிறது: "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். . . " என்றிருப்பதாக வாசிக்கிறோம். விசுவாசமுள்ளவன் ஞானஸ்நானம் எடுத்திருக்க வேண்டும் என்று இந்த வசனங்கள் எதிர்பார்க்கின்றன.

மனந்திரும்பி கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராகவும், ஆண்டவராகவும் விசுவாசிக்கின்றவர்கள் மட்டுமே திருமுழுக்கு பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் போதிக்கின்றது. மனமாற்றம் அதாவது திருமுழுக்கை நாடி வருபவர்களிடம் கிறிஸ்துவில் விசுவாசத்தை மட்டுமே நாம் எதிர்பார்க்க வேண்டும் என்பது வேதபோதனை. இதை வலியுறுத்தும் இரண்டு சாட்சிகளாக முதலில், இயேசு கிறிஸ்து மத்தேயு 28ல் தன்னுடைய சீடர்களுக்கு கொடுத்த கட்டளையில் காண்கிறோம். இரண்டாவதாக, புதிய ஏற்பாட்டின் அநேக இடங்களில் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டவர்களின் சாட்சிகளில் இருந்து அறிந்துகொள்ளுகிறோம். மனமாற்றம் அடைந்து கிறிஸ்துவை விசுவாசித்தவர்களுக்கு மட்டுமே புதிய ஏற்பாட்டில் திருமுழுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணங்களாக அப்போஸ். 2:41; 8:12–13; 9:18; 16:14–15; 31–33 ஆகிய பகுதிகளைச் சுட்டிக்காட்டலாம். இந்தப் பகுதிகளில் மனமாற்றமடைந்தவர்களுக்கு (இரட்சிப்பை அடைந்தவர்கள்) மட்டுமே திருமுழுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். குழந்தைகளுக்கு திருமுழுக்கு கொடுப்பது ஏன் தவறு என்பதை இனிவரப் போகும் வினாவிடைப் பாடங்களில் விபரமாகப் பார்க்கவிருப்பதால் அதை இந்த இதழில் விளக்கப் போவதில்லை. (கிறிஸ்துவில் இருக்க வேண்டிய) நம்பத்தகுந்த விசுவாசத்தை மட்டுமே நாம் ஆத்துமாக்களிடம் எதிர் பார்த்து அவர்களுக்கு திருமுழுக்கு அளிக்க வேண்டும் என்பது வேதபோதனை.

திருமுழுக்கு அளிக்கும்போது அதை எவர் பெயரில் அளிக்க வேண்டும் என்பதில் சிலர் முரண்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பெயரில் மட்டுமே அதை அளிக்க வேண்டும் என்று சிலர் வற்புறுத்துகிறார்கள். இது தவறான வாதம். வேதத்தின் சில இடங்களில் இயேசு கிறிஸ்துவின் பெயரில் அளிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதால் அது மத்தேயு 28ம் அதிகாரத்தில் கிறிஸ்து கொடுத்த கட்டளைக்கு எதிரானது என்று சிலர் எண்ணுவது வேதத்தை சரிவர விளங்கிக் கொள்ள வேண்டிய விதிகளை அறியாததால் ஏற்படும் கோளாறு தவிர வேறில்லை. மத்தேயு 28 மிகவும்

தெளிவாக திரித்துவ தேவனாகிய கர்த்தரின் பெயரில் (பிதா, குமாரன், ஆவி) திருமுழுக்கு அளிக்க வேண்டும் என்று விளக்குகிறது. கர்த்தர் திரித்துவ தேவன் என்பதை நிராகரிக்கும் சிலரும் இயேசு பெயரில் மட்டுமே திருமுழுக்கு கொடுக்க வேண்டும் என்பார்கள். திரித்துவப் போதனைகளை மறுதலிக்கிறவர்கள் கிறிஸ்தவ சுவிசேஷத்தை மறுதலிக் கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியம்.

வினாவிடைப் போதனை திருமழுக்கு எதற்கு அடையாளமாக இருக் கின்றது என்றும் விளக்குகிறது. சுவிசேஷப் போதனைகளைத் தெளிவாக விளக்கும் அடையாளமாக அது இருக்கிறது. இது 1 கொரிந்தியர் 15:3–4 ஆகிய வசனங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, உயிர்த்தெழுந்தார். கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்டதை விளக்கும் ஒரே அடையாளமாக திருமுழுக்கு மட்டுமே இருக்கிறது. அதாவது, தண்ணீரில் கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற ஆத்துமாவை முழுக்கி எடுக்கிறதன் மூலம் மட்டுமே அதை விளக்க முடியும். இதையே ரோமர் 6:4 பின்வருமாறு விளக்குகிறது: "அவரு டைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்." கொலோசேயர் 2:2, "ஞானஸ்நானத்தி னாலே அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.' என்று விளக்குகிறது. திருமுழுக்கு கிறிஸ்து நமது பாவங்களுக்காகப் பூரண மாக மரணத்தைத் தழுவியதையும், அடக்கம் செய்யப்பட்டதையும், உயிர்த் தெழுந்ததையும் விளக்குகிற திருவருட்சாதனமாக இருக்கிறது.

வினாவிடைப் போதனை, திருமுழுக்கிற்கு தங்களை ஒப்புக்கொடுப்ப வர்கள் அதை வேதஅறிவுடன் தூய நோக்கங்களுடன் செய்ய வேண்டும் என்று விளக்குகிறது. திருமுழுக்கை வெறும் சடங்காக எண்ணிப் பயன்படுத் தக்கூடாது. 1 பேதுரு 3:18ல் பேதுரு, ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குகிறதாயிருக்கவில்லை என்று விளக்குகிறார். வெறும் தண்ணீரால் ஒரு மனிதனின் இருதயத்திலுள்ள பாவத்தைக் கழுவிவிட முடியாது. கிறிஸ்து வின் திருஇரத்தத்தால் மட்டுமே அது நடக்க முடியும். ஆகவே, திருமுழுக்கு கிருபையின் செயலால் மனிதன் அடைகின்ற இரட்சிப்பின் அநுபவத்திற்கு அடையாளமாக இருக்கிறது. தன் பாவத்திற்கு மரித்து கிறிஸ்துவுக்குள் விசுவாசி புதிய ஜீவனுள்ள வாழ்க்கையைத் தொடங்கியிருப்பதை விளக்கு வதாக திருமுழுக்கு இருக்கிறது. அப்போஸ். 8ல் எத்தியோப்பியன் கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்கை நாடித், தான் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடையென்ன? என்று கேட்டபோது அவனுடைய விசுவா சத்தின் அடிப்படையில் பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இரட்சிப்பின் அநுபவத்தைத் தங்களுடைய வாழ்க்கையில் அநுபவபூர்வமாக உணராதவர்களுக்கு திருமுழுக்கு எந்தப் பயனையும் தர முடியாது. இரட்சிப்பின் அநுபவத்தை நம்பத்தகுந்த முறையில் வெளிப்படுத்துபவர்கள் மட்டுமே அதற்குத் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

# பரிசுத்தவான்களின் விடாமுயற்சி

- Perseverance of the Saints by Calvin Waldon -

இரட்சிப்பின் அநுபவத்தை அடைந்து இயேசு கிறிஸ்துவை தன்னுடைய வாழ்க்கையில் மெய்யாக விசுவாசிக்கிற மனிதன் தன்னுடைய விசுவாச வாழ்க்கையை விடாமுயற்சியுடன் தொடர்ந்து நடத்திச் செல்லுவான் என்பது வேதம் போதிக்கின்ற சத்தியமாகும். இந்தப் போதனையை Perseverance of the Saints என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். சீர்திருத்த போதனைகளில் முக்கியமான இந்தப் போதனையை சீர்திருத்த விசுவாச அறிக்கைகளும், வினாவிடைப் போதனைகளும் தெளிவாக விளக்குகின்றன. 1689 விசுவாச அறிக்கையின் 17ம் அதிகாரம் "பரிசுத்தவான்களின் விடாமுயற்சி" என்ற தலைப்பில் இந்தப் போதனையை விளக்குகிறது. எந்தளவுக்கு எது மெய்க் கிறிஸ்தவம்? என்பதை நாம் அறிந்துணர்ந்துகொள்ள வேண்டுமோ அந்தளவுக்கு இந்தப் போதனையையும் நாம் விளங்கிக்கொள்வது அவசியம். ஏனெனில் இவை இரண்டுமே ஒன்றுக்கொன்று பிரிக்கமுடியாத தொடர்புடையவை. முதலாவது இருந்தால் மட்டுமே இரண்டாவதை நாம் ஒரு மனிதனில் பார்க்க முடியும்.

இந்தப் போதனையை நாம் விளக்கமாகப் பார்ப்பதற்கு முன் கிறிஸ்தவன் யார்? என்பதை வேதம் விளக்குகின்ற முறையில் விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு கிறிஸ்தவ இதழில் பெயர்க் கிறிஸ்தவர்களைப் பற்றியும், போலிக் கிறிஸ்தவர்களைப் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது. அதில் பெயர்க் கிறிஸ்தவர்கள் போலிக் கிறிஸ்தவர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டிருந்தார்கள். அத்தோடு போலிக் கிறிஸ்தவர்களே மிகவும் ஆபத்தானவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தார்கள். அந்த இதழில் பெயர்க்கிறிஸ்தவர்கள் போலியாக நடப்பதில்லை என்று விளக்கமளிக்கப் பட்டிருந்தது. இதை ஏன் சுட்டிக் காட்டுகிறேன் என்றால் தமிழினத்தில் பாரம்பரிய சபைகளான ஆங்கிலிக்கன், மெத்தடிஸ்ட், லூதரன் போன்ற சபையைச் சார்ந்த அநேகரை நாம் பெயர்க் கிறிஸ்தவர்கள் என்று அழைப்பது வழக்கம். இதற்குக் காரணம் அவர்கள் குடும்பப் பாரம்பரியத்தைப் பின்பற்றி சபை அங்கத்தவர்களாக இருக்கிறார்களே தவிர இரட்சிப்பின் அனுபவத்தை வாழ்க்கையில் பெற்றிருப்பதில்லை. இவர்கள் மெய்க்கிறிஸ்தவர்கள் அல்ல; வெறுமனே பாரம்பரியமாக சபைக்குப் போய் வந்து கொண்டிருப்பதோடு சரி; இவர்களுடைய வாழ்க்கையில் இயேசு இல்லை. உண்மையில் இதுவும் போலி வாழ்க்கைதான். இவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இப்படி வாழ்ந்தாலும் இவர்களுடைய வாழ்க்கை போலியானது. இரட்சிப்பை வாழ்க்கையில் அடையாமல் சபைக்கு உள்ளே இருப்பதால் இவர்களுக்கு எந்தவிதமான சலுகையையும் கர்த்தர் காட்டிவிடப் போவ

தில்லை. சபை வாசற்படியை மிதித்திராத ஒரு இந்துவுக்கும் இவர்களுக்கு மிடையில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. அவன் சபைக்கு வெளியே இருக்கும் அவிசுவாசி; இவர்கள் சபைக்கு உள்ளே இருக்கும் அவிசுவாசிகள். இரட்சிப்பை அடையாத இரண்டு பகுதியினரும் இறந்தபின் போய்ச் சேரப்போகிற இடம் ஒன்றாகத்தான் இருக்கும். ஆகவே, பெயர்க் கிறிஸ்த வர்கள் என்ற பெயரையும் போலிக் கிறிஸ்தவர்கள் என்ற பெயரையும் மெய்யாகவே கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களாக இருக்கும் நிலையில் கிறிஸ்தவர்கள் என்ற பெயரைச் சூட்டிக்கொள்கிற அனைவருக்கும் பொது வாகவே பயன்படுத்த வேண்டும். வேதம் இருவிதமான மனிதர்களைப் பற்றி மட்டுமே எப்போதும் விளக்கமளிக்கிறது: (1) கிறிஸ்தவர்கள் (விசுவாசிகள்) (2) கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் (அவிசுவாசிகள்). இவர்களுக்கு மத்தியில் வேறு பிரிவினர் கிடையாது.

பரிசுத்தவான்களின் விடாமுயற்சி என்ற கிருபையானது கிறிஸ்தவர்களு க்கு, அதாவது விசுவாசிகளுக்கு மட்டுமே சொந்தமானது. விசுவாசிகளைப் பற்றிய யோவான் 10:27–30 வரையிலான வசனங்களில் சில உண்மைகளை இயேசு ஆணித்தரமாக விளக்குகிறார். “என்னுடைய ஆடுகள் என் சத்தத் தைக் கேட்கும்; நான் அவைகளை அறிவேன்; அவைகள் என்னைப் பின்பற் றும்.” என்றார் இயேசு. தொடர்ந்து, அவருடைய சத்தத்தைக் கேட்டு அவரைப் பின்பற்றுபவர்கள் அடையப்போகும் நன்மைகளை அவர் விவரிக்கிறார். “நான் அவர்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கிறேன்; அவர்கள் ஒருபோதும் அழிய மாட்டார்கள்.” என்றார் இயேசு. அத்தோடு அவர், “என்னுடைய கரத்தில் இருந்து அவர்களை ஒருவரும் பிடுங்கிவிட முடி யாது; அவர்களை எனக்குக் கொடுத்த என்னுடைய பிதா எல்லோரையும் விடப் பெரியவராக இருக்கிறார். அவருடைய கரத்தில் இருந்து அவர்களை எவரும் பிடுங்கிவிட முடியாது.” என்று கூறி முடித்தார்.

இயேசு கிறிஸ்துவின் இந்த வசனங்களில் இருந்து இருபெரும் உண்மை களை விளங்கிக் கொள்ளலாம். (1) அவர் அவருடைய ஆடுகளுக்கு நித்திய ஜீவனை அளிக்கிறார். (2) ஆகையால், அந்த ஆடுகள் அவரைவிட்டு ஒரு போதும் பிரிந்து செல்ல முடியாது. இதிலிருந்து ஆடுகள் ஒருபோதும் ஓநாய்களாக மாறிவிட முடியாது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மறுபிறப்படைந்த எவரும் அதை இழந்துவிட முடியாது. அத்தோடு கிறிஸ்து வின் கரத்தில் ஆடுகள் இருப்பதாகவும், அவைகள் மேல் பிதாவின் கரம் இருப்பதாகவும் இயேசு சொல்லுகிறார். இதன் மூலம் எத்தகைய நித்திய பாதுகாப்பு மெய்க் கிறிஸ்தவர்களுக்கு கர்த்தரிடம் இருந்து கிடைக்கிறது என்பதை இயேசு உறுதியாக விளக்குகிறார். இந்தப் பகுதி தெளிவாக விசுவாசிகளின் நித்திய பாதுகாப்பைப் பற்றி விளக்கும் முக்கிய வேதப்பகுதி யாக இருக்கிறது. இதை 1689 விசுவாச அறிக்கை தனது பதினேழாவது அதிகாரத்தில் மிகவும் அழகாக விளக்குகிறது.

## போதனைக்கான விளக்கம்

இந்தப் போதனைக்கான விளக்கத்தைப் பார்க்கின்றபோது இரண்டு முக்கிய கேள்விகளுக்கு பதிலளிப்பது அவசியம். (அ) இந்த விடாமுயற்சிக்

*குரியவர்கள் யார்? (ஆ) விடாமுயற்சி என்பது என்ன?*

**(அ) விடாமுயற்சிக்குரியவர்கள்**

*பவுல் அப்போஸ்தலர் இவர்களைப் பற்றி எபேசியர் 1:3ல் விளக்கும் போது, "கிறிஸ்துவுக்குள்ளே உன்னதங்களில் சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்று விளக்குகிறார். இவர்கள் கிறிஸ்துவுக்கு உரியவர்களாக இருப்பதால் தங்களுடைய விசுவாசத்தை விடாமுயற்சி யுடன் பாதுகாத்துக்கொள்வார்கள். எபேசியர் இரண்டாம் அதிகாரத்தின் ஆரம்பப் பகுதி விசுவாசத்தை அடைவதற்கு முன்பாக இருந்த விசுவாசிகள் வாழ்ந்த பாவவாழ்க்கையையும், கிறிஸ்துவுக்குள் அவர்கள் இப்போதிருக்கும் நிலைமையையும் விளக்குகிறது. பாவத்தின் கட்டுக்குள் கண்கள் இருண்டு போய் பாவச்செயல்களில் திளைத்து இருந்தவர்களை கர்த்தர் தம்முடைய குமாரன் மூலம் கிருபை காட்டி விசுவாசத்தின் மூலம் இரட்சித்தார். கிறிஸ்துவுக்குள்ளாக அவர்களை எழுப்பி ஜீவனை அளித்தார்; உயிர்ப்பித் தார். இதை எபேசியர் 2:5–7 வசனங்கள் விளக்குகின்றன.*

*விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள்ளாக நித்திய ஜீவனை அடைவதற்கு எது ஏதுவாக இருந்தது? திட்ப உறுதியாக (*Effectual call - *பயனுறுதியாக) அவர் கள் கர்த்தரால் அழைக்கப்பட்டிருப்பதாலேயே அவர்கள் கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவனை அடைகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் பாவியாகிய மனிதனின் பாவத்தை அவனுக்கு உணர்த்தி, அவனுடைய இருதயத்தைப் புதுப்பித்து, சித்தத்தை மாற்றிக் கிறிஸ்துவைப் பற்றிய ஞானத்தை அவனுக்கு அளிக்கிறார். இந்தத் திட்ப உறுதியான அழைப்பின் (பயனுறுதி) மூலம் பரிசுத்த ஆவியானவர் பாவிகள் கிறிஸ்துவைத் தழுவிக் கொள்ளும்படிச் செய்கிறார். (2 தீமோ. 1:9).*

*இவ்வாறாக 'கிறிஸ்துவுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்' பரிசுத்த ஆவியானவரினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் என்று வேதம் விளக்கு கிறது. வெறுமனே அவர்கள் கிறிஸ்துவுக்காக தீர்மானத்தை எடுக்காமல் பரிசுத்த ஆவியியானவரின் கிரியையினாலே தங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்புக்குரிய ஆத்மீக மாற்றத்தை அநுபவித்தவர்கள். 2 தெச. 2:13ல் பவுல் தெசலோனிக்கேயரின் விசுவாசத்தைப் பற்றி விளக்கும்போது, "நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிற தினாலும், இரட்சிப்படையும்படிக்கு . . . தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே. . ." என்று கூறுவதைப் பார்க்கிறோம். இந்த வசனத் தில் சொல்லப்பட்டிருக்கும் பரிசுத்தமாக்குகிற செயலைச் செய்கிறவர் பரிசுத்த ஆவியானவரே. அவர் மனிதனுடைய வாழ்க்கையை மாற்றி அமைத்து, பரிசுத்த வாழ்க்கையை அவன் வாழும்படியான இருதயத்தை அளித்து, பழையன கழிந்து அனைத்தும் புதியனவாக மாறும்படிச் செய்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய கிரியையினாலேயே மனிதன் தீயநடவடிக்கை களுக்கும், கேட்டிற்கும் விலகியோடுகிறான்.*

*அடுத்ததாக, இவ்வாறாக கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் 'விசுவாசத்தைப்' பெற்றுக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவுக்கும் அவருடைய சுவிசேஷத்திற்கும் கட்டுப்படுவதே விசுவாசம் ஒருவரில் செய்யும் காரியம்.*

இதனாலேயே, விடுவாசிக்காமல் ஒருவரும் தேவனுக்குகந்த வாழ்க்கையை வாழ முடியாது என்று வேதம் விளக்குகிறது.

இதுவரை நாம் பார்த்தவற்றில் இருந்து விசுவாச வாழ்க்கையில் விடா முயற்சியுடன் வாழ்க்கிறவர்கள் கிறிஸ்துவால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்றும், அவர்கள் திட்ப உறுதியாக அழைக்கப்பட்டவர்களென்றும், பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களென்றும், விசுவாசத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் என்றும் அறிந்துகொண்டிருக்கிறோம்.

### (ஆ) விடாமுயற்சி

ஒரு மனிதனில் கிருபையின் கிரியை ஆரம்பித்து வைத்துள்ள கர்த்தர் அந்தக் கிரியையைக் கடைசிவரை நிறைவேற்றுவார் என்பதையே விசுவாசியின் விடாமுயற்சி என்ற வேதபோதனை விளக்குகிறது. இதைக் கீழ்வரும் வசனத்தில் தெளிவாகக் காணலாம். "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி நான் உங்களை நினைக்கின்ற போதெல்லாம் தேவனைத் துதிக்கின்றேன்." (பிலி. 1:5). இதையே பவுல் ரோமர் 8:2830 வரையிலுள்ள வசனங்களிலும் விளக்குகிறார்.

விசுவாசி தன்னுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியையும் அவருடைய ஈவுகளையும் தொடர்ந்து கொண்டிருப்பான். பரிசுத்த ஆவியானவரின் அத்தகைய ஈவுகளாக விசுவாசம் (1 யோவான் 5:15), மனந்திரும்புதல் (1 யோவான் 1:79), அன்பு (1 யோவான் 3:14–15), நம்பிக்கை (கொலோசெயர் 1:23), ஆனந்தம் (மத்தேயு 13:44) ஆகியன உள்ளன. இந்தக் கிருபைகளையே பரிசுத்த ஆவியானவர் விசுவாசியின் இருதயத்தில் ஏற்படுத்துகிறார். இந்தக் கிருபைகளை விசுவாசி ஒருபோதும் இழந்துபோக முடியாது; அவற்றை அவனுடைய வாழ்க்கையிலிருந்து ஒருபோதும் அகற்றிவிட முடியாது.

இருந்தபோதும், விசுவாசி தன்னுடைய வாழ்க்கையில் இந்த விடா முயற்சிக்கெதிரான எதிர்ப்புகளை நிச்சயம் சந்தித்தேயாக வேண்டும். அவன் தன் வாழ்க்கையில் "அநேக புயல்களையும், வெள்ளங்களையும்கூட" (1689 வி. அ, 17:1) சந்திக்க நேரிடும். அத்தோடு அவன் தன் வாழ்க்கையில் அவ நம்பிக்கையையும், பிசாசின் சோதனைகளையும் எதிர்கொண்டு குறிப்பிட்ட காலத்துக்கு கர்த்தருடைய அன்பையும், ஆறுதலையும் தன் வாழ்வில் உண ராமல் வழிதவறிப் போகவும் நேரிடும். ஆனால், இந்த தடைகளில் எதுவும் விசுவாசியை இயேசு கிறிஸ்துவிடம் இருந்து பிரிக்க முடியாது. பவுல் அப் போஸ்தலன், "நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று சொல்லுவதை வாசிக்கிறோம். (2 தீமோ. 4:7). விசுவாசி எத்தனை சோதனைகளைத் தன் னுடைய வாழ்க்கையில் அநுபவிக்க நேர்ந்தாலும் கர்த்தர் நித்திய இரட்சிப் புக்காக அவனைப் பாதுகாப்பார். (1 பேதுரு 1:5; வெளி. 13:8).

## இந்தக் கோட்பாட்டிற்கான அத்திவாரம்

1689 விசுவாச அறிக்கையில் சீர்திருத்தவாத பெரியவர்கள் விசுவாசியின் விடாமுயற்சியாகிய இந்தக் கோட்பாடு ஆறு தூண்களை ஆதாரமாகக்

கொண்டிருப்பதாக விளக்குகிறார்கள். அவர்கள் அவற்றை விளக்குவதற்கு முன்பாக ஓர் உண்மையை ஆரம்பத்திலேயே குறிப்பிடாமல் விடவில்லை. அதாவது, இந்தப் பரிசுத்தவான்களின் விடாமுயற்சி விசுவாசிகளினுடைய சுயாதீன சித்தத்தில் தங்கியிருக்கவில்லை என்பதை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். நமக்கு இரட்சிப்பைப் பெற்றுத் தருவது நமது சுயாதீன சித்தமல்ல; கர்த்தரின் கிருபையே. விசுவாசி தன்னுடைய விசுவாசத்தில் நிலைத்திருக்க தன்னில் முழுமையாகத் தங்கியிருக்கவில்லை என்பதை இதன் மூலம் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் இதை விளக்கியிருக்கிறார்கள்.

இனி பரிசுத்தவான்களின் விடாமுயற்சிக்கு ஆதாரமாக இருக்கும் ஆறு தூண்களையும் ஆராய்வோம். இதில் முதலாவது தூண்,

**(1) கர்த்தரின் மாறாத்தன்மையுடைய தெரிந்துகொள்ளுதல்.**

கர்த்தரின் தெரிந்துகொள்ளுதலின் மூலமாகவே மனிதன் விசுவாசத்தை அடைகிறான். பவுல் தெசலோனிக்கேயரைப் பார்த்து, “ஆதி முதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்.” என்று கூறுகிறார். எபேசியர் 1:4, கர்த்தர் இதைத் தன்னுடைய மகிமைக்காகவே செய்கிறார் என்று விளக்கு கிறது. யோவான் 6:38–40 வரையுள்ள வசனங்களில் இயேசு, தன்னை விசுவாசிக்கிற அனைவரும் பாதுகாக்கப்பட்டு இறுதியில் நித்திய இராஜ் யத்தை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்று விளக்குகிறார்.

**(2) கிறிஸ்துவின் வல்லமையான கிரியை**

விசுவாச அறிக்கை இதை “கிறிஸ்துவின் வல்லமையிலும், நிச்சயமான வெற்றியை அளிக்கும் அவருடைய தகுதியிலும், பரிந்துரைத்தலிலும்” என்று விளக்குகிறது. பவுல் ரோமர் 8ல், கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர் களுக்கு எதிராக ஒருவரும் குற்றஞ்சாட்ட முடியாதென்றும், “கிறிஸ்துவே மரித்தார்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரி சத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.” அதனால் விசுவாசிகள் எந்தவிதத்திலும் கண்டனத்துக்குரியவர்களல்ல என்கிறார். கிறிஸ்துவின் சிலுவை மரணம், கர்த்தர் தெரிந்துகொள்ளுதலின் மூலம் தம்மிடம் அழைத்துக்கொண்டவர்களை மகிமையை நோக்கி அழைத்துச் செல்லும் பயனுறுதியுடையது.

பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து இயேசு கிறிஸ்து ஆசாரியராக தொடர்ந்து தன்னுடைய மக்களுக்காக பரிந்துரை செய்வதன் மூலம் மீட்பின் பணியை அவர்களில் நடத்திச் செல்லுகிறார். இதையே யோவான் 17ம் அதிகாரம் விளக்குகிறது. தன்னுடைய மக்களுடைய இரட்சிப்புக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்த பணியோடு பிரிக்க முடியாத தொடர்புடை யது அவரது பரிந்துரைக்கும் பணி. லூக்கா 22:31–32ல், பேதுருவை சாத்தான் சோதிக்கவிருப்பதாக அவனிடம் எச்சரிக்கிறார். அத்தோடு அவனுடைய வெற்றிக்காக ஜெபிப்பேன் என்பதையும் இயேசு பேதுருவுக்கு உணர்த்து கிறார். கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட விசுவாசிகள் அவருடைய வல்லமையால் தொடர்ந்து காக்கப்படுகிறார்கள். தங்களுடைய கிருபையின் அநுபவ வாழ்க்கையில் அவர்கள் இறுதிவரை விடாமுயற்சியுடன் தங்களு

*டைய விசுவாச வாழ்க்கையை நடத்துவார்கள்.*

**(3) கர்த்தருடைய ஆணை**

*பரிசுத்தவான்களின் விடாமுயற்சி தங்கி நிற்கும் மூன்றாவது ஆதாரத் தூண் கர்த்தருடைய வாக்குத் தத்தமாகும். இதை எபிரேயர் 6:16–20 வரையுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். இதன்படி ஆபிரகாம் கர்த்தரின் வாக்குத் தத்தத்தை அவருடைய ஆணையின் மூலம் பெற்றுக்கொண்டதாக வாசிக் கிறோம். அதேபோல விசுவாசிகளை அழைத்த தேவன் தன்னுடைய வாக்குத்தத்தத்தை ஓர் ஆணையின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். எப்போதும் தன்னுடைய வாக்குறுதிகளைத் தவறாமல் நிறைவேற்றும் பரிசுத்தமான தேவன் இதைச் செய்திருக்க வேண்டிய அவசியமில்லை. இருந்தபோதும் தன்னுடைய பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஆணையிட்டுத் தன்னுடைய வாக்குறுதிகளை அவர்களுக்கு அளித்திருக்கிறார். இந்த வாக்குத் தத்தமும், ஆணையும் கர்த்தர் அளித்துள்ள இரட்சிப்பின் மூலம் விசுவாசிகளுக்கு ஆறுதலையும், ஆனந்தத்தையும் அளிக்கின்றன.*

**(4) அவர்களில் உள்ள பரிசுத்த ஆவியானவர்**

*எபேசியர் 1:13–14 வரையுள்ள வசனங்களில் பவுல், மீட்பின் பலன்களில் ஒன்றாக விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவர் முத்திரையிட்டு அளிக்கப் பட்டுள்ளார் என்று விளக்குகிறார். 'முத்திரை' என்ற பதம் உரிமையையும், பாதுகாப்பையும் விளக்குவதாக இருக்கிறது. அந்தக் காலத்தில் அடிமைகள் அவர்களுடைய சொந்தக்காரர்களின் உரிமை என்பதை விளக்குவதற்காக அவர்களில் முத்திரையிடும் வழக்கம் இருந்தது. இன்றும் மாடுகளின் உரிமையாளர்கள் தங்களுடைய மாடுகளுக்கு இத்தகைய முத்திரையிடும் வழக்கம் இருக்கிறது. இதேவிதமாக நம்முடைய ஆத்மீக சொத்துக்களின் உரிமைப் பத்திரமாக நாம் பரிசுத்த ஆவியானவரை அடைந்திருக்கிறோம். கர்த்தர் பரிசுத்த ஆவியானவரை நமக்கு முத்திரையிட்டு அளித்திருக்கிறார். ஓபிரையன்* (O'Brian) *எபேசியருக்கு எழுதிய வியாக்கியானத்தில் சொல்லுவதைப் போல "நம்முடைய சுதந்திரத்தின் அச்சாரமாக* (We have been provided with an advance installment of the Spirit) *அவர் அளிக்கப் பட்டிருக்கிறார். . . கர்த்தர் நாம் பரலோகத்தில் அநுபவிக்கப் போகும் சொத்தை மட்டும் இங்கே குறிப்பிடாமல், அந்த ஆசீர்வாதத்தை இந்த உலகத்தில் நாம் ருசி பார்க்கப்போகிறோம் என்றும் வாக்குத்தத்தம் செய் கிறார்." விசுவாசிகள் தாங்கள் பெற்றுக்கொண்டிருக்கிற பரிசுத்த ஆவியானவரை இழந்து விடலாம் என்ற தவறான போதனை, கர்த்தர் தன்னுடைய ஆணையை மீறித் தாம் கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமல் போய்விடலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது.*

**(5) விசுவாசிகளில் இருக்கும் கர்த்தரின் வித்து**

*விசுவாச அறிக்கை (1689, 17:1) விளக்கும் பரிசுத்தவான்களின் விடா முயற்சியின் ஐந்தாம் தூணாகிய, விசுவாசிகளில் இருக்கும் கர்த்தரின் வித்து என்பது அவர்களில் இருக்கும் பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதாக இருக்கிறது. யோவான், 1 யோவான் 3:9ல், "தேவனால் பிறந்த எவனும் (தொடர்ச்சியாக) பாவஞ் செய்யான், ஏனெனில் அவருடைய வித்து*

அவனுக்குள் தரித்திருக்கிறது.” என்கிறார். இந்த வித்து பரிசுத்த ஆவியான வரையே குறிக்கிறது. 1 யோவான் 5:18ல், யோவான், தேவனால் பிறந்தவன் தொடர்ச்சியாகப் பாவஞ் செய்யான் என்று கூறி அதற்குக் காரணம் “அவன் தன்னைக் காக்கிறான்” என்கிறார். அவன் பரிசுத்த ஆவியின் வழியில் நடப்பதன் மூலம் தன்னைப் பாவத்தில் இருந்து காத்துக் கொள்ளு கிறான் என்பது இதற்குப் பொருள்.

**(6) கர்த்தரின் கிருபையின் உடன்படிக்கை**

பரிசுத்தவான்களின் விடாமுயற்சியாகிய போதனைக்கு இறுதி ஆதாரத் தூணாக இருப்பது கர்த்தரின் கிருபையின் உடன்படிக்கையாகும். பழைய உடன்படிக்கையைப் போலல்லாமல் புதிய உடன்படிக்கை கர்த்தரின் உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தையும், விசுவாச வாழ்க்கையில் விடாமுயற்சியையும் தருகிறது (யெரேமியா 31:33–34; 32:40; எபிரேயர் 10:11–18). “புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை வாழ்க்கையில் பெற்றுக்கொண்டவர்கள் தங்களுடைய விசுவாச வாழ்க்கை யில் பின்வாங்கி இரட்சிப்பை இழந்துபோவார்கள் என்ற போதனையை வேதத்தில் எங்குமே காணமுடியாது.” என்கிறார் சாமுவேல் வோல்டிரன்.

இதுவரை நாம் பார்த்த ஆறு தூண்களும் பரிசுத்தவான்களின் விடா முயற்சியாகிய வேத போதனைக்கு ஆதாரமாக இருந்து இந்தப் போதனை எந்தளவுக்கு சத்தியமானது என்பதை ஆணித்தரமாகப் போதிக்கின்றன.

## இந்தக் கோட்பாடுபற்றிய ஓர் முன்னெச்சரிக்கை

1689 விசுவாச அறிக்கையை எழுதிய பெரியவர்கள் இந்தப் போதன பற்றிய ஒரு அவசியமான முன்னெச்சரிக்கையும் விடுத்திருக்கிறார்கள். அதாவது, ‘பரிசுத்தவான்களின் விடாமுயற்சி’யாகிய போதனை உறுதியாக வேதத்தில் காணப்பட்டபோதும், மெய்க் கிறிஸ்தவர்கள் மோசமான பாவத் தில் விழுந்துவிடலாம் என்றும் அதில் அவர்கள் சிறிது காலம் தொடர்ந் திருந்துவிடலாம் என்பதையும் வேதம் போதிப்பதாக நமது பெரியவர்கள் விளக்குகிறார்கள். இதையே வேதம் போதிக்கும் ‘பரிசுத்தவான்களின் பின்வாங்குதல்’ (The Doctrin of Backsliding) என்று அறிந்துகொள்கிறோம். இந்தப் பின்வாங்குதலைப் பற்றியே விசுவாச அறிக்கையின் 17ம் அதிகாரத் தின் இறுதிப்பகுதி விளக்குகிறது.

**அ. இதற்கான காரணிகள்**

இத்தகைய பின்வாங்குதலுக்கு நான்கு காரணங்கள் இருப்பதாக வேதத் தில் இருந்து அறிந்துகொள்கிறோம்.

**(1) சாத்தானின் சோதனை** – இயேசு கிறிஸ்துவும்கூட சாத்தானால் சோதிக் கப்பட்டதாக மார்க்கு 1:13ல் இருந்து அறிந்துகொள்ளுகிறோம். 1 பேதுரு 5:8ல் பேதுரு, “உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்களாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்” என்று சாத்தானைப் பற்றிச் சொல்லுவதைப் பார்க்கிறோம். ஆகவே, விசவாசி சாத்தானால் சோதிக்கப்படுகிறபோது அவனை எதிர்த்து நிற்கா விட்டால் விசுவாசத்தில் பின்வாங்கிப்போக நேரிடும்.

*(2)* **உலக இச்சை** – *யோவான், 1 யோவான் 2:15ல், "உலகத்திலும் உலகத்தில்லுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை" என்கிறார். உலக இச்சைக்கு விசுவாசி தன்னை உட்படுத்திக் கொண்டால் விசுவாச வாழ்க்கையில் பின்வாங்கிப் போக நேரிடும்.*

*(3)* **விசுவாசி தன்னில் எஞ்சியிருக்கும் பாவத்தோடு நடத்தும் போராட்டம்** (the ongoing remaining corruption within man) - *யாக்கோபு 1:14ல், "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப் படுகிறான்" என்கிறார் யாக்கோபு. இப்பகுதியில் 12–16 வரையுள்ள வசனங்கள் விசுவாசிக்கேற்படும் சோதனையைப் பற்றியும், விசுவாசி அதை எதிர் கொள்ள வேண்டிய முறையைப் பற்றியும் யாக்கோபு விளக்குகிறார். இதை விசுவாசி பின்பற்றாவிட்டால் பின்வாங்கிப்போக நேரிடும்.*

*(4)* **பரிசுத்தவான்களின் விடாமுயற்சிக்காகத் தரப்பட்டுள்ள கிருபையின் சாதனங்களை அலட்சியப்படுத்துதல்** – *விசுவாசி தன்னுடைய பரிசுத்த வாழ்க்கையில் வளர்ச்சியடைய கர்த்தர் தன்னுடைய சபையின் மூலமாக அநேக கிருபையின் சாதனங்களை அவனுக்கு அளித்திருக்கிறார். ஜெபம், வேதவாசிப்பு, ஆராதனை, ஐக்கியம், பிரசங்கம், திருவிருந்து, போதக ஊழியம் போன்ற பலவற்றைத் தந்திருக்கிறார். இவற்றை அலட்சியப்படுத்தி ஊக்கத்தோடு பயன்படுத்திக்கொள்ளாதபோது விசுவாசி தன்னுடைய விசுவாச வாழ்க்கையில் பின்வாங்க நேரிடும். அதனால்தான் எபிரேயர் 10:24–25ல், "சபைகூடி வருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல் நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்" என்று அந்நிருபத்தின் ஆசிரியர் ஆலோசனை கூறுகிறார்.*

## ஆ. இதனால் ஏற்படும் விளைவுகள்

*1689 விசுவாச அறிக்கை 17ம் அதிகாரத்தில் பரிசுத்தவான்களின் பின்வாங்குதலின் காரணமாக ஏற்படும் ஆறு விளைவுகளை வேதத்தில் இருந்து எடுத்துக்காட்டுகிறது.*

*(1)* **கர்த்தர் மனஸ்தாபமடைதல் (சங்கீதம்** *38:1-8)* – *இந்தப் பகுதியில் தாவீது கர்த்தரின் அன்பைத் தன்னில் உணர முடியாமல் அதற்காகப் புலம்புவதைக் காண்கிறோம். நமது பாவம், நாம் கர்த்தரைவிட்டுப் பிரிந்துவிட்டது போன்ற உணர்வை நம்மில் ஏற்படுத்தும். நம்மீது கர்த்தர் மனஸ்தாபம் கொண்டிருக்கிறார் என்பதை இதன் மூலம் நாம் உணர வேண்டும்.*

*(2)* **ஆவியானவரைத் துக்கப்படுத்தல் (1 தெசலோ. 5:14)** – *"ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்."*

*(3)* **கர்த்தரின் கிருபைகளையும், ஆறுதலையும் உணராமல் போகுதல் (சங்கீதம் 51:10-12)** – *தாவீது தன்னுடைய பாவத்துக்காக வருந்தி கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்கும் இந்தப் பகுதியில் தான் கர்த்தரின் கிருபைகளையும், ஆறுதலை*

*யும் அநுபவிக்கமுடியாமல் இருப்பதைப் பின்வருமாறு விபரிக்கிறான்: "சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலவரமான ஆவியை என் உள்ளத் திலே புதுப்பியும். உமது சமூகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்."*

**(4) இருதயம் கடினமாகுதலும், மனச்சாட்சி காயப்படுதலும் (சங்கீதம் *32:3-4*)** – *"நான் அடக்கிவைத்த மட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்பு கள் உலர்ந்துபோயிற்று." பாவம் செய்யும் விசுவாசியின் இருதயம் கடினப் பட்டுப்போகும். இருந்தபோதும் அவனுடைய இருதயம் அவனைத் தொடர் ந்து குற்றஞ்சாட்டும். அவனுடைய மனச்சாட்சி காயப்பட்டு அவன் திருந்தும்வரை அமைதியை வாழ்வில் அனுபவிப்பதில்லை.*

**(5) நம்மைச் சார்ந்த சகோதரர்கள் துக்கமடைவதோடு, கெட்டபெயரைப் பெறுதல் (2 சாமுவேல் *12:14*)** – *ஆனாலும் இந்தக் காரியத்தினாலே கர்த்த ருடைய சத்துருக்கள் தூஷிக்க நீ காரணமாயிருந்தபடியினால், உனக்குப் பிறந்த பிள்ளை நிச்சயமாய் சாகும் என்று சொல்லி, நாத்தான் தன் வீட்டுக் குப் போய்விட்டான்."*

**(6) தங்கள் மேல் கர்த்தரின் தற்காலிக தண்டனையை வரவழைத்துக் கொள்ளுதல் (1 கொரிந்தியர் *11:27-32*)** – *கொரிந்து சபை விசுவாசிகளில் பலர் திருவிருந்தை அலட்சியப்படுத்தி நடந்துகொண்டதாலும், வேறுவிதங் களில் பாவம் செய்ததாலும் பலவீனமடைந்து, வியாதிகளை அநுபவித்தார் கள். பலர் இறந்தும் போனார்கள். "இதினிமித்தம் உங்களில் அநேகர் பல வீனரும், வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையுமடைந் திருக்கிறார்கள்." இவை இந்த உலகத்தில் அவர்களுக்குக் கிடைத்த தற்காலிகமான தண்டனையாகும். அவர்கள் இரட்சிப்பை இழக்காத போதிலும் கர்த்தரை மகிமைப்படுத்தி தொடர்ந்து இந்த உலகில் வாழ முடியாதபடி அவர்களுடைய பாவம் அவர்களுடைய உயிரை வாங்கியது.*

### இ. இக்கோட்பாடு பற்றிய இறுதி விளக்கம்

*இறுதியாக மெய்க்கிறிஸ்தவர்களைப் பற்றி விளக்கும் விசுவாச அறிக்கை, "அவர்கள் பரிசுத்தவான்களாதலால் அவர்களுடைய மனந்திரும்புதல் புதுப் பிக்கப்பட்டு அவர்கள் இறுதிவரை கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தின் மூலம் பாதுகாக்கப்படுகிறார்கள்." என்று முடிக்கிறது.*

*இதனால் விசுவாசிகள் இந்த உலகத்தில் எப்படி வாழ்ந்தாலும் அதாவது, அவர்கள் கவலையீனமாக வாழ்ந்தோ அல்லது மோசமான பாவத்தில் வீழ்ந்து அதில் தொடர்ந்திருந்து மனந்திரும்பாமல் போனாமலோ நிச்சயம் இறுதியில் நித்திய இரட்சிப்பை அடைவார்கள் என்று பொருள்கொள்ளக் கூடாது. சங்கீதம் 130:3 கூறுவதுபோல் கர்த்தர் மன்னிக்கிறவராக இருக்கிறார். அத்தோடு, மன்னிப்படைந்த மனிதனுடைய இருதயத்தில் தேவ பயத்தை யும் கர்த்தர் பதித்திருக்கிறார்.*

(இந்த ஆக்கத்தை வரைந்தளித்துள்ள கல்வின் வோல்டன், அமெரிக்காவில் மிச்சிகன் மாநிலத்தில் ஓர் சீர்திருத்த பாப்திஸ்து சபையின் போதகராக இருக்கிறார்.)

# அனாபாப்திஸ்து இயக்கம்

## சுவிஸ் அனாபாப்திஸ்து இயக்கம்

*சீர்திருத்தவாதத்திற்கெதிராக அதன் எதிரிகள் ஜெர்மனியில் ஒன்றுகூடிக் கொண்டிருந்தபோது திருவிருந்து பற்றிய போதனையில் லூதரைப் பின்பற்றியவர்களுக்கும், சுவிஸ்* (Swiss) *இறையியலறிஞர்களுக்கும் இடையில் தீவிரமான வாக்குவாதம் ஏற்பட்டது. சுவிட்சர்லாந்தில் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களில் முக்கியமானவர் சுவிங்லி* (Zwingli). *ஹெசியைச் சேர்ந்த பிலிப்* (Philip of Hesse) *1529ல் மார்பேர்க்* (Marburg) *என்ற இடத்தில் இந்தப் பிரச்சனைக்கு தீர்வுகாண ஒரு கூட்டத்தைக் கூட்டினார். கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு இப்போதனை பற்றிய பதினான்கு அம்சங்களில் பூரணமான உடன்பாடிருந்தது. பதினைந்தாவது அம்சத்தில் அவர்களுக்கு தீவிரமான கருத்துவேறுபாடு ஏற்பட்டது. ரோமன் கத்தோலிக்க மதம் போதித்த திருவிருந்து பற்றிய போதனையை அவர்கள் அனைவருமே வேதத்திற்கு எதிரானது என்று எதிர்த்தார்கள். ஆனால், மார்டின் லூதர், கிறிஸ்துவின் சரீரம் அப்பத்திலும், திராட்சை இரசத்திலும் இருப்பதாகவும், இயேசுவின் வார்த்தைகளான இது “என்னுடைய சரீரம்” என்பதை நாம் எழுத்துபூர்வமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் விளக்கினார். சுவிஸ் சீர்திருத்த இறையியலறிஞரான சுவிங்லியோ அப்பமும், திராட்சை இரசமும் கிறிஸ்துவின் சிலுவைப் பலியை நினைவுகூர்வதற்கு மட்டுமே நமக்கு உதவுகின்றன என்றும், அவற்றை விசுவாசத்தினால் விசுவாசிகள் புசித்து பெலப்படுகிறார்கள் என்றும் விளக்கினார். மார்டின் லூதர் தன்னுடைய கொள்கையில் இருந்து மீறமாட்டேன் என்று விடாப்பிடியாக இருந்தார். இது அவர்கள் மத்தியில் கருத்து வேறுபாட்டை மட்டுமல்லாமல் மனவேறுபாட்டையும் ஏற்படுத்தியது.*

*சுவிங்லியும் அவரைச் சார்ந்தவர்களும் திருவிருந்தில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தப் பாடுபடவில்லை; குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பதையும் அடியோடு எதிர்த்தார்கள். குழந்தைகள் வளர்ந்து சிந்திக்க ஆரம்பிப்பதற்கு முன்பாக அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்பது சுவிங்லியின் தீவிரமான கருத்தாயிருந்தது. இருந்தாலும் மற்றவர்கள் மனதைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காக அதைத் தொடர்ந்து பின்பற்றுவதில் தவறில்லை என்றார் சுவிங்லி. “கிறிஸ்துவின் வார்த்தையை நாம் பின்பற்றுவதானால் குழந்தைகளுக்கு ஒருபோதும் ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்றார் சுவிங்லி. இது அனைவருக்கும் ஏற்புடையதாக இருக்கவில்லை. சுவிங்லியோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்த அவருடைய மாணவர்களான கொன்டிரெட் கிரெபெலுக்கும்* (Condrad Grebel), *ஃபீலிக்ஸ் மென்ட்சுக்கும்* (Felix Mantz) *சுவிங்கிலியின் முரண்பாடான சிந்தனைப் போக்கு பிடிக்கவில்லை. அவர்கள் தீவிரமான சீர்திருத்தத்தை விரும்பி*

னார்கள். இதன்காரணமாக பின்னால் அவர்கள் பெருந்துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. சுவிஸ் அனாபாப்திஸ்து இயக்கத்தில் குறிப்பிடத் தகுந்த இன்னொருவர் ஹூப்மேயர் (Hubmaier). இவரும் விசுவாசிகளுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்பதில் சுவிங்லியோடு அதிக தர்க்கங்களில் ஈடுபட்டு பின்னால் துன்பங்களை அனுபவித்தார்.

சீர்திருத்தம் வளர்ந்துகொண்டிருந்த ஆரம்ப காலத்தில் சீர்திருத்தவாதிகள் இறையியல் போதனைகளில் வேதபூர்வமான கோட்பாடுகளைப் பின்பற்ற சிந்திக்க ஆரம்பித்தது மட்டுமல்லாமல் அவைபற்றிப் பலவிதமான வாதங்களிலும், தர்க்கங்களிலும் ஈடுபட நேர்ந்தது. அதுவரை காலமும் வேதம் மறைத்து வைக்கப்பட்டிருந்தபடியால் சீர்திருத்தவாதிகள் சத்தியத்தை நிலைநாட்ட அதிகம் பாடுபட வேண்டியிருந்தது. அனாபாப்திஸ்துகளில் சிலர் ரோமன் கத்தோலிக்க முறைகளில் இருந்து அடியோடு விடுதலை வேண்டுமென்று தீவிரமான சீர்திருத்தத்தை நாடினார்கள். இவர்களை அக்கால அரசு கடுமையாக தண்டித்தது.

## அனாபாப்திஸ்து இயக்கம்

பதினாறாம் நூற்றாண்டில் வரலாற்றில் திருச்சபை சீர்திருத்தம் ஆரம்பித்த காலத்தில் ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பெயரே “அனாபாப்திஸ்து” (Anabaptist) என்பது. சீர்திருத்தவாதிகளான மார்டின் லூதரும் அவரோடிணைந்து சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தவர்களும் வேதம் மட்டுமே அதிகாரமுள்ளது என்றும் அது மட்டுமே திருச்சபையிலும், தனி மனிதனின் ஆத்மீக விஷயங்களிலும் அதிகாரம் செலுத்தக்கூடியது என்றும் கூறி திருச்சபை சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்த போது கிறிஸ்தவர்களில் ஒரு சாரார் அவை மட்டும் போதாது, அதற்கு மேலாகப்போய் திருமுழுக்கு, திருவிருந்து போன்ற போதனைகளிலும் வேத அடிப்படையில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்று கூறினர். இத்தகைய மாற்றங்களை நாடிய அனாபாப்திஸ்து இயக்கத்தை இனி ஆராய்வோம்.

வரலாற்று அறிஞர்களில் சிலர் அனாபாப்திஸ்து இயக்கத்தின் தலைவர்கள் வேதபோதனைகளை மீறிய தீவிரமான கருத்துக்களைக் கொண்டவர்களாக இருந்தனர் என்றும், தீர்க்கதரிசனங்களிலும், ஆயிர வருட அரசாட்சி பற்றிய தீர்க்கதரிசனங்களிலும் நாட்டம் செலுத்தி அன்று நிகழ்ந்து கொண்டிருந்த திருச்சபை சீர்திருத்தத்திற்குத் தடையாக இருந்தனர் என்றும் காட்டியுள்ளார்கள். இதில் ஓரளவுக்கு உண்மையிருந்த போதிலும் அனாபாப்திஸ்து இயக்கத் தலைவர்கள் எல்லோரும் மோசமானவர்களாக இருக்கவில்லை என்பதை பிற்கால வரலாற்று ஆய்வுகள் காட்டுகின்றன.

அனாபாப்திஸ்து இயக்கம் 1522ல் சூரிக் (Zurich) என்ற இடத்தில் “சகோதரர்கள்” என்று தங்களை அழைத்துக்கொண்ட ஒரு குழுவினரின் மத்தியில் ஆரம்பமானது. இவர்களுக்குத் தலைவர்களாக கொன்றட் கிரெபலும் (Condrad Grebel), பீலிக்ஸ் மென்ட்ஸூம் (Philix Mantz) இருந்தனர். இவர்கள் வேதப்படிப்பில் பெரும் அக்கறை காட்டினர். இவர்கள் சுவிங்லியோடு அதிக தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர் என்று

*ஏற்கனவே பார்த்தோம். இவர்கள் மார்டின் லூதரும், சுவிங்லியும் ஆதரித்த 'தேசத்தின் கட்டுப்பாட்டில் திருச்சபை இருக்க வேண்டும்' என்ற கொள்கையை முற்றாக எதிர்த்தனர். அதுமட்டுமல்லாது சபைகளில் இருந்து அத்தனைப் படங்களும், சிலைகளும் அகற்றப்பட வேண்டும் என்றும் கூறினர். இவர்கள் நேர்மையான பக்திவிருத்தி உடையவர்களாகவும் வேதம் மட்டுமே தங்களுடைய ஆயுதம் என்றும் வலியுறுத்தினர். இவர்கள் ரோமன் கத்தோலிக்க மதம் பின்பற்றிய குழந்தை ஞானஸ்தானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.*

*இவர்களுடைய போதனைகள் 1525ல் சூரிக்கைச் சுற்றியிருந்த பகுதிகளில் பரவ ஆரம்பித்தன. அந்த நகரத்தின் கவுன்சில் இவர்கள் மீது அநியாயமான குற்றச் சாட்டுகளைச் சுமத்தி இவர்களுக்கெதிரான சட்டங்களைக் கொண்டுவந்தது. இதனால் இவர்களில் அநேகமானோர் மரணத்தைத் தழுவ நேரிட்டது. சுவிங்லிக்கும் இதில் தொடர்பிருந்தது. ரோமன் கத்தோலிக்க மதத்திற்கெதிராக திருச்சபை சீர்திருத்தம் தீவிரமடைந்து கொண்டிருந்த அக்காலத்தில் லூதர் முதற்கொண்டு பல சீர்திருத்தவாதிகள் திருச்சபை தேசத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமென்று எண்ணினர். அதை அனாபாப்திஸ்து இயக்கம் எதிர்த்ததொடு அனைத்து ஆத்மீகக் காரியங்களிலும் முழுமுற்றாக சீர்திருத்தம் வேண்டுமென்று செயல்பட்டதால் பலரும் அவர்களை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அதனால் அனாபாப்திஸ்து இயக்கத்தைத் தடைசெய்ய அவர்கள் அரசோடு ஒத்துழைத்தனர்.*

*அனாபாப்திஸ்து இயக்கம் 1525 திலிருந்து 1528 வரை ஜெர்மனியில் பலமாக வளர ஆரம்பித்தது. முக்கியமாக ஸ்ட்ரஸ்பேர்கிலும்* (Strasburg), *ஒக்ஸ்பேர்கிலும்* (Augsburg) *அதிகம் வளர்ந்தது. இவ்வியக்கத்தின் அங்கத்தவர்கள் புரட்சிவாதிகள் என்று மகுடம் சூட்டப்பட்டும், அரசுக்கெதிராக கலகம் செய்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டும் அநியாயமாக கேவலப்படுத்தப்பட்டனர். 1529ல் கூடிய ஸ்பியர் கவுன்சில், ஏற்கனவே குழந்தை ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு திருமுழுக்கு கொடுப்பவர்களுக்கும், அவ்வாறு மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறவர்களுக்கும் எதிராக அரசு எந்தவித விசாரணையுமில்லாமல் மரண தண்டனை விதிக்க வேண்டும் என்று அரசை வற்புறுத்த முடிவெடுத்தது. அதற்குப்பின் ஒருசில வருடங்களுக்குள் இரண்டாயிரம் பேர் வரையில் இறந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.*

*ஆரம்பத்தில் மார்டின் லூதர் இந்தவிதமாக அனாபாப்திஸ்துகள் துன்புறுத்தப்பட்டதை எதிர்த்தார். ஆனால், அந்த இயக்கம் வளர்த்த வேகத்தைப் பார்த்த அவர் 1530ல், வாளினால் அரசு சட்டப்படி அந்த இயக்கத்தை ஒடுக்க ஆதரவளித்தார். அனாபாப்திஸ்து இயக்கம் திருச்சபை சீர்திருத்தத்திற்கு எதிரானது என்று அவர் நம்பினார். நல்லதும், தவறானதும் கலந்திருந்த அனாபாப்திஸ்து இயக்கத்தை லூதரால் புரிந்துகொள்ள முடியவில்லை. காலத்தாலும், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் நிர்ப்பந்தத்தாலும் லூதர் இவ்விதமாக முடிவெடுக்க நேர்ந்தது.*

இருந்தபோதும் அனாபாப்திஸ்து இயக்கம் தொடர்ந்து வேகமாக வளர ஆரம்பித்தது. நெதர்லாந்து தேசத்தில் இதன் தலைவர்களில் ஒருவரான மெனோ சிமன்ஸ் (Mano Simons) அதிக செல்வாக்குள்ளவராக இருந்தார். 1536ல் மரணத்தைத் தழுவும்வரை ஒஸ்திரியாவிலும், மொரேவியாவிலும், போலந்திலும் ஜேக்கப் ஹட்டர் (Jacob Hutter) இவ்வியக்கத்தின் தலைவராக இருந்தார். பின்னால் அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும், கனடாவிலும் எழுந்த மெனோனைட் இயக்கமும் (Manonnite), ஹட்டரைட் இயக்கமும் (Hutterite) இவர்களுடைய பேயர்களைச் சூடியே தோன்றின. இவர்கள் எப்பொழுதுமே அமைதியை நாடியவர்களாகவும், பக்தியில் நாட்டமுள்ள வர்களாகவும் இருந்ததோடு தங்களைச் சார்ந்தவர்களோடு ஒரு கூட்டமாகத் தனித்து வாழ்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அனாபாப்திஸ்து இயக்கம் பல குழுக்களாக இருந்ததோடு அவர்கள் மத்தியில் இருந்த போதனைகளும், நடைமுறைக் கிரியைகளும் ஒரேவிதமாக இல்லாதிருந்ததால் இவ்வியக்கத்தைச் சார்ந்த எல்லோரையும் ஒரே குடைக் குள் வைத்து விளக்கமளிப்பது முடியாத காரியம். இவர்களில் சிலர் பதின் மூன்றாம் நூற்றாண்டிலிருந்து போப்புக்கு எதிராக செயல்பட்ட சில குழுக் களின் போதனைகளைப் பின்பற்றினர். அனாபாப்திஸ்து இயக்கத்தின் போதனைகளைப் பொதுவாக விளக்குவதானால், அவர்கள் இயேசு கிறிஸ்து வின் உடனடி வருகையை எதிர்பார்த்ததோடு, திருச்சபையும் தேசமும் இணைந்திருப்பதைக் தீவிரமாகக் கண்டித்தார்கள். அத்தோடு இவர்கள் தீவிர ஆர்வமுடையவர்களாக இருந்தபடியால் சில வேளைகளில் அநாவசி யமாக உணர்ச்சிவசப்பட்ட செயல்களிலும் ஈடுபட்டார்கள்.

ரோமன் கத்தோலிக்க மதம் இவர்களைத் தீவிரமாகத் தண்டித்தது. அக்கால நிலவரப்படி திருச்சபையும் நாடும் ஒன்றாகக் கருதப்பட்டு அரசுக்கு திருச்சபை மேல் அதிகாரம் இருந்தபடியாலும், சீர்திருத்தவாதி களுக்கு அனாபாப்திஸ்து இயக்கத்தின் போதனைகளில் சந்தேகமிருந்த தாலும் அனாபாப்திஸ்து இயக்கத்தை அரசு அழிக்க முயன்றபோது அதற் கெதிராக அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ரோமன் கத்தோலி க்க மதமே அவர்களுடைய அழிவுக்கு பெருங்காரணமாக இருந்ததே தவிர சீர்திருத்த வாதிகளல்ல என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும். இவர்களைத் துன்புறுத்தியதில் ஜோன் கல்வினுக்கு எந்தத் தொடர்பும் இருக்கவில்லை; அவர்களை அழிப்பதனால் எந்த நன்மையும் ஏற்படும் என்று கல்வின் நினைக்கவில்லை. அக்காலத்தில் ரோமன் கத்தோலிக்கரோ அல்லது சீர்திருத்தவாதிகளோ உணர்ந்திருக்காத அளவுக்கு மத சுதந் திரத்தின் அவசியத்தையும், மனச்சாட்சியின் சுதந்திரத்தின் அவசியத்தையும் அனாபாப்திஸ்து இயக்கம் உணர்ந்திருந்தது என்று கூறுவது மிகைப்படுத்திக் கூறுவதாகாது. பாப்திஸ்து சபைப்பிரிவினருக்கும் (Baptists), குவேக்கர்களுக் கும் (Quakers), சகோதரத்துவ இயக்கத்தினருக்கும் (Brethren) அனாபாப் திஸ்துகளோடு தொடர்பிருந்தபோதும் இவர்களில் எந்தப் பிரிவினருமே அனாபாப்திஸ்து இயக்கத்தில் இருந்து உருவானவர்கள் என்று அறிவித்துக் கொள்வதில்லை.

திருமறைத்தீபம் பத்திரிகையின் ஆசிரியர்

## போதகர் ஆர். பாலின்

# - அருளுரைகள் -

*1. கர்த்தரின் பார்வையில் நோவா-1*
*2. கர்த்தரின் பார்வையில் நோவா-2*
*3. கர்த்தரின் பார்வையில் திருச்சபை*
*4. வாலிபர்களே ஜாக்கிரதை!*
*5. கர்த்தரின் தண்டனை*
*6. பத்துக் கட்டளைகளின் முக்கியத்துவம் - 1-2*
*7. பேரலைகளின் மூலம் பேசும் கர்த்தர்*
*8. நமது சீர்திருத்த பாரம்பரியம்*
*9. சீர்கெட்ட சமுதாயத்தின் மத்தியில் கர்த்தரின் ஊழியம்*
*10. திரும்பிப் பார்ப்போம், திருந்தி வாழ்வோம்*
*11. கர்த்தரை எதிர்ப்பவன் யார்?*
*12. தமிழகத்தில் கிறிஸ்தவத்தின் நிலை*

இப்போது ஒலி, ஒளி நாடாக்களில் **(Audio, VCD, DVD)** கிடைக்கும். மேலும் அநேக பயனுள்ள செய்திகளுக்கும் எழுதிப் பெற்றுக் கொள்ள வேண்டிய முகவரி:

**இவாஞ்செலிக்கள் பாப்திஸ்து சபை**
**22 டீ. பி. கே. மெயின் வீதி**
**பைகாரா, மதுரை 625004**

## நூல் வெளியீடுகள்
(ஜுன் 2006)

1. பத்துக் கட்டளைகள்
2. பிரசங்கிகளின் இளவரசன் – சார்ள்ஸ் ஹேடன் ஸ்பர்ஜன் (படங்களுடன்)

(22 டீ. பி. கே மெயின் வீதி, பைகாரா, மதுரை 625004)

# எண்ணங்கள்!

வெகு தொலைவிலிருக்கும் ஓர் தேசத்திலிருந்து சந்தர்ப்ப சூழ்நிலைகளை பயன்படுத்தி கர்த்தர் உங்களைப் பயன்படுத்தி வருவதற்காக அவருக்கு நன்றி கூறுகிறேன். உங்களுடைய மனைவி முதற்கொண்டு இந்த இலக்கியப் பணியில் உங்களோடு பங்கேற்று உழைக்கும் அனைவருமே மனிதர்களுக்காக அல்லாமல் கர்த்தருக்காக உழைப்பதால் அவர்களுக்குத் தகுந்த வெகுமதியைக் கர்த்தர் அளிப்பார். இத்தகைய இலக்கியப்பணியில் ஈடுபடும் எவரும் சந்திக்க வேண்டிய இடையூறுகளையும், பிரச்சினைகளையும் நான் நன்கறிவேன். மொழி தெரியாவிட்டாலும் உங்கள் சபை மக்கள் உங்களுக்கு இவ்வூழியத்தில் பக்கபலமாக இருந்து துணைபுரிந்து வருவது பாராட்டுக்குரியது. கர்த்தர் அவர்களுடைய பங்கான வெகுமதியைத் தராமலிருக்க மாட்டார்.

***- என். ஜோன் ஜெயானந்தம், தமிழ்நாடு (மின் அஞ்சலில் ஆங்கிலத்தில் வந்த கடிதத்தின் ஒருபகுதி)***


நான் ஒரு வேதாகமக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறேன். பத்திரிகையின் சில இதழ்களை எனது கல்லூரி ஆசிரியரின் உதவியால் வாசிக்க முடிந்தது. திருமறைத்தீபம் எந்தளவுக்கு எனக்கு உதவி வருகிறது என்பதை வார்த்தைகளால் விளக்க முடியாது. குறிப்பாக கடந்த வருடத்தின் முதல் இரண்டு இதழ்களின் மூலம் தமிழ்ப் பண்பாட்டில் சில எவ்வாறு நம்முடைய விசுவாச வாழ்க்கையைப் பாதிக்கின்றன என்பதை உணர்த்தியமைக்கு நன்றி. மேலும் ‘பிரசங்கம் தயாரிப்பது எப்படி?’ என்பது பற்றிய விளக்கவுரைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றன. தமிழின் மேலும், தமிழ் மக்களின் மேலும் நீங்கள் கொண்டுள்ள அக்கறைக்கு நன்றி. உங்கள் எழுத்துக்கள் மூலம் தமிழ் கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் விழிப்புணர்ச்சி ஏற்பட கர்த்தர் உதவி செய்வாராக. என்னுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், சபை மக்களின் வளர்ச்சிக்கும் உதவியாக இருக்க திருமறைத்தீபத்தை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***- எஸ். சாமுவேல், தமிழ்நாடு***

திருமறைத்தீபம் பத்திரிகையைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல முயற்சிகள் செய்தும் அது எனக்குக் கிடைக்காமல் இருப்பது வருத்தம் தருகிறது. தற்போது என்னுடைய நண்பரிடம் இருந்து பத்து ஆண்டு கால இதழ்களையும் வாங்கிப் படிக்க கர்த்தர் கிருபை செய்தார். படித்த பல ஆக்கங்கள் எனக்கு பிரயோஜனமாயிருந்தன. பல தலைப்புகளில் நீங்கள் எழுதிய ஆக்கங்களில் இருந்து அநேக வேதசத்தியங்களைத் தெளிவாக அறிந்துகொண்டேன். அவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பயன்பெற்றேன். மீண்டும் உங்கள் பத்திரிகையை நான் கடன் வாங்கியவரிடத்திலேயே கொடுக்க வேண்டியிருப்பதால் பத்து ஆண்டுகால இதழ்களையும் எனக்கு அனுப்பிவைப்பீர்களானால் அவற்றைப் பாதுகாத்து அடிக்கடி வாசித்துப் பயனடைய முடியும். உங்கள் பத்திரிகையை வாசித்ததிலிருந்து நான் இதுவரை வாசித்து வந்த சில பத்திரிகைகளை நிறுத்திவிட்டேன். போலிகளைக் கண்டு விலக கர்த்தர் உங்கள் பத்திரிகையைப் பயன்படுத்தினார். என்னுடைய சொந்த மொழியில் இப்படிப்பட்ட தரமான பத்திரிகையைக் கொடுத்த கர்த்தரை நான் துதிக்கிறேன். பலவிதமான சூழ்நிலைகளின் மத்தியில் பிரயாசைப்படுகிற உங்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறேன்.

***- எம். குமார், தமிழ்நாடு***

# நமது புதிய வெளியீடுகள்







அற்புத வரங்கள் இன்று நடைமுறையில் இருகின்றனவா? ஒவ்வொரு கிறிஸ்தவரும் அவற்றை நாடி அலைய வேண்டுமா? என்பது போன்ற பலரையும் குழப்பிவரும் கேள்விகளுக்கு வேதபூர்வமான விளக்கத்தையும், அக்கேள்விகளோடு தொடர்புடைய வேறு முக்கிய அம்சங்களையும் விளக்கும் 170 பக்கங்களைக் கொண்ட நூல் “ஆதி சபையின் அற்புத வரங்கள்”. கிறிஸ்தவர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய நூலிது.

இந்திய மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற ஆணித்தரமான உறுதியோடு வசதிகளைத் துறந்து கப்பலேறி இந்தியாவுக்கு வந்து சுவிசேஷப் பணி புரிந்த ‘நவீன மிஷனரி ஊழியத்தின் தந்தை’ என்று அழைக்கப்படும் வில்லியம் கேரியின் 87 பக்கங்களைக் கொண்ட வாழ்க்கை வரலாறு “வில்லியம் கேரி”.

## கிடைக்குமிடம்:

**இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை**
**22 டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004**
**தொலைபேசி எண்: 0452 –5505810**

**கிருபை இலக்கிய சேவை**
**19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா**

மலர் 12 ஜீலை - செப்டெம்பர் 2006 இதழ் 3

1. ஸ்பர்ஜன் சிந்திய முத்துக்கள்
- உங்கள் சிந்தனைக்கு

2. ‘பிரசங்கிகளின் இளவரசன்’
சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் - ஜெரமி வோக்கர்

3. மனமாற்றம் - (இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு)

4. கிறிஸ்தவக் கோட்பாடுகள்

5. பரிசுத்தவான்களின் விடாமுயற்சி
(Perseverance of the Saints by Calvin Waldon)

6. அனாபாப்திஸ்து இயக்கம்
(திருச்சபை வரலாறு)

7. எண்ணங்கள்!

Terau Print